1 செப்டம்பர் 1994 ரூ. 3.00

www.padippakam.com

ஓட்டுக் கட்சிகளின் ஓட்டாண்டி நிலை

# புதிய ஜனநாயகம்




படிப்பகம்

www.padippakam.com

# கல்விக் கொள்ளைக்கு எதிராக கருத்தரங்கம், முற்றுகைப் போராட்டம்




கல்விக்கான நிதி ஒதுக்கீட்டைக் குறைத்து, ஆரம்பக் கல்விக்கு மூடுவிழா நடத்தி வரும் அரசு, கல்லூரிகளுக்கான கட்டண உயர்வில் தொடங்கி நூலக - ஆய்வுச் சாலைக்கான கட்டண உயர்வு வரை எல்லா வழிகளிலும் பெற்றோர்களிடமிருந்து பணத்தைப் பிடுங்க தனியார் கல்வி நிறுவனங்களோடு போட்டி போட ஆரம்பித்து விட்டது. வருமானத்திற்கு வழியற்ற ஆரம்ப பள்ளிக் கூடங்களுக்கு புரவலர் திட்டம், புளிய மரத் திட்டம் என வழி காட்டியிருக்கிறார் ஜெயா. ஆனாலும் மேட்டுக் குடியினருக்காக அரசினால் நடத்தப்படும் நவோதயா பள்ளிகளுக்கும் ஐ.ஐ.டி. போன்ற தொழில் நுட்பக் கல்லூரிகளுக்கும் அரசின் சலுகைகள் குறைந்து போனதாகத் தெரியவில்லை.

மறுபுறம் அரசாலும் ''மெட்ரிகுலேஷன்'' பள்ளிகளாலும் பரப்பப்படும் ஆங்கில மோகமும் இந்தித் திணிப்பும் நமது காலாச்சார வேர்களைச் செல்லரிக்கச் செய்கின்றன. இப்படி மக்களை அடிமைகளாக்கும் முட்டாளாக்கும் சுழலை எதிர்க்காது, ஆளுங்கட்சிகளோடு எதிர்க் கட்சிகளும் ''69 சதவீத இட ஒதுக்கீட்டை'' கல்வி வேலை வாய்ப்புப் பிரச்னைகளைத் தீர்க்கும் மந்திரக் கோலாகத் தூக்கிப் பிடித்து மக்களை மயக்குகின்றன.

ஆட்சியாளர்களின் - எதிர்க் கட்சிகளின் இந்த அலட்சியப் போக்கையும் அயோக்கியதனத்தையும் அம்பலப்படுத்தி, மக்கள் கலை இலக்கியக் கழகமும், புரட்சிகர மாவணர்-இளைஞர் முன்னணியும் இணைந்து ஜூலை 16-ம் தேதியன்று கல்வி உரிமை பறிக்கப்படுவதை எதிர்த்து மாநிலம் தழுவிய அளவில் கருத்தரங்கம் ஒன்றையும், அதனைத் தொடர்ந்து ஜூலை 27-ம் தேதியன்று காங்கிரசு - அ.தி.மு.க., எம்.எல்.ஏ., எம்.பி. வீடுகளை முற்றுகையிடும் போராட்டத்தையும் அறிவித்து நடத்தி முடித்துள்ளன.

திட்டமிட்ட நாளில் திருச்சி நகரில் கருத்தரங்கம் ம.க.இ.க., பொருளாளர் தோழர். காளியப்பன் தலைமையில் சிறப்பாக நடந்து முடிந்தது. 500-க்கும் அதிகமான தோழர்களும் பொதுமக்களும் காலை தொடங்கி மாலை வரை களையாதிருந்து தோழர்களின் - சிறப்பு பேச்சாளர்களின் உரையினை ஆர்வத்துடன் கேட்டனர். ம.க.இ.க. மாநில இணைச் செயலாளர் தோழர். கதிரவன், ''சனாதானிகள் தொடங்கி ஏகாதிபத்தியங்களின் எடுபிடிகள் ஆட்சி செய்யும் இன்று வரை, கல்வி என்பது எப்படி ஆள்வோருக்கு பயன் தந்து வந்திருக்கிறது; அது உழைப்போருக்கு மறுக்கப்படுவதோடு, அவர்களை ஒடுக்கும் கருவியாக உள்ளது'' என்பதை விளக்கிப் பேசினார். பு.மா.இ.மு. அமைப்பைச் சேர்ந்த தோழர் வீரபாண்டியன் தனது கள ஆய்வுகளில் இருந்து ''அறிவொளி இயக்கம் - ஒரு மோசடி'' என்பதை அம்பலப்படுத்தினார்.

## கல்வி கேட்பது ராஜ துரோகமா?

ஈரோடு பள்ளிப் பாளையத்தில் முற்றுகை போராட்ட அறிவிப்பு சுவரொட்டிகளை ஒட்டிக் கொண்டிருந்த தோழர்கள் மோகன் மற்றும் தாமரை இருவரும் கடந்த 24.7.94 அன்று கைது செய்யப்பட்டனர். இதை எதிர்த்து தோழர்கள் முழக்கமிடவே, ஆய்வாளர் பொன் சந்திரசேகர் ஆபாசமாகத் திட்டி தாக்கியுமுள்ளார். அதையும் மீறி தோழர்கள் முழக்கமிட, அடங்கிப் போய் வாளை சுருட்டிக் கொண்டார் அந்த 'சூரப்புலி'. தோழர்கள் தற்பொழுது 124 A ராஜ துரோக குற்றச்சாட்டின் கீழ் சேலம் மத்திய சிறைச் சாலையில் அடைக்கப் பட்டுள்ளனர். இதற்கு ஆதாரமாக நான்கு சுவரொட்டிகளை போலீசே தன் கைப்பட எழுதி தயாரித்துள்ளது. அரசின் இச்சனநாயக விரோத போக்கை அம்பலப்படுத்தி பு.மா.இ.மு. அமைப்பினர் தமிழகம் முழுவதும் சுவரொட்டி இயக்கம் எடுத்துள்ளனர்.

மாலை அமர்வில் தஞ்சை பல்கலை கழகத்தைச் சேர்ந்த முனைவர் இராம. சுந்தரம், ''இன்றைய கல்வியின் விஞ்ஞானத்திற்கு எதிரான தன்மையினையும் தமிழ் மொழியின் மீது திணிக்கப்படும் அடிமைத்தனங்களைப்' பற்றியும் உரையாற்றினார். சென்னை மாநிலக் கல்லூரியின் பேராசிரியர் முவைனர். சிவக்குமார் ''சுயநிதிக் கல்லூரிகளின் கொள்கையும் கொள்ளையும்'' என்ற தலைப்பிலும் முனைவர் கோ. கேசவன் ''ஆங்கிலேயர் ஆட்சி தொடங்கி ஆங்கில மோகமும் இந்தி திணிப்பும் அரங்கேறும் விதம்'' குறித்தும் சிறப்புரையாற்றினார்கள்.

கலைக் குழுவினரின் இரு பாடல்கள் சிறப்பான வரவேற்பைப் பெற்றன.

■ 27-ந் தேதியன்று திருச்சி நகரில், காங்கிரசு கட்சியைச் சேர்ந்த எம்.பி. அடைக்கலராசு வீட்டை முற்றுகையிட பேருந்து நிலையத்தில் இருந்து முழக்கமிட்டு ஊர்வலமாகப் புறப்பட்ட தோழர்களை வழியிலேயே மடக்கி கைது செய்தது, போலீசு. இப்போராட்டத்தில் 31 தோழர்கள் கலந்து கொண்டனர். மிகப் பெரிய பணக்காரரான இந்த எம்.பி., தற்பொழுது பினாமி பெயரில் ''மெட்ரிகுலேஷன்'' பள்ளி தொடங்கி கல்விக் கொள்ளையிலும் கால் பதித்துள்ளார்.

■ வேலூரில் பேருந்து நிலையத்தில் இருந்து ஊர்வலமாகச் செல்லத் தயாராக இருந்த தோழர்கள், அங்கேயே போலீசாரால் தடுத்து நிறுத்தப்பட்டனர். உடனே, தோழர்கள் அதே இடத்திலேயே முழக்கமிட்டும் தோழர் குமார் அரசின் கல்விக் கொள்கை(ளை)யை அம்பலப்படுத்தியும் பேசியுள்ளார். கைதை கண்டித்து சுவரொட்டி ஒட்டிய தோழர் ஒருவரையும் பிடித்து உள்ளே தள்ளியது போலீசு. ''நக்சல்பாரிகள்'' என செய்தி கொடுத்து தனிமைப்படுத்த முயன்ற போலீசாரிடம் ''ம.க.இ.க.-வினர்'' எனப் போட வேண்டும் என தோழர்கள் வாதிட்டனர். கைதானவர்களுள் 10 ஆண்கள், 3 பெண்களோடு இரு குழந்தைகளும் அடங்குவர்.

■ மதுரையில் ஊர்வலமாகச் சென்ற 14 தோழர்களை காங். எம்.பி. ராம்பாபு வீட்டை நெருங்கும் முன்பே போலீசார் கைது செய்தனர். அதே இடத்திலேயே தோழர்கள் விண்ணதிர முழக்கமிட்டு மக்களின் கவனத்தை ஈர்த்தனர். பின் தோழர். கதிரவன், ''பணம் இருந்தால் படி; இல்லையேல் மாடு மேய்க்கச் செல்'' எனச் சொல்லாமல் சொல்லும் அரசின் கல்விக் கொள்கையை அம்பலப்படுத்தி உரையாற்றினார்.

■ கோவையில் அ.தி.மு.க. எம்.எல்.ஏ. கோவிந்தராசு வீட்டை நோக்கி சென்ற பொழுது, தோழர்கள் மூன்று பேர் கைது செய்யப்பட்டனர்.



படிப்பகம்

www.padippakam.com

புதிய ஜனநாயகம்

மார்க்சிய — லெனினிய அரசியல் ஏடு

ஒன்பதாம் ஆண்டு

18-19

1-31 ஆகஸ்டு '94

உள்நாடு:
தனி இதழ்: ரூ.3.00
ஆண்டு சந்தா: ரூ.72.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 16

முகப்போவியம்: சுரோ

படைப்புகள் அனுப்பவும்
மற்றும்
அனைத்துத் தொடர்புக்கும்
இரா.சண்முகராஜு,
ஆசிரியர், புதிய ஜனநாயகம்,
4, சாமியார் தோட்டம்,
ஆலந்தூர் சாலை,
சைதாப்பேட்டை,
சென்னை - 600 015.

# பங்குச் சந்தை ஊழலறிக்கை: நாடாளுமன்ற முறை நிர்வாணமானது

திருடன் கையில் பெட்டிச் சாவியைத் தருவதே புத்திசாலித்தினமானது என்கிற பாணியில், வங்கி - பங்குச் சந்தை மோசடிகளை மூடிமறைக்கக் கிளம்பியுள்ளது ஆளும் ராவ் கும்பல். உலகமகா ஊழல் - மோசடிப் பேர்வழிகளே வெட்கித் தலைகுனியுமளவுக்கு, வரலாறு காணாத வங்கி - 'பங்குச் சந்தை ஊழலையே பூசிமெழுகியும், குற்றவாளிகளைப் பாதுகாத்து தண்டனையின்றி தப்பிக்க வைத்தும், இதையே அகங்காரத்தோடு நியாயப்படுத்தியும் ராவ் அரசு புது அரசியல் பாரம்பரியம் - பண்பாட்டை நிலைநாட்டியுள்ளது.

பங்குச் சந்தை மோசடியைப் பற்றி விசாரணை நடத்திய கூட்டுப் பாராளுமன்றக் குழு அளித்த அறிக்கையின்பேரில் நடவடிக்கை எடுப்பதாக வாக்களித்த ராவ் அரசு, கடந்த ஆறு மாதங்களாக அதைக் கிடப்பில் போட்டுவிட்டு தற்போதைய மழைக்காலக் கூட்டத்தொடரில் ''செயல் நடவடிக்கை அறிக்கை''யை நாடாளுமன்றத்தில் முன்வைத்துள்ளது. இதை செயல் நடவடிக்கை அறிக்கையானது 15,000 கோடிக்கும் மேலாக விழுங்கப்பட்ட பணம் எங்கே போனது என்பதற்கு எந்தவொரு தடயத்தையும் கூறவில்லை. எதிர்காலத்தில் இப்படியொரு மோசடி நடக்காமலிருக்க எவ்வித உத்திரவாதமும் அளிக்கவில்லை. யாரால், எப்படிக் கொள்ளயடிக்கப்பட்டது, என்ன தண்டனை என்பதைப் பற்றி எதுவும் சொல்லாமல் அறிக்கை மழுப்புகிறது.

குறிப்பாக, பங்குச் சந்தைத் தரகரான அர்சத் மேத்தா, பிரதமர் நரசிம்மராவுக்கு ஒரு கோடி ரூபாய் ''நன்கொடை''யாகக் கொடுத்த விவகாரம், பிரதமரின் மகன் பிரபாகர் ராவின் ''கோல்டு ஸ்டார்'' நிறுவனத்துக்கு பங்குச் சந்தை தரகர் ஹிதேன் தலால் கொடுத்த ரூ.2 கோடி லஞ்சம், ரிசர்வ் வங்கி கவர்னர் வெங்கிட ரமணனின் பங்கு, அரசுத்துறை நிறுவனங்களின் பங்குகளை விற்றுக் கொள்ளையடித்த உயரதிகாரிகள்; வெளிநாட்டு வங்கிகளின் மோசடி முதலானவற்றைப் பற்றி அரசின் நடவடிக்கை அறிக்கை திட்டவட்டமாக குற்றம் சாட்டாமல் நழுவிக் கொள்கிறது.

எல்லாவற்றுக்கும் மேலாக, அரசு நிதியை எடுத்து பங்குச் சந்தையில் சூதாடி ஏப்பம் விட்ட மத்திய மந்திரி சங்கரானந்த், ராமேஷ்வர் தாக்கூர் மற்றும் இம்மாபெரும் மோசடிக்குத் தார்மீகப் பொறுப்பேற்க வேண்டிய நிதியமைச்சர் மன்மோகன் சிங் ஆகியோர் எந்தக் குற்றமும் செய்யவில்லை என்று நியாயப்படுத்துகிறது. மொத்தத்தில், இந்திய வங்கி-பங்குச் சந்தை அமைப்பு முறையின் தவறுகள் - பலவீனங்கள் காரணமாகவே இம் மோசடி நடந்துவிட்டதாகப் பழிபோட்டுவிட்டு, கோடி கோடியாய்க் கொள்ளையடித்த குற்றவாளிகளைத் தண்டனையிலிருந்து தப்பிக்க வைத்துள்ளது ராவ் கும்பல். ஈராண்டுகளுக்கு முன்பு பங்கு சந்தை மோசடி அம்பலமாகி அதை மத்திய புலனாய்வுத் துறை விசாரித்த போது அதற்கு நெருக்கடிகளைக் கொடுத்தும், அதன் இணை இயக்குனர் மாதவனை நிர்பந்தித்து ஓய்வுபெறச் செய்தும் ஊழலை மூடி மறைத்த ராவ் கும்பல், இன்று நாடாளுமன்ற பெரும்பான்மையைக் கொண்டு ஊழலை நியாயப்படுத்தும் கயமையின் அரசாக சீரழிந்து கிடக்கிறது.

அரசின் இந்த அறிக்கையை எதிர்த்து அதைத் திரும்பப் பெறக் கோரி நாடாளுமன்றத்தில் கூச்சலிட்ட எதிர்க்கட்சிகள், நாடாளுமன்றக் கமிட்டிகளிலிருந்து விலகியும், குளிர்கால கூட்டத் தொடர் முடியும் வரை சபையைப் புறக்கணிப்பதாகவும் அறிவித்துள்ளன. தனித்தனியே ''தர்ணா'' போராட்டம் நடத்தி 'குடியரசு'த் தலைவரிடம் முறையிட்டுள்ளன. ஆனால் கூட்டுப் பாராளுமன்றக் குழுவின் அறிக்கையே மோசடியானது. 16 மாதங்கள் நடந்த விசாரணையில் பல லட்சங்களை விரயமாக்கி, விருந்துகள் - பரிசுகள் மூலம் எதிர்க்கட்சியினரைச் சரிகட்டி தயாரிக்கப்பட்ட இந்த அறிக்கை, யார் குற்றவாளி என்பதை திட்டவட்டமாக குறிப்பிடவில்லை. பொதுவான கண்டனங்கள், விமர்சனங்கள், பரிந்துரைகளைத் தவிர வேறொன்றும் அந்த அறிக்கையில் இல்லை. அனைத்துக் கட்சிப் பிரமுகர்களும் இம் மோசடியில் ஆதாயமடைந்துள்ளனர் என்பதே உண்மை.

கடந்த ஈராண்டுகளாக, இம்மோசடிகளுக்கு எதிராக, நாடு தழுவிய எந்தவொரு இயக்கமும் நடத்தாமல் எதிர்க்கட்சிகள் சமரசமாகிப் போய்விட்டன. இவ்வாண்டு இறுதியில் நடைபெற உள்ள சட்டமன்றத் தேர்தலில் இந்த விவகாரத்தை முக்கியத் துருப்புச் சீட்டாகப் பயன்படுத்தும் நோக்கத்துடன்தான் இப்போது இதற்கு சூடேற்றி ராவ் அரசுக்கு நெருக்கடி கொடுக்கின்றன. அதிலும்கூட எதிர்க்கட்சிகளிடையே ஒற்றுமையும் ஒருங்கிணைந்த கண்ணோட்டமும் இல்லாமல் பிளவுபட்டு நிற்கின்றன. இதைச் சாதகமாக்கிக் கொண்டு, பீற்றிக் கொள்ளப்படும் நாடாளுமன்ற ஜனநாயகத்தையே கேலிக்கூத்தாக்கிறது, ராவ் கும்பல்.

எதிர்க்கட்சிகள் அவையைப் புறக்கணிப்பதையும் ராவ் அரசு தனது பிடிவாதத்தையும் கைவிடவேண்டும்; இல்லையேல் நாடாளுமன்ற ஆட்சிமுறை - அரசியல் அமைப்பின் மீதே மக்கள் நம்பிக்கை இழந்து போய்விடுவார்கள் என்று முதலாளித்துவ மூதறிஞர்கள் ஒப்பாரி வைக்கிறார்கள். மீண்டும் ரகசிய பேரங்கள் - சமரசப் பேச்சுவார்த்தைகள் மூலம் எதிர்க்கட்சியினரைச் சரிகட்ட காங்கிரசுப் பெருச்சாளிகள் முயற்சிக்கின்றனர். ஆனால் ராஜீவ் கும்பலின் போபார்ஸ் ஊழலிலிருந்து வங்கி - பங்குச் சந்தை மோசடி மற்றும் இப்போதைய சர்க்கரை ஊழலவரை நாடாளுமன்ற அமைப்பு முறையால் எந்தவொரு அரசு கிரிமினல் குற்றவாளியையும் தண்டிக்க முடியவில்லை. லஞ்ச ஊழல் - அதிகார முறைகேடுகளால் நாட்டின் ஒட்டு மொத்த அரசியல் கட்டுமானமே உருக்குலைந்து கிடப்பதோடு, ஒட்டுக் கோவணத்தையும் இழந்து நிர்வாணமாக நிற்கிறது.

படிப்பகம்

www.padippakam.com

# ஓட்டுக் கட்சிகளின் ஓட்டாண்டி நிலை

**இன்று எந்தக் கட்சியும் நாடு எதிர் கொண்டுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வாக ஒரு இயக்கத்தைக் கட்டியமைக்க முடியவில்லை. அரசியல் அரங்கில் ஒரு வெற்றிடமும் நெருக்கடியுமே நிலவுகிறது.**

மூன்றாண்டுகளுக்கு முன்பு நாடாளுமன்றத்தில் சிறுபான்மையாக இருந்த காங்கிரசு கட்சி, இப்போது எண்ணிக்கை அளவில் பெரும்பான்மையாகி பதவியில் தொடர்ந்து நீடிப்பது ஒரு சாதனையாகி விட்டது. பிராந்திய பாசிச கட்சியான அ.தி.மு.க. வானுயர ''கட் அவுட்'' களுடன் தமது அரசின் 'சாதனை'களை விளக்கி சுயவிளம்பர விழாக்கள் நடத்தும் போது, நாட்டை ஆளும் தேசியக் கட்சியான காங்கிரசு மட்டும் சும்மா இருக்குமா?

மாநாட்டுக்குத் திரண்டுவரும் மக்களின் வசதிக்காக 1000 சிறப்பு ரயில்கள் - 5000 பேருந்துகள்; கூட்டத்திற்கு வருவோர்க்கு தினசரிப் படியாக ரூ.25; இதுதவிர இலவச உணவு; 300 அடி உயரத்தில் குண்டு துளைக்காத மேடை - இப்படி கடந்த ஜூலை மத்தியில், டெல்லி செங்கோட்டை மைதானத்தில் நடந்த ராவ் அரசின் மூன்றாண்டு சாதனை விளக்கப் பேரணி - பொதுக்கூட்டத்துக்கு 10 கோடி ரூபாய்க்கும் மேலாக வாரியிறைக்கப்பட்டது. 10 லட்சத்துக்கும் மேலாக மக்கள் திரளுவார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டது. இந்நிகழ்ச்சியை ''ஒளிநாடா'' படமெடுக்க ''ஜீ - டி.வி'' தனது புகைப்படக் கருவிகளுடன் காத்திருந்தது.

ஆனால் அத்தனையும் புஸ்வானமாகி விட்டது. இம் 'மாபெரும்' பொதுக் கூட்டத்துக்கு ஒரு லட்சம் பேர் கூடத் திரளவில்லை. டெல்லி வாழ் மக்களில் ஆயிரம் பேர் கூட வரவில்லை. காலி மைதானத்தைப் பார்த்து காங்கிரசு கோமாளிகள் உரையாற்றினர். ''இது இந்த நூற்றாண்டின் மிகப் பெரிய கேலிக் கூத்து'' என்று வெளிப்படையாகவே ஒப்புக் கொண்டுள்ளார், பேரணி - பொதுக் கூட்ட அமைப்பாளரான ஜிதேந்திர பிரசாத்.

பாசிச இந்திரா - ராஜீவ் காலத்திலேயே இது போன்ற அவமானகரமான நிகழ்ச்சிகள் நடந்துள்ள போதிலும், இப்போதைய நிலைமையைக் கண்டு காங்கிரசு பெருச்சாளிகள் பீதியில் உறைந்து போயுள்ளனர். அண்மைக் காலமாக காங்கிரசின் எந்தவொரு பேரணி-பொதுக் கூட்டத்திற்கும் உற்சாகமாக மக்கள் திரளுவதில்லை. ராஜீவுக்குப் பிறகு மக்களைக் கவர்ந்திழுக்கும் கவர்ச்சிவாத தலைவர்களும் இல்லை. இந்தி பேசும் வட மாநிலங்களில் சமீபத்திய இடைத் தேர்தலில் வழக்கமாகக் கிடைக்கும் ஓட்டுக்களும் குறைந்து போய், செல்வாக்கிழந்து நிற்கிறது. காங்கிரசுக்கு கை கொடுத்து வந்த தென் மாநிலங்களும் இப்போது இழுபறி நிலைக்குச் சரிந்து விட்டன. தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா, ஆந்திரா மட்டுமின்றி வடக்கே ஒரிசா, பீகார், மே.வங்கம், குஜராத் மாநிலங்களில் அடுத்து வரும் தேர்தல்களில் காங்கிரசு வெற்றி பெறுமா என்பது கேள்விக்குறியாகிவிட்டது.

கடந்த ஜூன் 10-ம் தேதியன்று டெல்லி தல்கதோரா அரங்கில் கோலாகலமாக நடந்த காங்கிரசு கட்சியின் மாநாடு, கட்சிக்கு உயிரூட்டவுமில்லை. நாடு எதிர்கொண்டுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவுமில்லை. அயோத்தி விவகாரம், காஷ்மீர் விவகாரம், ஊழல் மோசடிகள், விலையேற்றம், வேலையின்மை முதலான எரியும் பிரச்சினைகளைக் கூட தள்ளிப் போட்டு இழுத்தடிப்பதே அதன் கொள்கையாகிவிட்டது. போதாக்குறைக்கு, எல்லா மாநிலங்களிலும் விதிவிலக்கின்றி காங்கிரசுக் கட்சிக்குள் கோஷ்டிச் சண்டைகள் புழுத்து நாறுகிறது.

இத்தனை நாளும் எதிர்க்கட்சிகள் பிளவுபட்டுக் கிடப்பதைச் சாதகமாக்கிக் கொண்டு, குண்டுச் சட்டிக்குள் குதிரை ஓட்டி வந்த காங்கிரசு பெருச்சாளிகள் அடுத்த தேர்தலை எப்படி எதிர்கொள்வது என்று புரியாமல் தவிக்கின்றனர். அதுவரை காங்கிரசு ஒரு கட்சியாக நீடிக்குமா என்பதே கேள்விக்குறியாக உள்ளது.

''இன்று ஐந்து மாநிலங்கள்; நாளை நாடு முழுவதும்'' என்று கடந்த ஆண்டில் ஆரவாரம் செய்த பாரதீய ஜனதா கட்சி, இப்போது மூன்று மாநிலங்களைப் பறிகொடுத்து காற்றுப் பிடுங்கப்பட்ட பலூனாகி விட்டது. வட மாநிலங்களில் அண்மையில் நடந்த இடைத்தேர்தல் முடிவுகளும் கட்சியின் ஆதரவுத் தளம் சுருங்கி விட்டதையே காட்டுகிறது. நாட்டின் ஆகப் பெரும்பான்மையான இந்துக்களின் ஏகப் பிரதிநிதி நாங்கள் தான் என்று மார்தட்டிய பாரதிய ஜனதா, இன்று மேல்சாதி இந்துக்களின் கட்சியாக சுருங்கிவிட்டது. அதன் இந்துவெறி அரசியலை முன்பு போல் அப்பட்டமாக - பகிரங்கமாக எடுத்துவர முடியாத சூழலும் அதை மட்டுமே முன்னிறுத்தி ஆதாயம் தேடமுடியாத சூழலும் உருவாகியிருப்பதால் தற்காலிகமாக அடக்கி வாசிக்கின்றனர்.

காங்கிரசைப் போலவே பாரதிய ஜனதாவின் கூட்டங்களுக்கும் மக்கள் திரளுவதில்லை. அடுத்த பிரதமராகச் சித்தரிக்கப்படும் அத்வானி, கட்டாந்தரையைப் பார்த்து வீராவேசமாகப் பேசுகிறார் என்று மாநிலப் பத்திரிகைகளே கேலி செய்கின்றன. அவரது ''பாரத் பரிக்கிரமா'' பிரச்சார யாத்திரைக்கு மக்களிடம் வரவேற்பின்றி தொடக்கத்திலேயே முடமாகிக் கிடக்கிறது. முன்னணித் தலைவரான முரளி மனோகர் ஜோஷியின் கூட்டங்களுக்கு உ.பி. யில் யாருமே திரவில்லை என்பதால் அவர் தனது பயணத்தை பாதியிலேயே முடித்துக் கொண்டார். பாரதீய ஜனதாவின் தூண்களில் ஒரு

டெல்லி மாநாட்டுக்கு பல கோடிகளை வாரியிரைத்தும் சில ஆயிரம்பேரையே திரட்ட முடிந்தது; காங்கிரசுக்கு பெரிய சரிவு.





படிப்பகம்

www.padippakam.com

வரும், முன்னாள் குவாலியர் மகாராணி யுமான 'ராஜமாதா' சிந்தியா, இப்போது வெளியே தலைகாட்டுவதே இல்லை. அவரும், மைசூர் மன்னரின் வாரிசான சிறீகாந்த் தத்தா உடையாரும் காங்கிரசுக் குத் தாவப் போவதாக வதந்திகள் வரு கின்றன. நிலைமை இப்படியே போனால், பாரதீய ஜனதா மரணப்படுக் கையில் வீழ்ந்து விடும் என்று அதன் தலைவர்களே ஒப்புக் கொள்கின்றனர்.


''இவ்வாண்டின் இறுதியில் பத்து மாநிலங்களுக்கான தேர்தல் நடைபெற உள்ள நிலையில் பாரதீய ஜனதா இப்படி பரிதாபகரமாக நிற்பது துரதிருஷ்டமான து'' என்று முதலாளித்துவ அரசியல் நோக்கர்களே அதைப் பரிகசிக்கின்றனர். குஜராத்தைத் தவிர வேறு எந்த மாநிலத்தி லும் அது ஆட்சிக்கு வருவது சிரமம் தான் என்று மதிப்பிடுகின்றனர்.

கடந்த ஓராண்டு காலமாக பாரதீய ஜன்தா மேற்கொண்ட டங்கல் எதிர்ப்பு-சுதேசி இயக்கம், ஊழல் எதிர்ப்பு பிரச் சார இயக்கம், பாகிஸ்தான் எதிர்ப்பு - தேசப் பாதுகாப்பு இயக்கம் முதலான அனைத்துமே புஸ்வாணமாக் தோல்விய டைந்து விட்டது. இனி எந்தத் திட்டம் - கொள்கையுடன் மக்களைச் சந்திப்பது என்று புரியாமல், அது மீண்டும் அரைத்த மாவையே அரைக்கக் கிளம்பியுள்ளது. ''காட்'' ஒப்பந்தத்தை எதிர்ப்பது- கலாச்சார தேசியம், பொருளாதார இறை யாண் மையைக் காப்பது; காஷ்மீர் விவ காரத்தில் பாகிஸ்தானின் சதிகளை முறிய டித்து நாட்டின் ஐக்கியத்தைக் காப்பது, காங்கிரசின் ஊழல்-கொள்ளையை அம் பலப்படுத்துவது - ஆகியவற்றை ஓர் இயக்கமாக நடத்தி மக்களுக்கு விழிப்பு ணர்வு ஏற்படுத்துவதையே பாரதீய ஜனதா தனது வேலைத்திட்டமாக வகுத் துக் கொண்டுள்ளது. ஆனால் அதிலும் கூட ஒருங்கிணைந்த கண்ணோட்ட மின்றி, தலைவர் களிடையே முரண்பா டும் கோஷ்டிப் பூசலும் தான் தலை தூக்கி நிற்கிறது.

காங்கிரசு, பாரதீய ஜனதாவுக்கு மாற்றான, சமூக நீதிக்கான கட்சி என்று மார்தட்டிக் கொண்ட ஜனதா தளம் இன்று பல கூறுகளாகப் பிளவுபட்டுக் கிடக்கிறது. அடுத்து வரும் தேர்தலில், தற்போது ஆட்சியிலுள்ள பீகார், ஒரிசா மாநிலங்களை மீண்டும் கைப்பற்ற முடி யுமா என்பது கேள்விக்குறி யாகி விட்டது. குறிப்பாக பீகாரில் லல்லு பிரசாத் யாதவ்வின் அரசு சாதிய பலம், கிரிமினல் பலத்தைக் கொண்டு தான் நீடிக்கிறது. கம்யூனிசப் புரட்சியாளர்கள் மீது அரசின் அடக்குமுறை யும் தாழ்த்தப்பட்டோர் மீது சாதிய ஒடுக்குமுறையும் தொடரும் பீகாரில் லல்லு வின் கவர்ச்சிவாத ''ஸ்டண் டு''கள் அனைத்தும் புஸ்வா ணமாகி விட்டன. வி.பி. சிங் கின் இடஒதுக்கீட்டு சாத னைப் பலன்களை சாதிய சக்திகள் அறு வடை செய்து கொண்டு விட்டன. தென் மாநிலங்களில் அக்கட்சிக்கு வேரோ, விழுதோ இல்லாமல் போய் விட்டது. வடமாநிலங்களில் கூட ஒரு சில பகுதிக ளில் மட்டும் பிற்பட்டோரின் கட்சியாக அது சுருங்கி விட்டது.



இதிலிருந்து மாறுபட்ட சமூக நீதிக் கூட்டணியாக கூறிக் கொள்ளும் உ.பி. யின் சமாஜ்வாடி - பகுஜன் சமாஜ் கூட்ட ணியோ அடிப்படையிலேயே சாதியப் பிற்போக்கு கூட்டணி தான். ஆட்சிக்கு வந்த ஆறு மாதங்களுக்குள் அக்கூட்ட ணிக்குள் கோஷ்டிப் பூசலும் குத்து வெட் டும் புழுத்து நாறுகிறது. தாழ்த்தப்பட்ட மக்கள் மீதான சாதிய அடக்குமுறை உ.பி.யில் அதிகரித்துள்ள போதிலும் இச் 'சமூக நீதி' ஆட்சி அவற்றைத் தடுக்க வக்கின்றி கிடக்கிறது. என்.டி.ஆரின் தெலுங்கு தேசக் கட்சியோ மாநில அள வில் கூட காங்கிரசை எதிர்த்துப் போரா டத் திராணியின்றி வாரிசுச் சண்டையில் மூழ்கிக் கிடக்கிறது. தமிழகத்தின் பிழைப் புவாதக் கட்சியான தி.மு.க. பிளவுபட் டுப் போயுள்ள தோடு, பாசிச ஜெயா கும்பலுடன் நேரடியாக மோதுவ தைத் தவிர்த்து இந்தி எதிர்ப்பு, இட ஒதுக் கீடு என்று பக்கவாட் டில் ஒதுங்கிக் கொள் கிறது.




இக்கட்சிகளில் இருந்து வேறுபட்ட, உண்மையான தேசிய மாற்று நாங் கள் தான் என்று பீற் றிக் கொள்ளும் 'இட துசாரி' கூட்ட ணியோ கடந்த 15 ஆண்டுகளாக மே. வங்கம், திரிபுரா, கேரளாவைத் தாண்ட வேயில்லை. மே. வங்கத்தில் 17 ஆண்டு களாகப் பதவியில் நீடிக்கும் 'மார்க் சிஸ்ட்' கட்சி, தரகு முதலாளிகளின் கூட் டாளியாக பாட்டாளிகளின் பகையாளி யாகத்தான் உள்ளது. ''காட்'' ஒப்பந்தத் தால் நாடு மறுகாலனியாவதை எதிர்த்து தொடர்ச்சியாக இயக்கம் நடத்தக் கூடத் திராணியற்றுப் போய்விட்ட 'இடதுசாரி கள்' அடையாளப் பேரணி - கடைய டைப்புடன் முடங்கிக் கிடக்கிறார்கள். இப்போது மீண்டும் ஆகஸ்ட் 15 முதலாக ''காட்'' ஒப்பந்தத்தை எதிர்த்து சடங்குத்த னமாக சட்ட மறுப்பு இயக்கம் நடத்தப் போவாதாக அறிவித்துள்ளனர். ஆனால் மே. வங்க முதல்வர் ஜோதிபாசுவோ, ஒருபுறம் ஏகாதிபத்திய எதிர்ப்பு நாடக மாடிக் கொண்டே மறுபுறம், அன்னிய மூலதனங்களுக்கு சிவப்புக் கம்பளம் விரித்து வரவேற்றுக் கொண்டிருக்கிறார்.

தொழிலாளி வர்க்கத்தின் ஏகப் பிர திநிதியாகக் கூறிக் கொள்ளும் போலிக் கம்யூனிஸ்டுகளால் அண்மைக் காலமாக நாடு தழுவிய எந்தவொரு தொழிலாளர் போராட்டத்தையும் நடத்த முடிய வில்லை. அவர்களது பிழைப்புவாத - தொழிலாளர் விரோத நடவடிக்கைக ளால் வெறுப்புற்று வெளியேறிய தொழி லாளர்கள் கல்கத்தா, பம்பாய் ஆகிய நக ரங்களில் சுயேட்சையான சங்கங்களை நிறுவும் போக்கு அதிகரித்து வருகிறது. மே. வங்கத்திலேயே 'மார்க்சிஸ்ட்' கட்சி யின் தலைமையிலான மாணவர் சங்கங் கள் பேரவைத் தேர்தல்களில் படு தோல்வி அடைந்து வருகின்றன. இவை ஒருபுறமிருக்க, 'மார்க்சிஸ்ட்' கட்சிக்குள் ளேயே கோஷ்டிப் பூசல்கள் புழுத்து நாறு கின்றன. விரைவில் ஒரே கட்சியாக ஐக்கி யப்படப் போவதாகக் கூறிய இடது -



படிப்பகம்

www.padippakam.com

வலது போலிகள் தமக்குள் ஒருங்கிணைந்த கண்ணோட்டமின்றி, தேர்தல் சீர்திருத்த மசோதா, இடஒதுக்கீடு விவகாரம் முதலானவற்றில் மோதிக் கொண்டு நிற்கிறார்கள்.

இத்தனை நாளும் எந்தவொரு ஓட்டுக் கட்சியானாலும் அதற்கென ஒரு அரசியல் - சித்தாந்தம் இருந்தது. அதைக் கொள்கையாக வடித்து மக்களைத் திரட்டி வந்தனர். ஆனால் இன்று அப்படியொரு சித்தாந்தமோ, அரசியலோ இல்லாமல் பொறுக்கி அரசியல் நிலைக்குத் தரம் தாழ்ந்து விட்டனர்.

காங்கிரசின் ''தேசிய ஒருமைப்பாடு'' என்பது பிரிவினைவாத - பயங்கரவாதப் பீதியூட்டி தேசிய இன உரிமைப் போராட்டங்களை ஒடுக்குவது; அரசு பயங்கரவாத அடக்குமுறையை நியாயப் படுத்துவதுதான் என்று மக்களிடம் அம்பலப்பட்டுப் போயுள்ளது. அதன் மதச்சார்பின்மை என்பது இந்து வெறியர்களுடன் கள்ளக் கூட்டு சேர்வது தான் என்பதாகிவிட்டது. நாட்டை உலகவங்கியிடமும் ஏகாதிபத்தியங்களிடமும் மறு அடகு வைப்பதுதான் அதன் அரசியல் - சித்தாந்தமாக உள்ளது.

அதேபோல பாரதீய ஜனாதவின் இந்துத்துவ தேசியம் என்பது ஏகாதிபத்திய எதிர்ப்பு அல்ல; சிறுபான்மை முஸ்லீம்களை நரவேட்டையாடும் இந்து வெறி பாசிசம்தான் என்று நிருபணமாகி விட்டது. ஜனதா தளத்தின் மண்டல் கொள்கை, இடது - வலதுகளின் போலிக் கம்யூனிசம், தி.மு.க. வின் மாநில சுயாட்சி முதலான அனைத்துமே இன்று மக்களிடம் அம்பலப்பட்டு தோற்றுப் போய் விட்டன. இன்னும் சொல்லப்போனால், இக் கொள்கைகள் மீதே இக்கட்சிகளுக்கு நம்பிக்கையில்லாமல் போய் விட்டது. விரக்தியும் சோர்வும்தான் அவர்களிடம் நிலவுகிறது.

20 ஆண்டுகளுக்கு முன்பு பாசிச இந்திராவின் ஆட்சிக்கு எதிராக ஜெயப்பிரகாஷ் நாராயணன் ''மொத்தப் புரட்சி'' எனும் கொள்கையுடன் நாடு தழுவிய ஓர் இயக்கத்தைக் கட்டியமைத்ததைப் போல, இன்று எந்தக் கட்சியோ, தலைவரோ நாடு எதிர் கொண்டுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வாக ஒரு இயக்கத்தைக் கட்டியமைக்க முடியவில்லை. கட்சித் தலைவர்களோ பிழைப்புவாதிகளாக - சந்தர்ப்பவாதிகளாகி விட்டனர். பணபலமும், கிரிமினல் குண்டர் பலமும் சாதிய பலமும் தான் தேர்தல் வெற்றிக்கான அடிப்படைகளாகி விட்டன. மேலும், ஓட்டுக்கட்சிகளின் புதிய தலைமுறையைச் சேர்ந்த அணிகள் கொள்கை அடிப்படையில் அணி திரண்டவர்களுமல்லர்; பயிற்றுவிக்கப்பட்டவர்களுமல்லர். இதனால் எந்தவொரு போராட்டத்தையும் குறிப்பிட்ட வரம்புக்குமேல் முன்னெடுத்



துச் செல்ல ஓட்டுக் கட்சிகளால் இயலவில்லை. கோடி கோடியாய்ச் செலவிட்டு அதி நவீன பிரச்சார சாதனங்களைக் கொண்டு அரசியல் உள்ளடக்கமே இல்லாமல் பிரமிக்க வைக்கும் பிரச்சாரம் செய்வது; கவர்ச்சிவாத ஒளி வெள்ளத்தில் மக்களைக் குருடாக்கி ஓட்டுப் பொறுக்குவது என்பதே அவர்களது உத்தியாக உள்ளது.

மொத்தத்தில் நாட்டில் காணும் பல்வேறு அவலநிலைக்கு என்ன காரணம் என்பதைக் கண்டறியவோ, அவற்றைக் களைவதற்கான வழிமுறைகளை வகுக்கவோ எந்தவொரு ஓட்டுக்கட்சியும் தயாராக இல்லை. நாட்டையும் மக்களையும் தலைமை தாங்கி வழிநடத்திச் செல்லும் தகுதியை இழந்து அவை அரசியல் ஓட்டாண்டிகளாகி விட்டன. சுருக்கமாகச் சொன்னால் அரசியல் அரங்கில் ஒரு வெற்றிடம் தான் நிலவுகிறது. யார் அதை இட்டு நிரப்புவார்கள் என்பதுதான் கேள்வி.

முதலாவதாக, இந்த ஓட்டுக் கட்சிகள் சொல்வது போல, நாடு இன்னமும் சுதந்திரமடையவில்லை. ஏகாதிபத்திய அடிமைத்தனத்திலிருந்து அரசியல், பொருளாதார, சமூக, கலாச்சார விடுதலை பெறவில்லை. ஏகாதிபத்தியங்களை நமது மண்ணிலிருந்து தூக்கி எறிவதற்கு இந்த கட்சிகள் எதுவுமே தலைமையேற்கத் தயாராக இல்லை. இரண்டாவதாக, இந்த ஓட்டுக் கட்சிகள் பலமுறை வாக்களித்தபடி, நாட்டின் நிலப்பிரபுத்துவப் பழைமைப் பிடிப்பைத் தூக்கியெறியவும் இல்லை. நிலச்சீர்திருத்தம், சாதிய - மதவெறி ஒழிப்பு முதலான இவர்களது போலி வாக்குறுதிகள் அனைத்தும் மக்களை ஏய்ப்பதற்கானதாகவே உள்ளன. பல்வேறு இன, மொழி, கலாச்சாரத்தைக் கொண்ட நம் நாட்டில் தேசிய இனங்களுக்கு சுய நிர்ணய உரிமையும், இனச் சிறுபான்மையினருக்கு சுயாட்சி உரிமையும் அளிப்பதைக் கூட இக்கட்சிகள் கடுமையாக எதிர்த்து அடக்குகின்றன. சுருக்கமாகச் சொன்னால், ஏகாதிபத்தியங்களுடன் கூட்டுச் சேர்ந்துள்ள தரகு அதிகார வர்க்க முதலாளிகள், நிலப்பிரபுக்களுக்கு ஊழியம் செய்பவைதான் இந்த ஓட்டுக் கட்சிகள். இந்த ஓட்டுக் கட்சிகள் அனைத்தையும் நிராகரித்தால் கூட ஆளும் வர்க்கங்களின் நலன்களைப் பாதுகாத்து நிற்கிறது அதிகார வர்க்கம், போலீசு, ராணுவம், சிறைச்சாலைகள் அடங்கிய அரசு எந்திரம்.

ஆளும் வர்க்கங்களையும், நாடாளுமன்ற ஜனநாயக முகமூடி அணிந்த அடக்குமுறை அரசு எந்திரத்தையும் எதிர்க்கவல்ல புரட்சிகர அமைப்புகள் மட்டும்தான் இந்த ஓட்டுக்கட்சிகள் அனைத்திற்கும் மாற்றாக முடியும். ஆனால் புரட்சிகர அமைப்புகளைத் தீவிரவாதிகள், சமூக விரோதிகள், கொலைகாரர்கள் என்று பத்திரிகைகளும் ஓட்டுக் கட்சிகளும் தொடர்ந்து அவதூறு செய்து அடக்குகின்றன. நாடாளுமன்ற வெளிநடப்பு, உண்ணாவிரதம், மறியல், தர்ணா, அதிகம் போனால் கடையடைப்பு என்று அறிவித்து, தொண்டர்களைப் பலியிட்டு ஓட்டுப் பொறுக்கும் இவர்கள் தான், நாட்டுக்காகவும் மக்களுக்காகவும் தமது உயிரையே தியாகம் செய்யவும் துணிந்து, பல நாள் தனிமைக் கொட்டடியில் சித்திரவதையால் வாடும் புரட்சியாளர்களைப் பார்த்து இப்படிச் சொல்கிறார்கள்.

ஓட்டுக் கட்சிகளின் இத்தகைய அவதூறு - மாய்மாலங்களுக்கு இனியும் உழைக்கும் மக்கள் ஏமாந்து விட முடியாது. கடந்த 40 ஆண்டுகால அனுபவமே காட்டவில்லையா? இந்த ஓட்டுக் கட்சிகளால் ஒரு பலனுமில்லை. மாறி மாறி மக்கள் ஏமாந்ததுதான் கண்ட பலன். எனவே இவர்கள் அனைவரையும் புறக்கணித்து புரட்சிகர அமைப்புகளின் பின்னே அணி திரள்வதுதான் விடுதலைக்கு வழிவகுக்கும்.

● பாலன்

காங்கிரசின் 'தேசிய ஒருமைப்பாடு', பா.ஜ.க.-வின் 'இந்துத்துவ தேசியம்', ஜனதா தளத்தின் மண்டல் கொள்கை, இடது - வலது போலிக் கம்யூனிஸ்டுகளின் 'முற்போக்கு', தி.மு.க.வின் மாநில சுயாட்சி — அனைத்துமே தோல்வியுற்று அம்பலமாகி அவை பொறுக்கி அரசியலின் நிலைக்குத் தரம் தாழ்ந்து போய்விட்டன.



படிப்பகம்

www.padippakam.com

# நரியைப் பரியாக்கும் நவீன திரிபுவாதி நம்பூதிரி

**ஆளும் வர்க்கக் கட்சிகளிடம் முற்போக்கைத் தேடி கூட்டணி சேரும் போலிக் கம்யூனிஸ்டுத் தலைவர் நம்பூதிரியார், இப்போது மத அடிப்படைவாதிகளிடம் முற்போக்கைத் தேடி அலைகிறார்.**

ஓட்டுக்காக சந்தர்ப்பவாதக் கூட்டணி சேர்வதையே கொள்கையாகக் கொண்ட 'மார்க்சிஸ்ட்' கட்சியின் கடைந்தெடுத்த திரிபுவாதத் தலைவரான நம்பூதிரிபாட், தொடர்ந்து மார்க்சிய சித்தாந்தத்தையே திரித்துப் புரட்டி கொச்சைப்படுத்தி வருகிறார். அவர் தமது கேரள கட்சி நாளேடான "தேசாபிமானி"யில் கடந்த ஜூலை 4-ம் தேதியன்று மத அடிப்படைவாதம் பற்றி அவர் ஒரு கட்டுரை எழுதியுள்ளார் அக்கட்டுரையில் காந்தி, திலகர், மௌலானா ஆசாத் ஆகியோர் மத அடிப்படைவாதிகள் என்றும், அவர்களைப் போலவே முஸ்லீம் லீக் கட்சியிலிருந்து பிரிந்து இந்திய தேசிய லீக் (INL) எனும் புதிய கட்சியைத் துவக்கியுள்ள இப்ராஹிம் சுலைமான் சேட்டும், தடை செய்யப்பட்ட இஸ்லாமிய சேவா சங்கம் (ISS) எனும் அமைப்பைக் கலைத்துவிட்டு மக்கள் ஜனநாயக் கட்சியை (PDP) நிறுவியுள்ள மதானியும் மத அடிப்படைவாதிகள்தான் என்றும் கூறியுள்ளார். மத அடிப்படைவாதம் தீய சக்தி அல்ல; அதன் பயன்பாட்டைப் பொருத்து அது முற்போக்கானதாகவோ, தீயதாகவோ அமையும்; காந்தியும் திலகரும் மத அடிப்படைவாதத்தை நாட்டின் விடுதலைக்காகப் பயன்படுத்தினர். அதுபோல் சுலைமான் சேட்டும், மதானியும் மத அடிப்படைவாதத்தை, இந்து மத வெறி சக்திகளுக்கு எதிராகப் பயன்படுத்துகின்றனர் என்று அக்கட்டுரையில் ஒப்பீடு செய்துள்ளார். மேலும், மத அடிப்படைவாதிகளை தீண்டத்தகாதவர்களாகக் கருதுவதும், அவர்களுடன் எல்லா உறவுகளையும் துண்டித்துக் கொள்வதும் மார்க்சியத்துக்கே எதிரானதாகும் என்றும் சித்தாந்த விளக்கம் அளித்துள்ளார்.

நம்பூதியாரின் புதிய கோட்பாட்டின் படி, மத அடிப்படைவாதிகளிலேயே முற்போக்கு, பிற்போக்கு என இரு பிரிவினர் உள்ளனர். காந்தி, திலகர் போலவே சுலைமான் சேட்டும், மதானியும் முற்போக்கு சக்திகள், அவர்களை நாம் ஆதரிக்க வேண்டும் என்பதே அவரது கோட்பாடு.

முதலாவதாக, காந்தியும் திலகரும் நாட்டு விடுதலைக்குப் பாடுபட்டதாகக் கூறுவதே அயோக்கியத்தனமாகும். வெள்ளையர் ஆட்சியில், இந்து சனாதன முறை சிதைந்ததைக் கண்டு ஆத்திரமடைந்த அவர்கள், மீண்டும் இந்து வருணாசிரமத்தை நிலைநாட்டும் நோக்கத்தோடுதான் பிரிட்டிஷாரை எதிர்த்தனர். சுதந்திரமான மக்கள் ஜனநாயக இந்தியாவை கட்டியமைப்பதை அவர்கள் ஒரு போதும் நோக்கமாகக் கொண்டிருக்கவில்லை. மீண்டும் ராம ராஜ்ஜியத்தை நிறுவும் நோக்கத்தோடு, இந்துக்களை ஒன்று திரட்டுவதற்காகவே அவர்கள் சுதந்திரப் போராட்டத்தைக் கேடாகப் பயன்படுத்திக் கொண்டனர். இதிலே காந்தி 'மிதவாதி'யாகவும் திலகர் 'தீவிரவாதி'யாகவும் இருந்தனர். பம்பாயில் விநாயகர் சதுர்த்தி ஊர்வலம் நடத்தி, இந்துக்களை அணி திரட்டிய திலகர், அதை சாதகமாக்கிக் கொண்டு பிரிட்டிஷாரை எதிர்ப்பதில் தீவிரம் காட்டினார். அவரது வாரிசுகளான இந்துவெறியர்கள் ஆண்டுதோறும் நாடெங்கும் விநாயகர் சதுர்த்தி ஊர்வலம் நடத்தி வருவதோடு, அவற்றை முஸ்லீம்களுக்கு எதிரான மத வெறிக் கலவரங்களாக்கி வருகின்றனர். உண்மைகள் இவ்வாறிருக்க, காந்தி - திலகரிடம் முற்போக்கு அம்சங்கள் இருந்ததாகவும், மத அடிப்படைவாதத்தை நாட்டு விடுதலைக்குப் பயன்படுத்தியதாகவும் நம்பூதிரியார் கூசாமல் புளுகுகிறார்.

மத அடிப்படைவாதிகள் ஆயினும், முற்போக்குப் பாத்திரமாற்றுவதாக சுலைமான் சேட்டையும் மதானியையும் கருத முடியாது. அவர்கள் மத அடிப்படைவாதத்தை தமது அரசியல் நோக்கங்களுக்குப் பயன்படுத்திக் கொள்ளும் வகுப்புவாத சக்திகள்தான். அயோத்தி மசூதி இடிப்புக்குப் பின்னர்தான் சுலைமான் சேட்டும், மதானியும் காங்கிரசு - பாரதீய ஜனதா எதிர்ப்பு நிலைப்பாட்டை எடுத்துள்ளனர். இந்து வெறியர்களின் பங்காளிகளான காங்கிரசு துரோகிகளுடன் முஸ்லீம் லீக் தேர்தல் கூட்டணி சேரக் கூடாது என்கின்றனர். இதன் காரணமாகவே, பதவி சுகத்துக்காக கேரளாவில் காங்கிரசுக் கூட்டணியில் அங்கம் வகிக்கும் தங்கல்-பனட்வாலா கோஷ்டி ஒரு பிரிவாகவும், இதை எதிர்க்கும் சுலைமான் சேட் கோஷ்டி ஒரு பிரிவாகவும் முஸ்லீம் லீக் பிளவுபட்டது. இதேபோல, மக்கள் ஜனநாயகக் கட்சியின் மதானியும் காங்கிரசு - பாரதீய ஜனதாவை எதிர்க்கிறார். "இடதுசாரி"களையும் தேசிய முன்னணியையும் அவர்கள் நட்பு சக்திகளாக அறிவித்துள்ளனர். குறிப்பாக, கேரளாவில் நடந்த குருவாயூர், ஒத்தப்பாலம் இடைத்தேர்தல்களில் அவர்கள் 'இடது முன்னணி'யின் வெற்றிக்கு உதவியுள்ளனர். இந்நிலைமையைச் சாதகமாக்கிக் கொண்டு, அவர்களுடன் தேர்தல் கூட்டணி கட்டும் நோக்கத்தோடுதான் திருவாளர் நம்பூதிரிபாடு, அவர்களிடம் முற்போக்கை கண்டுபிடித்துள்ளார்.

இதில் வேடிக்கை என்னவென்றால், இன்று கேரளாவில் காங்கிரசுடன் கூட்டணி சேர்ந்துள்ள முஸ்லீம் லீகை பிற

## ஆடை அவிழ்ப்பு நடனத்துக்கு போலிகளின் அழைப்பு

பங்கு சந்தை விபரம், கோகோ-கோலா விளம்பரம் என முதலாளித்துவ பொருளாதாரத்திற்கு முட்டுக் கொடுத்த 'மார்க்சிஸ்டு'கள், இப்பொழுது அதனின் சீரழிவிற்கும் மறைமுகமாக சிவப்பு கம்பளம் விரிக்கத் தொடங்கியிருக்கிறார்கள். சமீபத்தில், வங்க மொழியில் வெளி வரும் அக்கட்சியின் நாளேடான "கண சக்தி"யில், "ஓர் இரவுதான்" எனும் காபரே நடனத்துக்கு விளம்பரம் வெளிவந்தது. நடன நங்கையர்களின் பெயர்களோடு, "வயது வந்தவர்களுக்கு மட்டும் தான்" என்ற விபரங்களையும் தாங்கி வந்திருந்தது அவ்விளம்பரம்.

மத்திய கமிட்டி உறுப்பினரும் அந்நாளேட்டின் ஆசிரியருமான; அனில் பிஸ்வாஸ், "ஒரு விளம்பரம் என்ற அளவில்தான் அது வெளியிடப்பட்டுள்ளது" என சமூக பொறுப்பற்ற வக்கிர வியாபாரியைப் போல், அவ்விளம்பரம் மீதான விமர்சனங்களுக்குப் பதில் கூறியுள்ளார். இம் 'மார்க்சிஸ்டு'கள்தான் சில மாதங்களுக்கு முன்பு உலக அழகிப் போட்டியை, "பெண்களை சந்தை சரக்காக்கும் சீரழிவு கலாச்சாரம்" என விமர்சித்து கட்டுரையொன்றை வெளியிட்டனர். இப்பொழுதோ, "சுயத்தை பார்த்து இளித்ததாம் பித்தளை" என்ற கதை தான்.



படிப்பகம்

www.padippakam.com

போக்குவாதிகளாகச் சாடும் நம்பூதிரியார், 1967-ல் இதே முஸ்லீம் லீகுடன் கூட்டணி சேர்ந்து ஆட்சி அமைத்தார். அப்போது கேரளாவில் மட்டும் முஸ்லீம் லீக் முற்போக்கானது என்றார். மேலும் 'மார்க்சிஸ்ட்' கட்சியின் கடந்த கல்கத்தா மாநாட்டில் மத அடிப்படைவாதிகளுடன் எவ்விதக் கூட்டணியும் கிடையாது என்று தீர்மானம் போட்ட அதே நம்பூதியார், இப்போது கூட்டணிக்காக முஸ்லீம் அடிப்படைவாதிகளிடம் முற்போக்கைத் தேடி தமது தீர்மானத்தையே வளைத்து முறுக்குகிறார். சுருக்கமாகச் சொன்னால், முஸ்லீம் அடிப்படைவாதிகள் போலிக் கம்யூனிஸ்டுகளுடன் கூட்டணி சேர்ந்தால் அது முற்போக்கு; காங்கிரசுடன் சேர்ந்தால் அது பிற்போக்கு என்பதே நம்பூதிரியாரின் சந்தர்ப்பவாத சித்தாந்தம்.

நம்பூதிரியாரின் கேடுகெட்ட கோட்பாட்டின்படி பார்த்தால், குரானை விமர்சித்த பெண் எழுத்தாளர் தஸ்லீமா நஸ்ரீனைக் கொலை செய்வோம் என்று ஆர்ப்பாட்டம் செய்யும் வங்கதேச முஸ்லீம் அடிப்படைவாதிகள்கூட முற்போக்கானவர்கள்தான்! ஏனெனில் அவர்கள் ஸ்டார் டி.வி. முதலான ஏகாதிபத்திய சீரழிவுக்கு எதிராக ஒருபுறம் போராடுகின்றனர். அதேபோல இந்துவெறி ஆர்.எஸ்.எஸ். - பாரதீய ஜனதாவும் முற்போக்கு சக்திகளாகிவிடுவர். ஏனெனில் அவர்கள்



ஏகாதிபத்தியங்களுக்கு எதிராக 'சுதேசி இயக்கம்' நடத்தியுள்ளனர்! - இதுதான் முதுபெரும் போலி கம்யூனிஸ்டு தலைவரின் சித்தாந்த யோக்கியதை!

நம்பூதிரியாரின் இக்கோமாளித்தனமான கோட்பாட்டைக் கண்டு 'மார்க்சிஸ்ட்' கட்சிக்குள்ளும், காந்தியை இழிவுபடுத்திவிட்டதாகக் கூறி கட்சிக்கு வெளியிலும் எதிர்ப்புகள் பெருகத் தொடங்கின. உடனே நம்பூதிரியார், நான் அப்படிச் சொல்லவில்லை; இப்படிப் புரிந்துக் கொள்ளக் கூடாது என்று மழுப்பத் தொடங்கினார். ஆனால் அண்மையில் கூடிய கேரள 'மார்க்சிஸ்ட்' கட்சியின் மாநிலக் கமிட்டியும் பொதுச் செயலாளர் சுர்ஜித்தும், நம்பூதிரியாரின் சந்தர்ப்பவாதக் கோட்பாட்டை மறுத்து கண்டனமும் தெரிவித்துள்ளனர். அதன் பிறகு நம்பூதிரியார், கட்சித் தலைவர்களைக் கலந்தாலோசிக்காமல் முக்கியமான பிரச்சினை குறித்து இப்படி கட்டுரை எழுதியதற்காக வருத்தம் தெரிவித்துள்ளார்.

இது ஒருபுறமிருக்க, 'தேசப்பிதா' காந்தியை மத அடிப்படைவாதியாகச் சித்தரித்து இழிவு படுத்திவிட்டதாக காங்கிரசுப் பெருச்சாளிகள் பெருங்கூச்சல் போடுகின்றனர். ஏற்கனவே காந்தியின் துரோகங்கள் அம்பலப்பட்டு, நாட்டு மக்களிடம் செல்லாக் காசாகிவிட்ட நிலையில் புதிதாக காந்தியை இழிவுபடுத்த ஒன்றுமில்லை. காந்தியைக் காட்டி இனியும் வியாபாரம் செய்ய முடியாத ஆதங்கத்தினாலேயே காங்கிரசு துரோகிகள் இப்படிக் கூப்பாடு போடுகின்றனர். நம்பூதிரியாரின் கட்டுரையால் காந்தி இழிவுபடுத்தப்பட்டோரோ, இல்லையோ; தனது கேடுகெட்ட கோட்பாட்டினால் நம்பூதிரியார் கடைந்தெடுத்த சந்தர்ப்பவாதியாக மீண்டும் இழிந்து நிறகிறார் என்பது மட்டும் உண்மை.

● குமார்

# பாசிச ஜெயாவின் 'அமைதிப் பூங்கா'வில் பெருகும் போலீசின் கொலை - 'கற்பழிப்பு'

காட்டு மிருகங்களை விட போலீசு மிருகங்கள் கேவலமானவர்கள் என்பது கோவை-சின்னாம்பதி பழங்குடி மக்களின் பாமரத்தனமான சிந்தனையிலும் பதிந்து விட்டது. கடந்த ஜூன் மாதம் 11-ந் தேதி சந்தன கடத்தல் வீரப்பன் கும்பலைத் தேடிச் சென்ற கர்நாடக, தமிழக போலீசு மிருகங்கள் சுமார் 80 பேர் சின்னாம்பதி மக்களைக் கடித்துக் குதறியுள்ளன. பகலில் "சோதனை" என்கிற பெயரில் வீடு வீடாகப் புகுந்து தாக்கி ஆண்களைக் கைது செய்யவே பலர் பயந்து ஓடி தலைமறைவானார்கள். கைது செய்தவர்களைச் சித்திரவதை செய்து தேடுதல் வேட்டைக்கு உடன் அழைத்துச் சென்று வேறு கிராமத்தில் தங்க வைத்தனர். கிராமத்தவரை மட்டும் மிரட்டி அங்கேயே தங்க வைத்து விட்டு சின்னாம்பதி திரும்பிய போலீசு மிருகங்கள் இரவில் ஊரின் மின்சார இணைப்பைத் துண்டித்து விட்டு தனியாக இருந்த பெண்களை கும்பல் கும்பலாக பாலியல் பலாத்காரம் செய்துள்ளன. தனியாக படுத்துறங்கியவர்கள், தண்ணீர் எடுக்கச் சென்ற பெண், ஊர்வழக்கப்படி ஒதுக்குப்புறமாக தனியிடத்தில் இருந்த வீட்டு விலக்கான பெண்கள், மூதாட்டிகள் என வரைமுறையில்லாமல் பலாத்காரப்படுத்தி தமது மிருக வெறியைத் தணித்துக் கொண்டுள்ளன.

சின்னாம்பதி சம்பவம் ஒரு மாதத்திற்கும் மேல் கழிந்த பிறகுதான் பத்திரிகையாளர்களை எட்டியது. ஆனால் தொகுதி (பேரூர்) எம்.எல்.ஏ. கே. பி. ராஜுவுக்கு உடனடியாக செய்தி கிடைத்து, சின்னாம்பதி போய் ஆறுதலும் சொல்லி விட்டு வந்துள்ளார். பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைக்க எடுக்க வேண்டிய முயற்சியை, சம்பவத்தை மூடி மறைப்பதற்கு - இருட்டடிப்பு செய்வதற்கு எடுத்து 'புரட்சித்தலைவி'க்கு ஏற்ற வாரிசு என்பதை நிரூபித்துள்ளார்.

ஜூலை 16-ந் தேதிக்குப் பின்னரே பத்திரிகையாளர்களிலிருந்து அதிகாரிகள் அரசியல்வாதிகள் வரை வந்து விசாரணை நடத்தினர். ஆனாலும் மேலும் சில நாட்கள் தாமதித்தே பலாத்காரப்படுத்தப்பட்ட பெண்களை மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தி ஆதாரம் இல்லை என கைவிரிக்க முயல்கிறது, அதிகார வர்க்க கும்பல். இதுவல்லாமல் அப்பெண்களுக்கு போலீசு மிருகங்கள் கடித்ததால் ஏற்பட்ட காயங்கள் இருந்தும் அதை பல் தடயயியல் சோதனைக்குட்படுத்தி குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க முயலாமல் புறந்தள்ளி விட்டனர். சம்பவம் நடந்த அதிர்ச்சியிலிருந்து இன்னமும் மீளாமலும் மீண்டும் வந்து தாக்குவர்களோ என்ற பயத்தினாலும் உண்மைகளை முழுமையாகச் சொல்லவோ தலைமறைவானவர்கள் வெளிவரவோ தயங்குகின்றனர். வழக்கம் போல் போலீசும், அதிகார வர்க்கமும், ஆளுங்கட்சியும் விசாரணை கண்துடைப்புகள் மூலம் விச



படிப்பகம்

www.padippakam.com

யத்தையே நீர்த்துப் போகச் செய்து விடுவதுதான் நிகழும்.

கேரளாவின் கொல்லங்கோடு காமரத்து செல்லக்குட்டி பாடத்தைச் சேர்ந்த சாலிதீன் (38), வாசுதேவன் (39) ஆகிய (லாரிகளில் பொருட்களை ஏற்றி இறக்கும் கூலித் தொழிலாளர்கள்) இருவரையும் பொள்ளாச்சி, சேத்துமடையில் கைது செய்த தமிழக வனத்துறை அதிகாரிகள் (முஸ்தபா, ஆனந்தராஜ்) சித்திரவதை செய்து கொன்றுள்ளனர். முதலில் சாலிதீனை துப்பாக்கி கட்டையால் 28-5-94 அன்று அடித்தே கொன்ற இம்மிருகங்கள் அவரை வால்பாறை அருகே உள்ள காட்டில் புதைத்தார்களா, எரித்து சாம்பலை ஓடையில் கரைத்தார்களா என்று தெரியவில்லை. புதைத்ததாகவும்; ஒரு ஓடையையே தடுத்து, அம்மண்ணில் எரித்து பின் ஓடையை திறந்து விட்டு சாம்பலையெல்லாம் நீரால் அடித்துச் செல்லும் படி செய்ததாகவும் வந்துள்ள தகவலை வைத்து இன்னமும் ஆய்வு, விசாரணை நாடகம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள், அதிகாரிகள். சாலிதீன் கொலையைப் பார்த்து எதிர்த்ததால் பின்னர் வாசுதேவனையும் அதே முறையில் கொன்று தடயங்களை அழித்தாகவும் கூறப்படுகிறது. இரு குடும்பத்தினரும் பல அதிகாரிகளுக்கு முறையிட்டும் நீதிமன்றத்தில் ''ஹேபியஸ் கார்பஸ்'' மனு போட்டும் காத்திருக்கிறார்கள். மேற்படி அதிகாரிகள், சாட்சியங்களை மிரட்டி வந்ததை துணை மாவட்ட ஆட்சியாளர் கண்டுபிடித்துள்ளார். பலபேர் நேரில் சொன்ன சாட்சிகள், சில கடிதங்கள் உட்பட இக்கொலைக்கு பல ஆதாரங்கள் இருந்தும் குறைந்தபட்சம் அவர்களை ''தற்காலிக வேலைநீக்கம்'' கூட செய்யாமல்தான் மாவட்ட ஆட்சியாளர்கள் விசாரணை நாடகம் மேற்கொள்கின்றனர்.

காடுகளில் சாதாரண மரத்திலிருந்து சந்தன மரம் வரை பெரிய அளவிற்கு கடத்தி விற்பதை ஓர் தொழிலாகவே நடத்தி வரும் வனத்துறை அதிகாரிகள் தமது 'தொழில்' எதிர்ப்பாளர்களை கைது செய்து கொலை செய்வதோ, கற்பழிப்பதோ சாதாரணம். அல்லது ''கேஸ்'' கணக்கு காட்டுவதற்காக வேண்டப்படாதவர்களை இப்படித் தாக்குவதும் அடிக்கடி நிகழும். ஆனால் தற்போது காரணகாரியமே இல்லாமல் எதற்கும் தொடர்பில்லாத அப்பாவி மக்களை தமது காம - கொலை வெறிக்கு இரையாக்குவது அதிகரித்து வருகிறது. போதை மருந்து முதல் பல்வேறு பொருட்களின் கடத்தலுக்கு தனி ஒரு கிரிமினல் கும்பலையே தமக்கு கீழ் வைத்திருக்கும் வனத்துறை அதிகாரிகள், தமக்கிடையேயான அதிகார மோதலுக்குப் பழிவாங்கும் முகமாகக்கூட அப்பாவிகள் மீதான இத்தகைய தாக்குதல்களைப் பொழுது போக்காக செய்கிறார்கள் என்றால் பார்த்துக் கொள்ளுங்கள்.

சந்தன கடத்தல் தடுப்பு நடவடிக்கை, வீரப்பன் தேடுதல் வேட்டை என்று ஏதோ ஒரு சாக்கில் எல்லையோர கிராமங்களிலும் மலைப் பகுதி கிராமங்களிலும் வனத்துறை மற்றும் அதிரடி போலீசுபடை முகாமிட்டு செய்யும் அக்கிரமங்களுக்கு அளவே இல்லை. வீடு புகுந்து பொருட்களை, ஆடு, மாடுகளைக் களவாடுவது; பெண்களைப் பாலியல் வக்கிரத்துக்குட்படுத்துவது; ஆண்களை சித்திரவதைக்குட்படுத்துவது; தேடுதல் வேட்டைக்கு எடுபிடியாகக் கூட்டிச் சென்று ஆண்களை வீரப்பனின் தாக்குதலுக்கு இரையாக்குவது எனப் பலவாறாக தொடரும் தாக்குதல்கள் இப் பகுதிகளில் நிரந்தரமாக்கப்பட்டு வருகின்றன. பழங்குடிமக்கள் மீதான தாக்குதலில் வச்சாத்திக்கு அடுத்து சின்னாம்பதி மட்டும்தான் நமக்குத் தெரிய வந்துள்ளது.

சின்னாம்பதி சம்பவத்தில் போலீசின் ஆய்வு முறைகளும் அவதூறுகளும் தான் மிகக் கொடூரமானதும் சகிக்கவே முடியாததும் ஆகும். பாதிக்கப்பட்ட பெண்களின் நடத்தையை சந்தேகித்தும், முதல்வரின் நிவாரண நிதி வேண்டி பொய் சொல்கிறவர்களா என்றும் போலீசு ஆய்வு செய்கிறதாம். ''தினமலர்'' போன்ற ஊதுகுழல்கள் மூலம் கொச்சையாக இதே கோணத்தில் அவதூறும் பரப்புகிறார்கள். இந்த திமிர் எங்கிருந்து வந்தது இவர்களுக்கு? கள்ளம் - கபடம், சூது - வாது, ஆபாச - சீரழிவுகளுக்கு ஆட்படாமல் பழைய பின் தங்கிய உற்பத்தி முறை அதற்கேற்ற கலாச்சார, சிந்தனா முறையுடன் யதார்த்தமாக வாழ்பவர்கள், பழங்குடி மக்கள். அதனால்தான் மீண்டும் வருவதாக மிரட்டிச் சென்ற அந்த போலீசு மிருகங்களுக்குப் பயந்து விசயத்தை வெளியே சொல்லாமல் குழந்தைத்தனமாக வாய் மூடிக் கொண்டார்கள். ''நடந்ததை கெட்ட கனவாக நினைத்து மறந்து விட்டு பாதிக்கப்பட்ட எங்கள் பெண்டு பிள்ளைகளை ஒதுக்கி விடாமல் சேர்த்துக் கொண்டோம்'' என்று பத்திரிக்கையாளர்களிடம் கூறுகிற இந்த பால் உள்ளங்களா நிவாரண நிதிக்காக சதி செய்யும்?

சதிகார கும்பலே இந்த போலீசும் ஆளும் கும்பலும்தானே? சின்னாம்பதி சம்பவம் அம்பலமான தருணத்தில் கலெக்டர்கள் - போலீசு அதிகாரிகள் மாநாடு நடந்ததால்தானே அதில் போலீசின் கொலை கற்பழிப்புகள் கவலையளிப்பதாக நரித்தனமாகக் கடிந்து கொண்டார் ஜெயலலிதா? குற்றமிழைக்கும் போலீசாரை குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் தண்டிக்கலாம் என ஜெயாவுக்கு ஆலோசனை கூறிய தேவாரத்திற்கு



'கற்பழித்த' கயவர்களை அடையாளங் காட்டச் செல்லும் சின்னாம்பதி பழங்குடி மக்கள்



சாலிதீன்



வாசுதேவன்



படிப்பகம்

www.padippakam.com

# மதுரை போலீசின் காமவெறியாட்டம்

அண்மையில் மதுரை போலீசு மிருகங்களால் திருச்சி, ஜெயங்கொண்டத்தைச் சேர்ந்த இந்திரா (20) என்ற பெண் பாலியல் வக்கிரத்துக்குள்ளாக்கப்பட்டார். தனது காதலன் முத்துராஜுடன் குற்றாலம் சென்று 19-7-94 அன்று இரவு திரும்பினார் இந்திரா. மதுரை பேருந்து நிலையத்தில் ஏட்டு சோலைமுத்து, "கான்ஸ்டபிள்" மீனாட்சி சுந்தரமும் சந்தேகத்தின் பேரில் இருவரையும் விசாரித்து, முத்துராஜுவிடம் இருந்த 2000 ரூபாய் பணத்தைப் பிடுங்கிக் கொண்டு விரட்டியடித்து விட்டு இந்திராவை மட்டும் அழைத்துச் சென்றனர். மருத்துவக் கல்லூரி அருகில் உள்ள விடுதியில் வைத்து பலாத்காரப்படுத்தி, மிரட்டி துரத்தி விட்டனர். முத்துராஜ் தனது வக்கீல் மூலம் புகார் கொடுத்து, வழக்கு பதிவாகி விசாரணை நடந்து வருகிறது. இதில் குற்றம் செய்த போலீசாரை ஒத்த உருவத்தைக் கொண்டவர்கள் பலரை தேடிப்பிடித்து நிறுத்தி அடையாள அணிவகுப்பு நடத்தி பாதிக்கப்பட்ட பெண்ணை மேலும் அவமானப்படுத்திய போலீசுக்கு, அதிகாரிகளுக்கு எதிராக மதுரை மகளிர் அமைப்பினர் போராடினர். இச்சம்பவத்தைக் கண்டித்து மதுரை, மக்கள் கலை இலக்கியக் கழகம் மற்றும் புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணியினர் பரவலாக சுவரொட்டி இயக்கம் எடுத்தனர்.



போலீசு மிருகங்களால் பலாத்காரப்படுத்தப்பட்ட இந்திரா.

இருந்தாலும என்ன? இதை 'மறந்து' அடுத்த சம்பவத்தின் செய்திக்காக உங்கள் காதை தீட்டி வைத்துக் கொள்ளுங்கள். பத்மினி, விஜயா போன்று இந்திராவும் நீதிமன்றப் படிகளில் ஏறி, இறங்கி இளைத்து வேண்டுமானால் போகலாம். அல்லது மானத்தை நிவாரண நிதிக்கு அரசு விலை பேசலாம்! குற்றமிழைத்த போலீசு மிருகங்கள் விசாரணை இழுத்தடிப்புக்குப் பின்னே பாதுகாப்பாக ஒளிந்து கொள்ளும். தமிழக மக்கள் பொறுத்தது போதுமென பொங்கியெழாத வரை இதுவே நிகழும்!

நேர்மை இருந்தால் முதலில் அதன்படி தன்னை தண்டிக்கும்படியல்லவா கூறியிருக்க வேண்டும்? சாத்தானின் வாயிலிருந்தா வேதம்? வீரப்பன் வேட்டை என கர்நாடக - தமிழக எல்லையோர கிராமங்களில் புகுந்து குற்றங்கள் புரிந்த போலீசு குண்டர்களின் தலைவன் தேவாரத்திற்கு அதைவிட மேலாக தூக்கு தண்டனை தான் கொடுக்க வேண்டும். இதே கூட்டத்தில் ஒப்புக்கு போலீசை கடிந்து கொண்டு உளப்பூர்வமாக போலீசை உச்சி குளிர பாராட்டி விட்டு, தொடர்ந்து 'தீவிரவாதிகளை' ஒடுக்க வேண்டும் அரிய பணியாற்ற வேண்டும் என்று கூறியும்; நவீன வசதிகளுக்குத் திட்டங்கள் பல அறிவித்தும் போலீசு துறையை நவீனமாக்கி மேலும் விரிவாக்குவதற்கு மத்திய அரசிடம் நிதி கோரியும் எனப் பலவாறாக தட்டிக் கொடுக்கிறாரே ஜெயலலிதா அவருக்கு என்ன தண்டனை கொடுப்பது?

அண்ணாமலைநகர் பத்மினி பலாத்காரப்படுத்தப்பட்ட சம்பவத்திலிருந்து நடந்தவை அனைத்திலும் பாதிக்கப்பட்ட பெண்கள் மீது 'நடத்தை கெட்டவள்' பழி சுமத்தி நியாயம் தேடுகிற கீழ்த்தரமான வேலையை ஒரு யுக்தியாகக் கடைபிடித்து வருகிறது, போலீசு. கொட்டடிக் கொலையைத் தற்கொலையாகவும் கொல்லப்பட்டவனை கிரிமினலாகவும் சித்தரிப்பது போல் பலாத்காரப்படுத்தப் பட்டவளை விபச்சாரியாகவும் சித்தரித்து வந்ததோடு புதிதாக நிவாரண நிதிக்காக பொய் கூறுபவளாகச் சித்தரிப்பதும் சேர்ந்து கொண்டது. அநுசரி நீதியைத் தராமல் நிவாரண நிதியை மட்டும் தந்து வாயடைக்க முனைந்தது யாருடைய தவறு? அல்லது 'நடத்தை கெட்டவளையும் கிரிமினலையும் பலாத்காரப்படுத்தவும் கொல்லவும் தான் போலீசுக்கு யார் உரிமை கொடுத்தது? போலீசின் கற்பழிப்பு - கொலை - சித்திரவதைகளை போலீசு, அதிகாரிகள், ஆளுங்கட்சியினர் கூட்டு சேர்ந்து மூடிமறைத்தோ கண் துடைப்பு நடவடிக்கை மேற்கொண்டோ வந்தனர். தற்போது அவதூறுகள், திசைதிருப்பல்கள் மூலம் நியாயப்படுத்தவும் தொடங்கி விட்டார்கள் என்பதையே சின்னாம்பதி சம்பவம் காட்டுகிறது.

வருடாவருடம் போலீசின் பணியைப் பாராட்டி பரிசுகளும் பாராட்டுகளும் வழங்கி, தமிழகம் அமைதிப்பூங்கா என்று கூச்சல் போடுவதற்கு மட்டும் ஜெயா தவறுவதில்லை. இது மக்களுக்கு கேலிக்குரியனவாகவும் சினத்தை மூட்டுவனவாகவும் தான் உள்ளது. மாநில எல்லையோர கிராமம் மற்றும் மலைவாழ் மக்கள் தமக்குப் புரியாத இப்போலீசு மிருகங்களின் தாக்குதலைக் கண்டு அலறுகிறார்கள். கடற்கரையோர மக்கள் சிறப்பு காவல்படை, ராணுவ துணைப் படையைச் சேர்ந்த ராட்சத சுறா மீன்களுடன் போராடி - கத்தி கதறிதான் வாழ முடிகிறது; நகரங்கள் - கிராமங்களில் பிற சாதாரண உழைக்கும் மக்கள் கிரிமினல் பிரிவு, சட்ட - ஒழுங்கு பிரிவு போலீசு மிருகங்களின் கொலைவெறி - காமவெறிக்கு இலக்காகிக் கதறி அழவும் எதிர்த்து முழக்கமிடவும் செய்கிறார்கள். அமைதி எங்கே வாழ்கிறது? போலீசின் பல்வேறு பிரிவு குண்டர்களின் கீழ் தமிழகமே சின்னாபின்னப்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கிறதே? தீவிரவாதிகள், பயங்கரவாதிகள், சதிகாரர்கள், சீர்குலைவுவாதிகள் வேறு யாருமல்ல, போலீசு குண்டர்கள் தான். இவர்களால் விளையும் தீங்குகளே தமிழக மக்களின் நிம்மதியை குலைத்திருக்கிறது

கிரிமினல்களுக்குப் பாதுகாப்பாக போலீசும், இப்போலீசு குண்டர்களுக்குப் பாதுகாப்பாக ஜெயாகும்பலும், ஜெயா கும்பலுக்குப் பாதுகாப்பாக இப்போலீசு, கிரிமினல் குண்டர்களும் பின்னிப் பிணைந்து கிடக்கிறார்கள். மக்கள்தான் பாதுகாப்பற்றவர்களாக நிராதரவாக்கப் பட்டுள்ளனர். போலீசு ஆட்சி நடத்தும் ஜெயாகும்பல் தூக்கியெறியப்பட வேண்டும் என்றாலும் பிற ஓட்டுக்கட்சிகளால் எவ்வித மாற்றமும் நிகழ்ந்து விடப் போவதில்லை. இன்று போலீசை கண்டிக்கவும் எதிர்த்துப் போராடவும் செய்கிற இக்கட்சிகள் மிஞ்சிமிஞ்சிப் போனால் சில்லரை சீர்திருத்தங்களைத்தான் செய்யும். சீர்திருத்தம் தீர்வல்ல; அழுகி சீழ்பிடித்து நாறும் மக்கள் விரோத - சட்ட பூர்வ இக் கிரிமினல் கும்பலை, வேண்டாத சதை பிண்டத்தை அதன் பிற அரசு எந்திர உறுப்புகளோடு வெட்டித் தூக்கியெறிவதில்தான் தீர்வடங்கியிருக்கிறது. இதை ஒரு ஆயுதப் போராட்டம் - சமூக மாற்றம் மூலம் புரட்சியாளர்களாலேயே சாதிக்க முடியும். பழங்காலத்து கொடிய மிருகம் "டினோசராக" அவதாரமெடுத்திருக்கும் போலீசை தடவிக் கொடுப்பதில் ஜெயாவுக்கு வாழ்விருக்கிறது! அதைக் கட்டுப்படுத்த "அங்குசம்" தேடுவதிலேயே பிற ஓட்டுக் கட்சிகளின் வாழ்விருக்கிறது! அதை கொன்றொழிப்பதிலேயே மக்களின் வாழ்வு - நிம்மதி உள்ளது!

● சுப்பு



படிப்பகம்

## 'நாகரீக' உலகின் மெத்தனம் ருவாண்டாவின் அவலம்

இரத்த ஆறு ஓடும் ருவாண்டாவில், ஹுடு இன வெறியர்களால் துடிக்கத் துடிக்கக் கொல்லப்பட்டுவரும் சிறுபான்மை டுட்சி இன மக்களின் அவலம். எண்ணெய் கொப்பரையிலிருந்து தப்பிக்க எரியும் அடுப்பில் விழுந்த கதையாகிவிட்டது. ஹுடு இன வெறித் தாக்குதலில் 5 லட்சம் பேர் பலியானதையடுத்து டுட்சி பழங்குடியினர் தான்சானியா, உகாண்டா, ஜாய்ரே ஆகிய அண்டை நாடுகளுக்கு அகதிகளாகத் தப்பியோடினர். ஏற்கனவே வறுமையில் சிக்கித் தவிக்கும் அந்நாடுகளால் அகதிகளுக்கு உரிய நிவாரண உதவிகளைச் செய்ய முடியவில்லை. ஐ.நா. மன்றமோ மேற்கத்திய ஏகாதிபத்தியங்களோ தொடரும் இனப்படுகொலையைத் தடுக்கவோ, நிவாரண உதவிகளைச் செய்யவோ ஒத்துழைக்கவில்லை. இதனால் அகதி முகாம்களிலுள்ள டுட்சி மக்கள் பசி, பட்டினியால் நூற்றுக் கணக்கில் மாண்டனர். குடிநீரோ, சுகாதார வசதியோ இல்லாமல் வெட்ட வெளியில் தவித்த அகதிகளை காலரா நோயும் சேர்ந்து தாக்கியது. கடந்த ஜூலை மாத இறுதியில், ஜாய்ரே நாட்டுக்கு அகதிகளாக வந்த ஒரு லட்சம் பேரில் இதுவரை 15,000-க்கும் மேற்பட்டோர் காலரா நோயினால் மாண்டு போயுள்ளனர். தினமும் ஆயிரக் கணக்கானோர் கொத்துக் கொத்தாக மாள்வதும், அகலமான குழிகளை வெட்டி அவர்களை அள்ளிப் போட்டு புதைப்பதும் அன்றாடம் தொடர்கிறது. உலக வரலாற்றில் இதுவரை காணாத இனிவெறிக் கொடூரமும், அகதிகளின் அவலமும் மயான பூமியாகிவிட்ட ருவாண்டா நாடெங்கும் எதிரொலிக்கிறது.

ஐயாயிரத்துக்கும் மேற்பட்ட ஐ.நா. படைகளும் அதன்பிறகு பிரெஞ்சுப் படைகளும் ருவாண்டாவில் குவிந்துள்ள போதிலும் அவை உருப்படியாக எந்த நடவடிக்கையையும் மேற்கொள்ளவில்லை. உண்மையில், அமைதியை நிலைநாட்டுவது என்ற பெயரில்

**காலரா நோய் தாக்கி ஆயிரக் கணக்கில் மாண்டு போன ருவாண்டா மக்கள்**



தமது மேலாதிக்கத்தை நிலைநாட்டவே ஏகாதிபத்திய படைகள் ருவாண்டாவில் குவிந்துள்ளன. "மூன்று மாதங்களாக இனப் படுகொலை நடந்த போது ஏறெடுத்துப் பார்க்காத நீங்கள் இப்போது ஏன் வருகிறீர்கள்?" என்று டுட்சி இனப்பெண்கள் வீதிகளில் திரண்டு பிரான்சின் ராணுவத் தலையீட்டை எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்துள்ளனர். பசி, பட்டினியாலும் காலரா நோயினாலும் பல்லாயிரக்கணக்கான மக்கள் மாண்டுபோன பிறகு, உடனடியாக விமானத்தின் மூலம் அகதிகளுக்கு உணவு வழங்கப் போவதாக அமெரிக்கா அறிவித்தது. ஆனால் அற்ப அளவுக்கே உணவுப் பொருட்களை அமெரிக்கா வீசியெறிந்தது என்று கூறும் செஞ்சிலுவை சங்கத்தினர், இது வெறும் விளம்பர ஆரவாரத்திற்காகத்தான் செய்யப்பட்டுள்ளது என்று அம்பலப்படுத்துகின்றனர்.

அமைதி, சமாதானம், மனித உரிமை பற்றி வாய் கிழியக் கூப்பாடு போடும் 'நாகரீக' ஏகாதிபத்தியங்களின் யோக்கியதை இதுதான்!

## ஐரோப்பிய முதலாளித்துவத்தின் மீது மக்களின் வெறுப்பு

ஏழத்தாழ 5 ஆண்டுகளுக்கு முன்பு பெர்லின் சுவரைத் தகர்த்து, கம்யூனிசம் வீழ்ந்தது என்று ஏகாதிபத்தியவாதிகள் எக்காளமிட்டனர். முதலாளித்துவம் தான் உன்னதமானது; ஜனநாயகமானது என்று ஓயாமல் கூப்பாடு போட்டனர். ஆனால் முதலாளித்துவ நரகத்தை அனுபவரீதியாக உணர்ந்த கிழக்கு ஐரோப்பிய மக்கள், இதைவிட போலிக் கம்யூனிசம் எவ்வளவோ மேலானது என்ற முடிவுக்கு வந்துவிட்டார்கள்.

ரஷியா மற்றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் போலிக் கம்யூனிசம் வீழ்ச்சி அடைந்த பிறகு, அடுத்த ஈராண்டுகளில் பால்டிக் குடியரசு நாடுகளில் ஒன்றான லித்துவேனியாவில் முன்னாள் போலிக் கம்யூனிஸ்டுகள் வெற்றிபெற்று ஆட்சியைப் பிடித்தனர். அதைத் தொடர்ந்து 1933-ல் போலந்தில் போலிக் கம்யூனிஸ்டுகள் நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றிபெற்று அரசமைத்தனர். அண்மையில் முன்னாள் சோவியத் ஒன்றிய நாடுகளில் ஒன்றான உக்ரைனில் நடந்த தேர்தலில் போலிக் கம்யூனிஸ்டுகள் நாடாளுமன்றத்தில் அதிக இடங்களைக் கைப்பற்றியுள்ளனர். இப்போது கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் ஒன்றான ஹங்கேரியில் நடந்த தேர்தலில் போலி சோசலிஸ்டுகள் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை பெற்று ஆட்சியைப் பிடித்துள்ளனர். முன்னாள் போலிக் கம்யூனிஸ்டுகள் இந்நாட்டில் பெயரை மாற்றிக் கொண்டு சோசலிஸ்டுக் கட்சியாக உள்ளனர்.

இப்போலிக் கம்யூனிஸ்டுகளும் முதலாளித்துத்துடன் சமரசமாகி, நிறுவனமயமாகிவிட்ட இன்னொரு வகை முதலாளித்துவக் கட்சிகள்தான். இக்கட்சிகளின் தேர்தல் வெற்றியால் அந்நாடுகளில் சோசலிசம் முளைவிடப் போவதுமில்லை. எனினும், முதலாளித்துவ கானல் நீரை நம்பியோடிய மக்கள் அதன் வஞ்சகத்தையும் சுரண்டலையும் மிக விரைவிலேயே உணர்ந்து தேர்தலில் முதலாளித்துவ ஆளும் கட்சிகளை வீழ்த்தி தமது வெறுப்பை வெளிப்படுத்தியுள்ளனர்.

இதேபோல, கடந்த ஜூன் முதல் வாரத்தில் மாஸ்டிரிக்ட் உடன்பாட்டின்படி 12 ஐரோப்பிய நாடுகள் ஒன்றிணைந்து நிறுவவுள்ள ஐரோப்பிய சமூகத்திற்கான நாடாளுமன்றத் தேர்தலில் பெரும்பாலான நாடுகளது ஆளும்கட்சிகள் படுதோல்வி அடைந்துள்ளன. குறிப்பாக, பிரிட்டனின் ஆளும் கன்சர்வேடிவ் கட்சி வரலாறு காணாத பெருந்தோல்வியைச் சந்தித்துள்ளது. கிரீஸ், போர்ச்சுகல் நாடுகளில் எதிர்க்கட்சியாக உள்ள போலி சோசலிஸ்டுகள் செல்வாக்கு பெற்றுள்ளனர். ஏகாதிபத்திய உலகின் கோட்டையாகச் சித்தரிக்கப்படும் ஐரோப்பிவிலேயே அம்மக்கள் முத



படிப்பகம்

www.padippakam.com

லாளித்துவத்தின் மீது வெறுப்பும் ஆத்திரமும் கொண்டுள்ளதையே இவை நிரூபித்துக் காட்டுகின்றன.

## கந்தலாகிப் போனது கம்போடிய 'ஜனநாயகம்'

பெருமளவு ஐ.நா. படைகளைக் குவித்தும், 5400 கோடி ரூபாய் அளவுக்குச் செலவிட்டும் கம்போடியாவில் கடந்த மே மாதத்தில் ஒரு மோசடித் தேர்தலை நடத்திய ஏகாதிபத்தியங்கள், அதை ஜனநாயகத்தின் வெற்றி என்று மார்தட்டினார். ஆனால் ஓராண்டுக்குள்ளாகவே அவர்களது போலி ஜனநாயகம் கிழிந்து கந்தலாகிப் போனதோடு, ஆட்சிக் கவிழ்ப்பு - அரசியல் நெருக்கடிக்குள் கம்போடியா சிக்கித் தவிக்கிறது.

வியட்நாமிய ஆக்கிரமிப்பாளர்களின் பொம்மையாட்சிக்கு எதிராக ஆயுதமேந்திப் போராடி வந்த பல்வேறு போராளிக் குழுக்களுடன் ஐ.நா. மன்றம் நடத்திய பேச்சு வார்த்தை - அமைதி ஒப்பந்தத்துக்கு பிறகு கம்போடியாவில் தேர்தல் நடந்தது. ஏகாதிபத்திய விசுவாசியும் பொம்மையாட்சியின் பிரதமருமான ஹுன்சென்னையும் அவரது கம்போடிய மக்கள் கட்சியையும் குறுக்குவழியில் வெற்றி பெறச் செய்ய ஏகாதிபத்தியங்கள் கீழ்த்தரமாக முயன்றன. எதிர்த்தரப்பினர் பிரச்சாரம் செய்ய முடியாமல் அரசுப் படைகள் தாக்கின. இதை அம்பலப்படுத்திய கம்யூனிசப் போராளிகளின் ''கேமர் ரூஜ்'' இயக்கம் இம்மோசடித் தேர்தலைப் புறக்கணித்தது.

தில்லுமுல்லு - மோசடிகளில் ஈடுபட்ட போதிலும் கம்போடிய மக்கள் கட்சி அறுதிப் பெரும்பான்மையைப் பெற முடியவில்லை. முன்னாள் மன்னரும், தேசியவாதியுமான சிகானுக்கின் ''ஃபன்சின்பெக்'' கூட்டணியே அதிக இடங்களைக் கைப்பற்றியது. இருப்பினும் இக்கட்சியும் மூன்றிலிரு பங்கு பெரும்பான்மை பெறாததால், இவ்விரு கட்சிகளும் ஒரு கூட்டணி ஆட்சியை நிறுவின.

இருப்பினும் ஆட்சியதிகாரத்தில் உரிய பங்கு கிடைக்காத ஆத்திரத்தில் கம்போடி மக்கள் கட்சி கலகம் செய்து வந்தது. ''கேமர் ரூஜ்'' கம்யூனிசப் போராளிகளால் நாட்டுக்கு அபாயம் ஏற்பட்டுள்ளதாகக் கூறி அதைத் தடை செய்யக் கோரி வந்தது. ஏனெனில், கூட்டணியிலுள்ள ''ஃபன்சின்பெக்'' கட்சி ஆயுத பலமிக்க அமைப்பு அல்ல. ஆனால் கம்போடிய மக்கள் கட்சியோ நேற்றுவரை பொம்மையாட்சி நடத்தியதால் அதன் பிடியில்தான் அரசுப் படைகள் உள்ளன. ''கேமர் ரூஜை'' தடை செய்துவிட்டால், பின்னர் ''ஃபன்சின்பென்'' கட்சியை தமது ஆயுத பலத்தைக் கொண்டு முடமாக்கி விடலாம் என்று தொடர்ந்து முயற்சித்து வந்தது. ஆனால் சிகானுக்கும், ''ஃபன்சின்பெக்'' கட்சி சார்பில் கூட்டணி அரசில் பிரதமராக உள்ள சிகானுக்கின் மகன் ரணாதீர்த்தும் ''கேமர்ரூஜ்'' இயக்கத்தைத் தடை செய்ய ஒப்புக் கொள்ளாத போதிலும் ஊசலாட்டமாகவே இருந்தனர்.

தமது நோக்கம் நிறைவேறாத ஆத்திரத்தில் கம்போடிய மக்கள் கட்சியின் முன்னாள் பிரதமரான சக்கரபாங் தலைமையிலான கும்பல், கடந்த ஜூலை 2-ம் நாளன்று ஓர் இரகசிய ஆட்சிக் கவிழ்ப்பு நடவடிக்கையில் இறங்கியது. துணை உள்துறை மந்திரி சின்சென், போலீசு தலைமை இயக்குநர் உள்ளிட்ட 200 பேர் கொண்ட இக்கும்பலின் சதித்திட்டம் மெதுவாகக் கசிந்து அம்பலமானதும், வேறுவழியின்றி அரசுப்படைகள் அவர்களைக் கைது செய்து, முன்னணியாளர்களை நாடு கடத்தியது. இச்சதி நடவடிக்கையால், கம்போடிய மக்கள் கட்சியின் துரோகம் நாட்டு மக்களிடம் மீண்டும் அம்பலமாகியது. இருப்பினும், அதிகாரத்தைத் தக்க வைத்துக் கொள்வதற்காக, ''கேமர் ரூஜ்'' போராளிகளால் மீண்டும் ஆட்சிக் கவிழ்ப்பு அபாயம் உள்ளதாக பீதியூட்டிய கம்போடிய மக்கள்



போலி ஜனநாயக மோசடிகளைத் திரைகிழித்து போராடும் கேமர் ரூஜ் இயக்கம்.

கட்சி, ''ஃபன்சின்பெக்'' கட்சிச் சரிகட்டி கடந்த ஜூலை 7-ம் தேதியன்று ''கேமர்ரூஜ்'' இயக்கத்துக்குத் தடை விதித்துள்ளது.

கடைசியில், ஏகாதிபத்தியவாதிகள் எதை எதிர்பார்த்தார்களோ, அது இப்போது நிறைவேறியுள்ளது. ''ஃபன்சின்பெக்'' கட்சி முடக்கி மீண்டும் கம்போடிய மக்கள் கட்சியே ஏகாதிபத்திய ஆதரவுடன் அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொள்ளும் அபாயமே நீடிக்கிறது.

இப்போலி ஜனநாயகக் கேலிக்கூத்தை அம்பலப்படுத்தி வரும் ''கேமர்ரூஜ்'' போராளிகள், தாய்லாந்தை ஒட்டியுள்ள தமது தளப்பிரதேசப் பகுதியில், ஜூலை 11-ம் நாளன்று புதிய இடைக்கால அரசைப் பிரகடனப்படுத்தியுள்ளனர். ''கேமர்ரூஜின்'' தளபதியான தோழர் கியுசம்பன் இவ்வரசின் பிரதமராகப் பொறுப்பேற்றுள்ளார். ''ஏகாதிபத்திய ஆதரவு சதிகார கும்பலின் ஆதிக்கத்தைத் தூக்கியெறியுங்கள்! நாட்டைப் புனரமைக்க ஐக்கியப்பட்டு கிளர்ந்தெழுங்கள்!'' என கம்போடிய மக்களை அறைகூவி அழைத்து, ''கேமர் ரூஜ்'' இயக்கத்தினர் தமது போராட்டப் பாதையில் முன்னேறி வருகின்றனர்.

## பஞ்சாப் பயங்கரவாதப் போலீசின் நாட்டாண்மை

அண்மையில் டெல்லியில் நடந்த பத்திரிகையாளர் நேர்காணலில், ''ஸ்டேட்ஸ்மேன்'' எனும் ஆங்கில நாளேட்டின் விளையாட்டுத் துறை துணை ஆசிரியர் இராகுல் பானர்ஜியும் செய்தியாளர் அபிஜித் தாசும் ''இந்திய ஹாக்கி ஃபெடரேஷனின்'' (IHF) தலைவராக 'ஒரு மனதாக'த் தேர்ந்தெடுக்கப்பட்ட பஞ்சாப் போலீசு அதிகாரி கில்லின் ஆதரவாளர் ஒருவர், கில்லை எதிர்த்துப் போட்டியிட்ட குர்ஃப்ரான்-இ-ஆசாம் என்பவரை கிட்டிப்புல் கூட விளையாடத் தெரியாதவர் எனக் கிண்டலடித்திருந்ததைக்


படிப்பகம்

www.padippakam.com

குறிப்பிட்டு கேள்வி கேட்டுள்ளனர்.

அவ்விரு பத்திரிகையாளர்களையும் பஞ்சாப் போலீசாரும் கில்லின் ஆதரவாளர்களும் அதே இடத்திலேயே வெறி கொண்டு தாக்கியுள்ளனர். அதோடு, பாராளுமன்ற போலீசு நிலையத்திற்கு இழுத்துச் சென்று இருவர் மீதும் பொய்யான புகார் கொடுத்தனர். போலீசு நிலையம் செல்லும் வழியெங்கும் துப்பாக்கி முனையில் மிரட்டியும், மேலும் மேலும் தாக்கியுள்ளனர். இதனால் அபிஜித் தாசுக்கு மூக்கு உடைந்து போக, இராகுல் பானர்ஜிக்கு உடலெங்கும் இரணகாயம் ஏற்பட்டது. இதைத் தொடர்ந்து தில்லி பத்திரிகையாளர்கள் இக் காட்டுமிராண்டித்தனத்தை எதிர்த்துத் தொடர்ச்சியாகப் போராடத் தொடங்கினர். இதனால் அம்பலமாகிப்போன கில், பின் சமரசம் பேசி மன்னிப்பு கேட்டார்.

பயங்கரவாதிகளை ஒடுக்குவதற்காகத் தனக்குக் கொடுக்கப்பட்டுள்ள 'உரிமையினை'ப் பயன்படுத்திக் கொண்டு, பஞ்சாப் போலீசு அம்மாநிலத்திற்கு வெளியேயும் பயங்கரவாத பீதியூட்டி வருவகிறது. இந்த சம்பவம் முதலானதோ, புதிதானதோ அல்ல. உ.பி. மாநிலத்தின் தெராய் பகுதியில் தீவிரவாதிகளைப் பிடிக்க முகாமிட்டுள்ளதுடன், சுற்றுலா வந்த அப்பாவி சீக்கியர்களை சில ஆண்டுகளுக்கு முன் சுட்டுக் கொன்றது. மேற்கு வங்க மாநிலத்தில், அம்மாநில போலீசுக்குத் தெரியாமல் உள்ளே நுழைந்து ஒரே ஆண்டுக்குள் இருமுறை ஆயுத மோதலை நடத்தியுள்ளது. இதனால் ஆத்திரமடைந்த ஜோதிபாசு. மோதலில் ஈடுபட்ட போலீசாரை கைது செய்து காவலில் வைத்தார். அரியானாவும் இதற்கு விதிவிலக்கல்ல. ''கில்லின் ஆதரவாளர்கள் தேர்தலுக்கு முன்பே நிராயுதபாணியாக்கப் படவேண்டும்'' என்ற மைய அரசின் உத்தரவும் ம.பி. முதல்வரே எதிரணி வேட்பாளரை போட்டியிலிருந்து விலகச் சொன்னதும் கில்லின் பயங்கரவாதத்தைப் புரிந்து கொள்ள உதவும்.

## அசாம்: அன்று நெல்லி... இன்று பாரபெட்டா...நாளை?

அசாமில் போடோ தீவிரவாதிகள், பழங்குடியினர் அல்லாத அப்பாவி மக்கள் மீது அண்மையில் நடத்திய கொலை வெறித் தாக்குதலைக் கண்டு நாடே அதிர்ச்சியில் உறைந்து போயுள்ளது. அசாமில் 4 தலைமுறைக்கு முன்பு குடியேறிய வங்காளிகளை (அன்றைய கிழக்கு பாகிஸ்தானிலிருந்து பிழைப்புக்காக வந்தவர்களை) கடந்த ஜூலை மத்தியில் பாரபட்டா மாவட்டத்தில் தொடர்ந்து ஒரு வார காலத்துக்கு கிராமம் கிராமமாகப் புகுந்து தாக்கியும், குடிசைகளைத் தீயிட்டுக் கொளுத்தியும் வெறியாட்டம் போட்டுள்ளனர். இத்தாக்குதலில் நூற்றுக்கும் மேற்பட்டோர் பலியாகியுள்ளனர். இப்பகுதியிலிருந்து 60,000-க்கும் மேற்பட்ட மக்கள் அகதிகளாக வெளியேறியுள்ளனர். மனாஸ் தேசியப் பூங்காவில் தஞ்சமடைந்த அகதிகள் மீதும் போடோ தீவிரவாதிகள் குண்டு வீச்சுத் தாக்குதல் நடத்தி 50-க்கும் மேற்பட்டோரைக் கொன்றொழித்துள்ளனர்.



போடோ தீவிரவாதிகளின் இனவெறித் தாக்குதலுக்கு அஞ்சி அகதிகளாகத் தப்பியோடும் வங்காளிகள்.

போடோ ஒப்பந்தம் கையெழுத்தாகி ஏறத்தாழ ஓராண்டுக்குள் நடக்கும் 4-வது மிகப் பெரிய தாக்குதல் இது. இதற்குமுன் கோக்ராஜ்கர் மாவட்டத்திலும், போங்கைகான் - பிர்னி பகுதியிலும் நடந்த தாக்குதலில், நூற்றுக்கும் மேலானோர் பலியாகியுள்ளனர். பல கிராமங்கள் போடோ தீவிரவாதிகளால் சூறையாடப்பட்டு தீயிட்டுக் கொளுத்தப்பட்டுள்ளன.

அந்நியர்களை வெளியேற்றக் கோரியும், சுயாட்சி உரிமை கோரியும் 1987-ல் தீவிரமடைந்த போடோ பழங்குடியினர் இயக்கம், பின்னர் இந்திய உளவு நிறுவனமான ''ரா'' (RAW) அதை ஊடுருவி சீர்குலைத்த பிறகு சமரச துரோகப் பாதையில் விழுந்தது. துரோகத் தலைமையை எதிர்த்த ஒரு பிரிவினர் போடோ பாதுகாப்புப் படையை நிறுவி இனவெறி பயங்கரவாதப் பாதையில் சென்றனர். தேயிலை எஸ்டேட் முதலாளிகளைக் கடத்திச் சென்று பணயத் தொகை பெறுவது, வங்கிக் கொள்ளைகளில் ஈடுபடுவது, அரசுப் படைகள் மீதும் வங்காளிகள் மீதும் திடீர் தாக்குதல் நடத்துவது என்ற போடோ தீவிரவாதிகளின் நடவடிக்கைகள் காரணமாக அது தடை செய்யப்பட்டுள்ளது.

மறுபுறம், அதன் தலைவர்களுக்கிடையிலான அதிகாரச் சண்டையால் போடோ இயக்கம் பல குழுக்களாகப் பிளவுபட்டுக் கிடக்கிறது. அசாமின் காங்கிரசு முதல்வர் சைக்கியாவுடன் கள்ளக்கூட்டு சேர்ந்துள்ள போடோலாந்து சுயாட்சிக் கவுன்சில் தலைவரான பிரேம்சிங் பார்மா ஒரு கோஷ்டியாகவும், போடோ கட்சியின் செயலாளர் பிஸ்முதியாரி ஒரு கோஷ்டியாகவும் நிற்கின்றனர். போடோ இயக்கத்தில் நிலவும் பிளவு - கோஷ்டிப் பூசலை சாதகமாக்கிக் கொண்டு, பிரேம்சிங் பார்மாவை முன்னிறுத்தி துரோக ஒப்பந்தத்தை முதல்வர் சைக்கியா நடைமுறைப்படுத்தக் கிளம்பினார். தீவிரவாதிகள் கோருகிறபடி வங்காளிகளை வெளியேற்றிவிட்டு போடோக்களை மட்டுமே கொண்ட போடோலாந்தை கொடுத்தால் வங்காளிகளின் ஓட்டு வங்கியை இழக்க நேரிடும் என்பதால் தீவிரவாதிகளை அடக்கி துரோக ஒப்பந்தத்தை திணிக்கவே ஓட்டுக்கட்சிகள் முயலுகின்றன.

பெருமளவு துணை ராணுவப் படைகளைக் குவித்து வேட்டையாடிய போதிலும் தீவிரவாதிகளை முறியடிக்க முடியவில்லை. தெளிவாக எந்த வரையறையும் இல்லாத நிலையில் ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்தவும் முடியவில்லை. போடோ தீவிரவாதிகளது தாக்குதலின் எதிர்விளைவாக பாதிக்கப்படும் வங்காளி முஸ்லீம்கள் இப்போது ஆயுதக் குழுக்களுடன் எதிர்த்தாக்குதல் நடத்துகின்றனர். துணைராணுவப் படைகள் குவிக்கப்பட்டு பதற்ற நிலை சற்று தணிந்திருந்தாலும் நிலைமை இன்னமும் நீறுபூத்த நெருப்பாகவே உள்ளது. பத்தாண்டுகளுக்கு முன்பு நடந்த நெல்லி படு கொலைகளைப் போல, முஸ்லீம்களுக்கு எதிரான வகுப்புவாத இனவெறிக் கலவரம் மூள்வதற்கான அபாயமே நீடிக்கிறது.


படிப்பகம்

www.padippakam.com

# தெலுங்கு தேச வாரிசு போர்

# எம்.ஜி.ஆர். வழியில் என்.டி.ஆர்.

ஆந்திரத்து முன்னாள் முதல்வரும் தெலுங்கு தேசக் கட்சியின் தலைவருமான என்.டி. ராமராவ், லட்சுமி பார்வதியை இரண்டாதாரமாக்கிக் கொண்டது தனிநபர் விவகாரம். ஆனால் பார்வதியை அரசியலில் - கட்டுக்குள் திணித்து தனது வாரிசாக்க முனைவதன் மூலம் அதை பொது பிரச்சினையாக சர்ச்சைக்குரியதாக சந்தியில் நிறுத்திவிட்டார். தமிழகத்தின் எம்.ஜி.ஆருக்கும் ஜெயலலிதாவுக்கும் இடையிலான உறவு திரைப்படத்தோடும் தனிப்பட்ட முறையோடும் நின்றிருந்தால் அது எம்.ஜி.ஆருக்கு மட்டுமே பாதிப்பாக முடிந்திருக்கும். ஆனால் ஜெயலலிதாவை அரசியலில் நுழைத்து வாரிசு என்கிற முறையில் வளர விட்டதால்தான் இன்று தமிழகத்திற்கே ஆபத்தாக முடிந்திருக்கிறது! எம்.ஜி.ஆரையும் என்.டி. ஆரையும் பாசிச கோமாளிகள் என்று கூறியது எவ்வளவு பொருத்தமாக உள்ளது பாருங்கள்?

அரசியல்வாதிகள் தமது மகன், மகள்களையும் உறவினர்களையும் கட்சிக்குள் திணித்து வாரிசாக்குவது தேசிய கட்சி முதல் பிராந்தியக் கட்சி வரை, 'முற்போக்கு' கட்சி முதல் பிற்போக்கு கட்சி வரை நிகழ்கிற சாதாரண நிகழ்வாகிவிட்டது.

நேரு குடும்பம் இதற்கு முன்மொழிய அந்தக் கால சுக்லா, பந்த், கித்வாய், ஆசாத் முதல் சமீப கால கமலபதி திரிபாதி, ஜெகஜீவன் ராம், தேவிலால், பஜன்லால், பன்சிலால், ஃபரூக் அப்துல்லா, சவாண், பண்டாரி, பட்நாயக், சரண்சிங், கருணாகரன், விஜயபாஸ்கர ரெட்டி, ராமராவ், கருணாநிதி, எம்.ஜி.ஆர். முதலானோர் வழிமொழிந்திருப்பது ஊரறிந்த உண்மை. ஆனால் பாசிச கோமாளிகள் இந்த வாரிசு முறையில் தமது ஆசைநாயகிகளைப் புகுத்தியது, புகுத்துவது வரம்பு கடந்தது.

பார்வதியை கட்சியின் பிரச்சார மேடைகளில் முன்னிறுத்திக் காட்டுவதோடு, தனது உடல்நிலை சரியில்லாததால் பார்வதி போன்றவர்கள் பொறுப்பெடுத்துக் கொண்டால், தான் வீட்டில் ஓய்வெடுத்துக் கொண்டே கட்சிப்பணி செய்வேன் என்று பொருள்படும்படியும் பேசியுள்ளார், என்.டி.ஆர். பார்வதி கட்சியின் உள் விவகாரங்கள் அனைத்திலும் தலையிட்டு சில முடிவுகள் எடுத்து நடைமுறைப் படுத்துபவராகவும் மாறிவிட்டார். பார்வதி மூலமே ராமராவை கட்சிக்காரர்கள் சந்திக்க முடிகிறது. பார்வதியின் தூண்டுதலால் கட்சியின் அதிரடி பிரச்சாரகியும் மாநிலங்களவை உறுப்பினருமான ரேணுகா சௌத்ரி அண்மையில் கட்சியை விட்டு நீக்கப்பட்டார்.




தொடக்கத்தில் கட்சிக்குள் தனது மகன்களையும் மருமகன்களையும் வலிந்து திணித்தார், என்.டி.ஆர். காங்கிரசிலிருந்த மருமகன்களை இழுத்து சந்திரபாபு நாயுடுவை கட்சியின் பொதுச் செயலாளராகவும் வெங்கடேஸ்வர ராவை அமைச்சராகவும் ஆக்கினார். மூத்த மருமகனின் சகோதரர் சாம்பசிவராவை சட்ட மன்ற உறுப்பினராக்கினார். தனது மகன்கள் பாலகிருஷ்ணா, ஜெய கிருஷ்ணாவை சினிமாவில் வாரிசாகவும் சினிமா முதலாளிகளாகவும் ஆக்கியதோடு குறிப்பாக பாலகிருஷ்ணாவை தனது அரசியல் வாரிசாக முன்னிறுத்தி வந்தார். ஆனால் இவரது மருமகன்கள் சந்திரபாபு நாயுடுவும் வெங்கடேஸ்வர ராவ்வும்தான் கட்சிக்குள் காலூன்றியதோடு கோஷ்டிகள் கட்டி வாரிசு சண்டையும் நடத்தினர்.

தனது மகன்கள், மருமகன்களுக்கு எதிராக எவர் குறை கூறினாலும் கட்சியில் இருக்க முடியாது என்று தனது வாரிசு (சஞ்சய், ராஜீவ்) திணிப்பில் இந்திரா செய்ததை விஞ்சிவிடும் அளவுக்கு அப்பட்டமான பாசிச - சர்வாதிகார நடைமுறையையே மேற்கொண்டார். இன்று பார்வதி அரசியல் பிரவேசத்தை எதிர்த்ததற்காக ரேணுகா சௌத்ரியை வெளியேற்றியது போல அன்று சந்திரபாபு மீது பல ஆதாரபூர்வமான ஊழல் குற்றச்சாட்டுக்களை வைத்ததற்காக வருவாய்துறை மந்திரி சீனிவாசலு நீக்கப்பட்டார். ஆனால் இதே சந்திரபாபு பின்னாளில் வெங்கடேஸ்வர ராவுடனான வாரிசு சண்டையில் என்.டி.ஆரை முறைத்துக் கொண்டு விலகி நின்றதால் அவர் இருந்த கட்சியின் உயர் கமிட்டியே கலைக்கப்பட்டு பொது செயலாளர் பதவி பறிக்கப்பட்டது. இவர் காங்கிரசுக்கு தாவ நடந்த முனைப்புகளைக் கண்டு பிறகு மீண்டும் ஒப்புக்கு ஒரு பதவி கொடுத்து சமாதானப்படுத்தப்பட்டார். இருந்தாலும் அதிருப்தியாளராக இருக்கும் சந்திரபாபுவை இவரது ஆதரவு பெற்ற ரேணுகா சௌத்ரியை வெளியேற்றிய தன் மூலம் எச்சரிக்கையும் செய்துள்ளார், நவீன விசுவாமித்திரர்.

1992-ல் பதவி பறிக்கப்பட்டு, மட்டந்தட்டப்பட்ட உபேந்திரா வெளியேறிய போதும் சரி, கடந்த ஆண்டு தெலுங்கு தேச எம்.பி.க்கள் 7 பேர் காங்கிரசுக்கு தாவிய போதும் சரி, தற்போது ரேணுகாவை நீக்கியுள்ள போதும் சரி தெலுங்கு தேசக்கட்சிக்கு பெரிய பாதிப்பு எதுவும் இல்லை. ஆனால் எதிர்க்கட்சிகளும் பத்திரிகைகளும்தான் பெரிது படுத்திக் காட்டுகின்றன. சந்திரபாபு, ரேணுகா தலைமையில் தெலுங்கு தேச எம்.எல்.ஏ., எம்.பி.-களை காங்கிரசு தொடர்ந்து பேரம் பேசி வந்தாலும் அவர்கள் கட்சி தாவ தயக்கம் காட்டுகின்றனர். ஏனெனில் பத்திரிகைகளின் கணிப்புபடி கோஷ்டிச் சண்டையில் நாறி, முதல்வர்களை அடிக்கடி மாற்றி ஆட்சி செய்யும் காங்கிரசுக்கு மாற்றாக வரும் தேர்தலில் தெலுங்கு தேசமே ஆட்சியைப் பிடிக்கும் என்ற நம்பிக்கையால் மட்டுமல்ல இன்னமும் மேலோங்கியிருக்கும் என்.டி.ஆரின் புகழ், செல்வாக்கு, ஆளுமை, அதிகாரத்தை பகைத்துக் கொள்ள விரும்பவில்லை. ஆனால் ஒன்றுமட்டும் உண்மை, எம்.ஜி.ஆர். மறைவுக்குப்பின் நடந்ததுபோல என்.டி. ஆர். மறைவுக்குப்பின்னே வாரிசு சண்டை வெடித்து நாற்றமெடுக்கும்.

தனி நபர் புகழ் - கவர்ச்சி சார்ந்த கட்சிகளின் தலைவிதியே இதுதான்! கட்சியின் தொடக்கம், இயக்கம், உயிரோட்டம் எல்லாம் என்.டி.ஆரை மையமாக - மூலமாகக் கொண்டிருப்பதால் அவரை கட்சிக்குள் பகைத்துக் கொள்வது அரசியல் தற்கொலைக்குச் சமமாகவே உள்ளது. கிராமம், மண்டலம், ஜில்லா, மாநில அளவில் கிளைக்குழு,



படிப்பகம்

www.padippakam.com

பொதுக்குழு, செயற்குழு மற்றும் தேர்தல் முறையில் தேர்ந்தெடுக்கப்படும் பொறுப்பாளர்கள் என்ற ஜனநாயக முறைகளெல்லாம் கட்சியின் விதிகளாக எழுத்தளவோடு நிற்கிறது. 1983-ல் விஜயவாடாவில் நடந்த கட்சி மாநாட்டில் தலைவராக என்.டி.ஆரை போட்டியின்றி தேர்ந்தெடுத்ததாகவும் பிற பதவிகளையும் குழுக்களையும் நியமிக்கும் அதிகாரம் அவருக்கு வழங்கப்பட்டதாகவும் அறிவித்துக் கொண்டு என்.டி.ஆரின் சர்வாதிகாரமே எப்பொழுதும் நடக்கிறது. ஆட்சி செய்தபோது நடைமுறைக்கு வாய்ப்பில்லாத கேலிக்குரிய இலவச, கவர்ச்சித் திட்டங்களை அறிவித்தது முதல் கட்சிக்குள் பலரை எளிதாகப் பந்தாடுவது வரை ராமராவின் விருப்பு, வெறுப்புக்குரியதே.

இதில் கேவலம் என்னவென்றால் என்.டி.ஆர். காங்கிரசின் சர்வாதிகாரத்தையும் வாரிசுரிமையையும் எதிர்த்தும் தெலுங்கு தேச மக்களின் இன உணர்வைத் தூண்டியுமே ஆட்சிக்கு வந்தார். ஆந்திர முதல்வர்களையும், மந்திரிகளையும் தாம் விரும்பியபடி இந்திரா டில்லியிலிருந்தே தீர்மானித்து திணித்துக் கொண்டிருந்தார். இதற்கு எதிராக ஜனநாயகப் பூர்வமாக நாமே முதல்வர், மந்திரிகளை தேர்ந்தெடுத்து வெளி மாநிலத்தவரின் ஆதிக்கத்தையும் தெலுங்கர் அல்லாதவர்களின் அவமானப்படுத்தலையும் தடுக்க வேண்டும் என இன வாதம் பேசினார். என்.டி.ஆர். தெலுங்கு தேசம் என்ற கட்சி தொடங்கி ஆட்சியைப் பிடித்ததோடு தொடர்ந்து நேரு - இந்திரா - ராஜீவ் வாரிசு ஆட்சியின் எதிர்ப்பாளராகவும் ஜனநாயகவாதியாகவும் காட்டிக் கொண்டார்.

இதுமட்டுமல்ல, என்.டி.ஆரின் ராமகிருஷ்ணா ஸ்டுடியோ நில ஆக்கிரமிப்பு மோசடி, சந்திரபாபுவின் ஸ்ரீராம் சாகர் நீர்ப்பாசனத் திட்ட ஊழல், விஷ்ணுப்பிரியா நட்சத்திர ஓட்டல் கட்டியதில் மோசடி என என்.டி.ஆர். குடும்பமே ஊழலில் நாறியது. அப்பொழுது வருமான வரி வேட்டை நடத்தப்பட்டதால் ஆத்திரமுற்று பழியை காங்கிரசார் மீதே போட்டு தூய்மையான சன்னியாசியாக நடித்து ஓட்டு வேட்டையாடிவர்தான் இந்நவீன விசுவாமித்திரர். இதேபோல் மக்கள் மற்றும் நக்சல்பாரி போராளிகள் மீது காங்கிரசின் அடக்குமுறைகளைக் கண்டித்து "நக்சலைட்டுகள் தேச பக்தர்கள்" என்று கூறி தாராள - ஜனநாயகவாதியாகவும் கருணையாளராகவும் காட்டிக் கொண்ட என்.டி.ஆர், நேர்மாறாக ஒரு படி மேலே போய்தான் நக்சல்பாரிகளை வேட்டையாடினார். ஒருபுறம் 'ஜனநாயகப்' பாதைக்கு திரும்பும் நக்சல்பாரிகளுக்கு தண்டனை ரத்து, மறுவாழ்வுக்கான இலவச உதவி, சன்மானம் என ஆசைக்காட்டிக் கொண்டே மறுபுறம் அவர்கள் மீது தடா முதலான பயங்கரவாதச் சட்டங்களையும், குரூர சித்திரவதைகளையும், கொலைகளையும் கட்டவிழ்த்துவிட்டார், பாசிச சன்னியாசி.



வெங்கடேஸ்வரராவ், சந்திரபாபு நாயுடு: தெலுங்கு தேசக் கட்சிக்குள் வாரிசு சண்டை நடத்தும் என்.டி.ஆரின் மருமகன்கள்

பழங்குடிகள், தாழ்த்தப்பட்டவர்கள் வாழ்வுக்காக கண்ணீர் சிந்தி நாடகமாடி சில திட்டங்களை அறிவித்த என்.டி.ஆர். அவர்களின் கோரிக்கைக்காகப் போராடியவர்கள் மீது அரசு பயங்கரவாதத்தை ஏவினார். கட்சியிலுள்ள கிரிமினல் - பொறுக்கி கும்பல்களாலும் மக்கள் பாதிப்புக்குள்ளாகி அவதிப்பட்டதுதான் நடந்தது. ஊழல்கள் மற்றும் கவர்ச்சி திட்டங்களால் கஜானா காலியாகி அரசின் அத்தியாவசிய பணிகள் - சேவைகள் புறக்கணிக்கப்பட்டன. வறுமையும் வறட்சியும் பல பகுதிகளுக்குப் பரவிய போதும் காங்கிரசின் "வறட்சி மேளா" நாடகத்தைப் போலவே என்.டி.ஆரும் சில கண் துடைப்பு நடவடிக்கைகள் எடுத்தார். ஆனாலும் காங்கிரசுக்கு மாற்று என்ற முறையிலேயே தொடர்ந்து மக்கள் முதுகிலேறி சவாரி செய்தார், என்.டி. ஆர். இன்றைக்குகூட தேசிய முன்னணியில் ஒட்டிக் கொண்டு காங்கிரசுக்கு எதிராக லாவணியே பாடினார். 'சமூக நீதிக் காவலர்' வி.பி.சிங், 'தமிழினத் தலைவர்' கருணாநிதி முதலானோர் இந்த பாசிச கோமாளிக்கு தேசிய முன்னணியின் தலைவர் பதவி தந்தது மூலம் "அகில இந்திய அந்தஸ்த்து" கொடுத்தது, வெட்கக்கேடு!

> பாசிச கோமாளிகள் எம்.ஜி.ஆரும், என்.டி.ஆரும் கடைபிடித்த கவர்ச்சிவாதம், பொறுக்கி அரசியலின் கலாச்சார வடிவம். இதன் நீட்டிப்பாகவும் இன்னொரு அங்கமாகவும் வெளிப்படுவதுதான் வாரிசு திணிப்பும், வாரிசுக்கான கோஷ்டி சண்டைகளும்.

தரகு அதிகார முதலாளிகள், நிலப்பிரபுக்களின் நலனையும் தனது ஜனநாயக, இன, மொழி ஒடுக்குமுறை பாசிச - குரூர கோமாளித்தனமான ஆட்சி, சர்வாதிகார - சீரழிவு - ஊழல் நடவடிக்கைகளையும் கவர்ச்சி வாதம் (Populism) என்கிற அரண் அமைத்து பாதுகாத்துக் கொள்வதுதான் என்.டி.ஆர்., எம்.ஜி. ஆர். போன்றவர்களின் நடவடிக்கை. சினிமாவினால் கிடைத்த பெயர், புகழ், கவர்ச்சி மட்டுமல்ல "இலவச - அன்பளிப்பு" திட்டங்களின் மூலம் நல்லாட்சி பிரமையையும் வள்ளல் தன்மையையும் உருவாக்கி, இவற்றின் கீழ் கணிசமான அளவு மக்களை வைத்துக் கொள்வதன் மூலம் பாமரத்தனமான சோசலிசத் தோற்றத்தை ஏற்படுத்துவதே பாசிச கோமாளிகள் கடைபிடித்த கவர்ச்சி வாதம். இது பொறுக்கி அரசியலின் கலாச்சார வடிவம். இதன் நீட்டிப்பாகவும் பொறுக்கி அரசியலின் இன்னொரு அங்கமாகவும் வெளிப்படுவதுதான் வாரிசு திணிப்பும், வாரிசுக்கான கோஷ்டி சண்டைகளும். இது நிலபிரபுத்துவ அமைப்பு - அரசியலின் பிரதிபலிப்பாகவும் மிச்சசொச்சமாகவும் விளங்குகிறது.

ஓட்டுக் கட்சிகளிடம் சரியான அரசியல் - பொருளாதார திட்டமோ, பயிற்றுவிக்கப்பட்ட ஊழியர்களோ, அதன் அடிப்படையிலான மக்கள் இயக்கமோ - அமைப்போ இல்லாததால்தான் அவர்களின் அரசியல் ஒட்டாண்டித் தனத்தால் தான் கவர்ச்சி வாதம், வாரிசு திணிப்பு - சண்டை மற்றும் பொறுக்கி அரசியல் வெற்றி பெற முடிகிறது. மாற்றாக அரசியல் மக்களுக்கு சேவை செய்வதாக புரட்சிகர மக்கள் கமிட்டிகளின் மூலம் மாற்றப்படும் பொழுதுதான் அரசியல் ஒரு தொழிலாகவோ, குலத் தொழிலாகவோ கருதி, பொறுக்கி அரசியல்வாதிகள் மோதிக் கொள்ளவும் அடித்துக் கொள்ளவும் வழியில்லாமல் போகும். ● ராசு



படிப்பகம்

www.padippakam.com

வடகொரிய அதிபர் கிம் இல் சுங்:

# ஒரு தேசியவாதியின் மறைவு

**அதிகார வர்க்க ஆட்சிமுறையும் போலிக் கம்யூனிச சீரழிவுகளும் தனிநபர் துதியும் இருந்தபோதிலும் அதிபர் கிம் இல் சுங் ஏகாதிபத்திய எதிர்ப்பு தேசியவாதியாகத் திகழ்ந்தார்.**

கொரிய மக்களின் அன்புக்குரிய தலைவரும் வட கொரியாவின் முதுபெரும் அதிபருமான கிம் இல் சுங், கடந்த ஜூலை 8-ம் நாள் தனது 82-வது வயதில் காலமாகி விட்டார். 40 ஆண்டு கால ஜப்பானிய காலனியாதிக்கத்தையும், அதன் பிறகு அமெரிக்காவின் ஆக்கிரமிப்பையும் முறியடித்து, 1953-ல் வடகொரியாவை விடுதலை செய்த முதுபெரும் போராளி அவர். நாட்டின் முதல் பிரதமராகவும் பின்னர் 1972 முதலாக வடகொரியாவின் அதிபராகவும் பணியாற்றிய கிம் இல் சுங், இறுதிவரை அமெரிக்க ஏகாதிபத்திய எதிர்ப்பிலே உறுதியாக நின்றார்.

இதற்கு முன் பலமுறை அவர் இறந்துவிட்டதாக வதந்திகளையும் பொய்ச் செய்திகளையும் பரப்பி வந்த ஏகாதிபத்தியவாதிகள், இப்போது அவர் மரணமடைந்த பிறகும் கூட ''கம்யூனிச சர்வாதிகாரி'' என்று வெறுப்போடு சாடுகின்றனர். ஆனால், வடகொரிய மக்கள் மட்டுமின்றி, தென் கொரிய மக்களும் தமது அன்புக்குரிய தலைவர் மறைந்துவிட்ட துக்கம் தாளாமல் கதறி அழுகின்றனர். தென் கொரிய பாசிச சர்வாதிகார அரசு விதித்த தடையையும் மீறி, அலையலையாக தென்கொரிய மக்கள் வடகொரியாவுக்கு வந்து அவரது இறுதி ஊர்வலத்தில் பங்கேற்று உள்ளனர்.

1912-ம் ஆண்டு ஏப்ரல் 15-ல் ஒரு ஏழை விவசாயிக் குடும்பத்தில் பிறந்த கிம் இல் சுங் இளமையிலேயே ஜப்பானிய ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டங்களில் ஊக்கமுடன் பங்கேற்றார். அவரது தந்தை கிம் ஹியோங் ஜிக், தேசிய விடுதலை இயக்கத் தலைவர்களில் ஒருவர். தந்தையின் போராட்ட வாழ்க்கையால் உந்தப்பட்ட அவர், கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்து ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டங்களில் ஈடுபட்டபோது, அவரைக் கைது செய்ய ஜப்பானிய ஏகாதிபத்தியவாதிகள் முயற்சித்தனர். எனவே அவர் தலைமறைவாகி ரஷ்யாவுக்குச் சென்று அங்கு சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் வழிகாட்டுதலின் கீழ் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்தினார்.

இரண்டாம் உலகப் போரில் ஜப்பான் தோல்வியுற்று பலவீனமடைந்ததும், அதன் காலனி நாடாக இருந்த கொரியாவில் கம்யூனிஸ்டுகளும் நாட்டுப்பற்று கொண்டோரும் ஒன்றிணைந்து போராடி 1948-ல் அதிகாரத்தைக் கைப்பற்றி கொரியாவை சுதந்திரக் குடியரசாகப் பிரகடனப்படுத்தினர். ஆனால் ஜப்பானின் காலனி நாடுகளைக் கைப்பற்றி அடிமைப்படுத்தும் நோக்கத்தோடு ஓடோடி வந்த அமெரிக்கா, கொரியாவை ஆக்கிரமித்துக் கொண்டது. இந்த அநீதியான ஆக்கிரமிப்புக்கு எதிராக கொரிய கம்யூனிஸ்டுகளும் தேச பக்தர்களும் வீறு கொண்டெழுந்து போராடினார். கொரியாவின் விடுலைக்காக அன்று தோழர் மாவோவின் தலைமையிலான சீன சோசலிசக் குடியரசு தமது படைகளை அனுப்பி உதவியது. இதில் தோழர் மாவோவின் மகன் வீரமரணம் அடைந்தார். 1950-லிருந்து மூன்றாண்டுகள் நீடித்த இந்த யுத்தத்தில் பல்லாயிரக்கணக்கான கொரிய மக்கள் தியாகிகளாயினர்.

ஆனாலும் ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பாளர்களால் விடுதலைப் போராளிகளை வெல்ல முடியவில்லை. கம்யூனிஸ்டுகள் தலைமையில் போராளிகள் முன்னேறினர். எனவே, 1953-ல் ஐ.நா. மன்றம் தலையிட்டு, ஏகாதிபத்தியங்களின் ஆலோசனைப்படி 38-வது அட்சரேகையை மையமாகக் கொண்டு கொரியாவை இரு நாடுகளாகத் துண்டாடியது. அதைத் தொடர்ந்து வட பகுதியில் கம்யூனிஸ்டுகள் தலைமையிலான சோசலிசக் குடியரசும், தெற்கே அமெரிக்க கைப்பாவைகளின் நவகாலனிய பாசிச சர்வாதிகார அரசும் அமைந்தது. வட கொரியாவையும் தென் கொரியாவையும் பிரிக்கும் எல்லையில், 10 மீ. உயரமும் 3 மீ. அகலமும் கொண்ட தடுப்புச் சுவரை எழுப்பிய அமெரிக்கா, தென் கொரிய ராணுவத்துக்கு ஏராளமாக ஆயுத உதவிகள் செய்து எல்லையில் கொண்டு போய் குவித்தது. ஒரே மொழி, பண்பாடு கொண்ட கொரிய மக்கள் கடந்த 40 ஆண்டு காலமாக அமெரிக்கத் தலையீட்டின் காரணமாக இருநாடுகளாகப் பிளவு பட்டு நிற்கிறார்கள்.



வடகொரிய அதிபர் கிம் இல் சுங்

அமெரிக்காவின் நவீன காலனியான தென் கொரியா, பாசிச - ராணுவ சர்வாதிகாரத்தின் பிடியில் சிக்கி சீரழிந்தது. அதே சமயம் வடகொரியா, சுயசார்பான சோசலிச உற்பத்தி முறையைப் பின்பற்றி முன்னேறத் தொடங்கியது. ஆயினும் இத்தகைய சோசலிசப் போக்குகள் சிறிது காலமே நீடித்தன. எந்நேரமும் தென்கொரியா போர் தொடுக்கும் அபாயம் உள்ளதைக் காட்டி, கட்டுப்பாடுகளை விதிக்கத் தொடங்கிய ஆட்சியாளர்கள், நாளடைவில் ரஷிய சோவியத் சமூக ஏகாதிபத்தியவாதிகளின் பாணியிலான அதிகார வர்க்க - ராணுவ கும்பலின் ஆட்சியைப் படிப்படியாகத் திணித்தனர்.

குறிப்பாக 1960-களில் ரஷிய திருத்தல்வாதிகளுக்கு எதிராக சர்வதேச கம்யூனிச இயக்கத்தில் மாபெரும் சித்தாந்தப் போராட்டம் நடந்தபோது, கிம் இல் சுங்கும் வடகொரியத் தொழிலாளர் (கம்யூனிஸ்டு) கட்சியும் அதில் ஊக்கமாகப் பங்கேற்காமல் நடுநிலை வகிப்பதாகக் கூறினர். அமெரிக்க ஆக்கிரமிப்புக்கான அபாயம் சூழ்ந்துள்ள ஒரு சின்னஞ்சிறு சோசலிச நாடு, சித்தாந்தப் போராட்டத்தில் தீர்மானகரமாகப் பங்கேற்க இயலாது என்று அப்போது சிலர் இதை நியாயப்படுத்தினர். இதே காரணத்தைக் காட்டி, சோசலிச ஜனநாயகத்துக்குப் பதிலாக அதிகார வர்க்க ஆட்சிமுறையைப் பின்பற்றும் வடகொரியாவை கறாராக விமர்சிக்கக் கூடாது என்று தாராளவாதமாக அங்கீகரித்தனர். ஆனால் இத்தகைய தவறான போக்குள் எத்தகைய விபரீத விளைவுகளை ஏற்படுத்தும் என்பதற்கு வட கொரியாவே சான்றாக உள்ளது.

சித்தாந்தப் பிரச்சினையில் ஒரு கம்யூனிஸ்டு நடுநிலை வகிக்க முடியாது. உயிராதாரமான இந்த விவகாரத்தில் கிம் இல் சுங்கின் சித்தாந்தப் பலவீனமானது. விளைவில் அவரையும் அவரது கட்சி



படிப்பகம்

www.padippakam.com



கிம் இல் சுங்கின் சிலையின் முன் இறுதி அஞ்சலி செலுத்தும் வடகொரிய மக்கள்

யையும் ஆட்சியையும் சீரழிக்கத் தொடங்கியது. பின்னாளில், சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியைத் திரிபுவாதக் கட்சியாக வரையறுத்த போதிலும், சோவியத் ஒன்றியத்தை சோசலிச நாடாகவே கிம் இல் சுங்கும் அவரது கட்சியினரும் மதிப்பீடு செய்தனர். தொடர்ந்து அதன் இராணுவ, பொருளாதார, அரசு தந்திரத் துறை ஆதரவைச் சார்ந்து நின்றது. இதே காலகட்டத்தில் கொரியாவின் அண்டை நாடான சோசலிச சீனாவில், தோழர் மாவோவின் சிந்தனை மார்க்சிய - லெனினியத்திற்கும் சோசலிசக் கட்டுமானத்திற்கும் உலகப் பாட்டாளி வர்க்கத்துக்கும் மகத்தான புதிய பங்களிப்பை வழங்கியது. அதிகார வர்க்கப் போக்குகளையும், எதிரி வர்க்க சித்தாந்தத்தையும் வீழ்த்தவும், சோசலிச ஜனநாயகத்தைப் பாதுகாத்து வளர்க்கவும், மக்களின் முன்முயற்சியையும் ஆற்றலையும் கட்டவிழ்த்துவிடும் மகத்தான கலாச்சாரப் புரட்சியை தோழர் மாவோ முன்னிருந்து நடத்தினார். அதன் செழுமையான அனுபவங்களைக் கிரகிக்கவோ, பற்றி நிற்கவோ கிம் இல் சுங் முன்வரவில்லை. அறிந்தே அவற்றைப் புறக்கணித்தார்.

ரஷிய, சீன முறைகளுக்கு அப்பாற்பட்டு, தமது மண்ணுக்கேற்ப சோசலிசத்தைக் கட்டி வளர்ப்பதாகக் கூறிய கிம் இல் சுங், இதனை 'சூசே' முறை என்றழைத்தார். ''சூசே'' முறை என்றால் சுயசார்பான சோசலிசம் என்று அதற்கு விளக்கமளித்தார். ஆனால் அவர் நடைமுறைப்படுத்திய சூசே முறையின் கீழ் வடகொரியா, மையப்படுத்தப்பட்ட பொருளாதாரம், அதிகார வர்க்க ஆட்சிமுறை, போலி சோசலிசக் கொள்கைகளைக் கொண்ட ஒரு ரஷிய சார்பு நாடாகத்தான் இருந்தது.

இதர போலிக் கம்யூனிசத் தலைவர்களைப் போலவே கிம் இல் சுங்கும் தனிநபர் வழிபாட்டை அங்கீகரித்து ஆதரித்தார். அவர் உயிருடன் இருக்கும் போதே தலைநகர் பியாங்யாங்கில் பனைமர உயரத்துக்கு அவருக்கு வெண்கலச் சிலை அமைத்தது போன்ற பல நினைவுச் சின்னங்கள் நிறுவப்பட்டன. ஈராண்டுகளுக்கு முன்பு அவரது 80-வது பிறந்த நாள் விழா பல கோடி ரூபாய் செலவில் ஆடம்பரமாகக் கொண்டாடப்பட்டது.

போலிக் கம்யூனிஸ்டுகளின் பாரம்பரியப்படி, கிம் இல் சுங்கும் வாரிசு ஆட்சிமுறையை ஊட்டி வளர்த்தார். அவரது மகன் கிம் ஜாங் இல், அவரது வலது கரமாக அரசு உயர் பொறுப்பில் நியமிக்கப்பட்டதோடு, ''அடுத்த அதிபர்'', ''அன்புக்குரிய தலைவர்'' என்றும் சித்தரிக்கப்பட்டார். கிம் இல் சுங்கின் சகோதரர், அவரது இரண்டாவது மனைவியின் (முதல் மனைவி கொரிய யுத்தத்தில் வீரமரணம் அடைந்தார்) உறவினர்கள் - வாரிசுகள் அரசின் முக்கிய பொறுப்புகளில் நியமிக்கப்பட்டு குடும்ப ஆட்சியே வடகொரியாவில் நீடித்தது. எதிர்பார்த்தபடியே, அவரது மறைவுக்குப் பிறகு அவரது மகன் கிம் ஜாங் இல் அதிபராகியுள்ளார்.

போலி கம்யூனிச சீரழிவுகள் அவரிடம் நீடித்த போதிலும், அமெரிக்க ஏகாதிபத்திய எதிர்ப்பில் உறுதியாக நிற்கும் தேசியவாதியாக இருந்தார். அண்மைக் காலமாக அணு ஆயுதப் பரவல் தடுப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திடுமாறும், அணு உலைகளை சர்வதேசப் பரிசோதனைக்கு அனுமதிக்குமாறும் அமெரிக்கா தொடர்ந்து மிரட்டிய போதிலும் அவர் பணியவோ, சுயாதிபத்திய உரிமையை விட்டுக் கொடுக்கவோ மறுத்தார். ஒருபுறம், ஏகாதிபத்திய எதிர்ப்பு சவடால் அடித்துக் கொண்டே மறுபுறம், ரகசியமான வழிகளில் நாட்டின் சுயாதிபத்தியத்தை ஏகாதிபத்தியங்களின் காலடியில் வைக்கும் இந்திய ஆட்சியாளர்களைப் போல அவர் என்றுமே செயல்பட்டதில்லை.

> மண்ணுக்கேற்ப சோசலிசத்தைக் கட்டி வளர்ப்பதாகக் கூறிய கிம் இல் சுங், இதனை ''சூசே'' முறை என்றழைத்தார். ஆனால், சூசே முறையின் கீழ் வடகொரியா, மையப்படுத்தப்பட்ட பொருளாதாரம் - அதிகார வர்க்க ஆட்சி முறை - போலி சோசலிசக் கொள்கைகளைக் கொண்ட ஒரு ரஷிய சார்பு நாடாகத்தான் இருந்தது.

ஆயினும், அமெரிக்காவின் மிரட்டலை உலக மக்களிடம் அம்பலப்படுத்தி, பொதுக் கருத்தையும் பொது மக்கள் நிர்பந்தத்தையும் உருவாக்குவதற்குப் பதிலாக, தமது அதிகார வர்க்க - ராணுவ பலத்தைக் கொண்டே அவர் அமெரிக்காவை எதிர்த்து நின்றார். இத்தகைய அதிகார வர்க்க ஆட்சி முறையைக் கொண்டு ஏகாதிபத்திய அச்சுறுத்தலை முறியடிக்கவோ, நாட்டின் சுயாதிபத்தியத்தைத் தொடர்ந்து கட்டிக் காக்கவோ ஒருபோதும் சாத்தியமில்லை. இத்தகைய ஆட்சி முறையானது எதிரிகள் ஊடுருவி சிதறடிக்கவும் அல்லது சுயநலன் காரணமாக தானே எதிரியிடம் சரணடையவும் செய்யும் என்பதற்கு சான்றாக ஏராளமான நாடுகள் உள்ளன. அந்த வழியில் வடகொரியாவும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளைப் போல சீரழிந்து போகும் அபாயமே நீடிக்கிறது.

மக்கள் மட்டுமே வரலாற்றைப் படைக்கும் உந்து சக்தி; அவர்கள்தான் உண்மையான இரும்புக் கோட்டைகள்; மக்கள் திரளைச் சார்ந்த போல்ஷ்விக் கம்யூனிஸ்ட் கட்சி; சோசலிச - ஜனநாயகம் - ஆகிய அடிப்படைகளைக் கொண்ட ஆட்சியால் மட்டுமே ஏகாதிபத்தியங்களை முறியடிக்க முடியும்; சுயசார்பான சோசலிசத்தைக் கட்டி வளர்க்க முடியும். போலி சோசலிச அதிகார வர்க்க ஆட்சி முறையால் இவற்றில் எதையும் சாதிக்க முடியாது. வடகொரிய மக்களின் அன்பிற்குரிய தலைவரும் தேசியவாதியுமான கிம் இல் சுங்கின் மறைவு, இந்த உண்மைகளை மீண்டும் நிரூபித்துக் காட்டுகிறது.



படிப்பகம்

www.padippakam.com

# விவசாயத்தில் நவீனமயம்
# சிறு விவசாயிகளுக்கு சுருக்கு

தாராள மயமாக்கலைத் தொடங்கி வைத்தும், ''காட்'' ஒப்பந்தத்தில் கையெமுத்திட்ட பின்னும் ராவ் அரசு முழங்குவதெல்லாம் இதுதான்: ''நமது நாட்டு உற்பத்தி பொருட்களுக்கு - குறிப்பாக விவசாய விளை பொருட்களுக்கு சர்வதேச சந்தையில் போட்டியிட மிகப் பெரிய - அரிய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது; இந்தியாவின் ஏதோ ஒரு மூலையில் உறங்கி கிடக்கும் குக்கிராமத்தில் வாழும் சுப்பனும் குப்பனும் கூட இதனால் பயனடையப் போகிறார்கள்'' என கிறங்க வைக்கும் வார்த்தைகளை அள்ளி வீசி வருகிறார்கள் ஆட்சியாளர்கள். அவர்கள் கூறுவதைப் போல, ''பொங்கி பெருகப் போகுமு அ'' விவசாய விளை பொருட்களின் ஏற்றுமதியினால் உண்மையிலேயே பலனடையப் போகும் 'விவசாயிகள்' யார் தெரியுமா? நாட்டின் மிகப் பெரிய பணக்கார குடும்பமான ''டாடா''நிறுவனத்தினர்; இந்தியாவின் சிகரெட் சாம்ராஜ்யத்தையே தன் கைப்பிடியில் வைத்திருக்கும் ஐ.டி.சி. நிறுவனம், மற்றும் தாபர், எஸ்ஸார், பிர்லா போன்ற தரகு முதலாளிகள் தான்.

வெள்ளரி, காலிஃப்ளவர், கோவக்காய் போன்ற காய்கறி வகைகள், திராட்சை, மாம்பழம் போன்ற பழ வகைகள், காளான்கள் மற்றும் ரோஜா, மல்லிகை, குல்மோஹர் போன்ற வகைகளை பண்ணைகளை அமைத்து நேரடியாக பயிரிட்டோ அலாலது சிறு - நடுத்தர விவசாயிகளை ஒப்பந்த அடிப்படையில் பயிரிடச் செய்தோ ஏற்றுமதி செய்வதில் கடந்த மூன்று நான்கு வருடங்களாக இத்தரகு முதலாளிய நிறுவனங்கள் ஈடுபட்டு வருகின்றன.

★ தாபர் நிறுவனம் சுவிஸ் நாட்டு தொழில் நுட்ப உதவியுடன், 6.5 கோடி ரூபாய் முதலீட்டில் பெங்களூர் அருகே காய்கறி பண்ணையொன்றைத் தொடங்கி நடத்தி வருகிறது. காலிஃப்ளவர், கோவக்காய் இதனின் முக்கிய விளை பொருட்கள்.

★ கப்பல் போக்குவரத்து நிறுவனமான எஸ்ஸார் டச்சு நாட்டு நிறுவனமொன்றுடன் இணைந்து 6 கோடி ரூபாய் முதலீட்டில் புனாவுக்கு அருகில் மலர்ச் செடிகளைப் பயிரிட்டு ஐரோப்பாவுக்கு ஏற்றுமதி செய்யத் தொடங்கியிருக்கிறது.

★ டாடா நிறுவனம் புனாவுக்கு அருகில் 40 ஏக்கர் பரப்பிலும், பெங்களூருக்கு அருகாமையிலும் ரோஜா மலர் பண்ணைகளை அமைத்துள்ளது.

★ இந்திய - ஐரோப்பிய அக்ரோலிட் எனும் நிறுவனம் 24 கோடி ரூபாய் முதலீட்டில் மலர் பண்ணையினையும் பான்ட்ஸ் நிறுவனம் காளான் பண்ணையொன்றையும் நடத்தி வருகின்றன.

பிர்லா, லீவர், ஆர்.பி.ஜி. கல்யாணி போன்ற நிறுவனங்களும் தோட்டப் பயிற் பண்ணைகளின் நேரடி முதலீடு செய்யத் தொடங்கியுள்ளன. இவை தவிர, காளான் வளர்ப்பதில் 52 நிறுவனங்களும், காய்கறி மற்றும் பழ பண்மைகளில் 43 நிறுவனவங்களும் மலர் பண்ணைகளில் 25 நிறுவனங்களும் அரசின் அனுமதியுடன் தங்களின் மூலதனத்தைக் குவித்துள்ளன.

தாராளா மயமாக்கலைத் தொடர்ந்து விவசாய பொருட்களின் ஏற்றுமதிக்க கட்டுப்பாடுகளைத் தளர்த்தியது; பணத்தின் மதிப்பைக் குறைத்தது; மேற்குலக நாடுகளின் போட்டியின்றி மூன்றாம் உலக நாடுகளே பெரும்பாலான காய்கறி - மலர் - பழ வகைகளை ஏற்றுதி செய்து வருவது இவை இத்தரகு தொழிற் குடும்பங்கள் 90-களின் தொடக்கத்தில் இப்பயிர்த் தொழிலில் நுழைவதற்குத் தூண்டுதலாக அமைந்துள்ளன. நுழைந்த இரண்டு மூன்று ஆண்டுகளிலேயே ஏற்றுமதியில் தங்கள் பிடியை வலுவாக்கி கொண்டும் விட்டன.

இவர்களின் வருகைக்கு முன், சிறு விவசாயிகளையே அச்சாக் கொண்டிருந்த மலர் வியாபாரத்தின் ஏற்றுமதி மதிப்பு வெறும் 12 கோடி ரூபாய். தற்பொமுது 92-93-ல் 120 கோடி ரூபாயாகவும்,93-94-ல் 160 கோடி ரூபாயாகவும் உயர்ந்துள்ளது. இதே ஆண்டுகளில் காய்கறி - பழ ஏற்றுமதி 385 மற்றும் 490 கோடி ரூபாயாக உள்ளது. 1992-93-க்கான இந்தியாவின் மொத்த விவசாய பொருட்களின் ஏற்றுமதியான 8977 கோடி ரூபாயில், பெரும் தரகு முதலாளித்துவ நிறுவனங்களின் பங்கு மட்டும் 1500 முதல் 2000 கோடி ரூபாயாகும்.

தனிப்பட்ட நிறுவனங்களின் முதலீட்டுடன் அவற்றின் ஏற்றுமதி மதிப்பை ஒப்பிடுவது மலைக்கச் செய்வதாகவே உள்ளது. 6.5 கோடி ரூபாய் முதலீட்டில் காய்கறி பண்ணை அமைத்திருக்கும் தாபர் நிறுவனத்தின் 1993-94-ம் ஆண்டிற்கான ஏற்றுமதி வருவாய் 3 கோடி ரூபாய். எதிர் வரும் மூன்றாண்டுகளில் இது 50 கோடி ரூபாயாக உயரும் எனவும் கணக்கிடுகிறது. அதே ஆண்டில் டாடா நிறுவனம் 3 கோடி மதிப்புள்ள ரோஜா தண்டுகளை ஏற்றுமதி செய்திருக்கிறது. சிறு நிறுவனங்கள் கூட ஒரே அறுவடையில் ஏற்றுமதியின் மூலம் குறைந்த பட்சம் 40,000 ரூபாய் வரை இலாபமாக ஈட்டுகின்றன.

உற்பத்தி திறனை அதிகரிக்க சில நிறுவனங்கள் நவீனமாக வடிவசைக்கப் பட்ட கண்ணாடி மற்றும் பாலிதீன் கூரைக

**காய்கறி ஏற்றுமதி மூலம் மட்டுமே கடந்த ஆண்டில் 3 கோடி ரூபாய் சம்பாதித்தது தாப்பர் நிறுவனம்**





படிப்பகம்

www.padippakam.com

ளின் கீழ் பயிர்களை வளர்ப்பதுடன், தரத்தை நிலைப்படுத்த ஆராய்ச்சி வசதிகளுக்காக பன்னாட்டு நிறுனவங்களுடன் கூட்டும் சேர்ந்துள்ளன. நவீனரக விதைகள், உரம் - பூச்சி மருந்து, தொடர்ச்சியான பாசன வசதி, அறுவடையானவற்றைப் பதப்படுத்தவும் பாதுகாக்கவும் குளிர் சாதன அறைகள் என உள்கட்டமைப்பு வசதிகளுக்காக தொடர்ச்சியான முதலீடும் அவசியமாகிறது. ''இவ்வாறான தொடர்ச்சியான கண்காணிப்பு - முதலீட்டு நவீன வசதி காரணமாக சிறு - நடுத்தர முதலாளித்துவ நிறுவனங்கள் இதில் அடி எடுத்து வைப்பது எட்டாத பழத்திற்கு கொட்டாவி விடுவது போலத் தான'' என்றார் ஹாரிசன் மலையாளம் நிறுவனத்தின் இயக்குநர். பின் அப்படியானால் வழக்கமான பழைய முறை விவசாயத்தில் ஈடுபட்டு வருபவர்களைப் பற்றி சொல்லவே வேண்டியதில்லை.

இனி தொடர்ச்சியாக ''தொழிற்துறை நிறுவனங்கள் விவசாயத் துறையில் முதலீடு செய்யும் காலம் கனிந்துவிட்டதாகவும்'' ''இந்திய விவசாயம் சர்வதேச மயமாகிறது'' என்றும் இந்த நவீன போக்கினை முதலாளித்துவ பொருளாதார அறிஞர்கள் வருணிக்கத் தொடங்கியுள்ளனர். இந்தக் கூற்று எந்த அளவிற்கு மெய் நடப்பாகும் என்பதை தற்பொழுது கூற இயலாது என்றும், மைய ராவ் அரசு இப்போக்கினை துரிதப்படுத்த சில முயற்சிகளை எடுத்து வருகிறது. ஒன்று, ஏற்றுமதி நோக்கோடு விவசாயத்தில் முதலீடு செய்வோருக்கு கடன் சலுகைகள் அளிக்க முடிவு செய்துள்ளது. விவசாயப் பொருட்களின் ஏற்றுமதிக்கான ''கோட்டா'' முறைகளை ஒழிப்பது என்பது மற்றொன்று.

உலக வங்கி விவசாயம் சம்பந்தமான தனது அறிக்கையில், ''ஏற்றுமதி - இறக்குமதி கொள்கையில் எல்லா கட்டுப்பாடுகளையும் நீக்குமாறும் இந்திய உணவுக் கழகம் மற்றும் பருத்திக் கழகம் போன்ற அமைப்புகளை மறு சீரமைப்புமாறும்'' அறிவுறுத்தியுள்ளது. பாராளுமன்ற ஆலோசனைக் கமிட்டியோ இன்னும் ஒருபடி மேலே சென்று நியாய விலைக் கடைகளுக்கான (ரேஷன்) பொது விநியோக அமைப்பு முறையின் விதிகளில் - உணவுப் பொருட்கள் கட்டாய கொள்முதல் மாற்றங்களைச் செய்ய பரிந்துரைத்துள்ளது.

தாய் எட்டடி பாய்ந்தால் குட்டி பதினாறு அடி பாய்வது இயல்பானதுதானே. அதற்கேற்ப தொழிலதிபர்கள், ''உள்நாட்டில் உபரியாக இருந்தால்தான் ஏற்றுமதி செய்ய வேண்டும் னெற கொள்கையை மாற்றி, சர்வதேச மற்றும் உள்நாட்டு விலைகளின் ஏற்ற - இறக்கங்களுக்கு ஏற்ப ஏற்றுமதி - இறக்குமதியை அனுமதிக்க வேண்டும்'' எனக் கோரிக்கை விடுத்துள்ளார்கள். இது நமது நாட்டு விவசாயத்தை சந்தையுடன் நேரடியாக இணைப்பதாகும். இதோடு, காய்கறிகள் - பழம் - மலர் வகைகளை மட்டுமல்லாது, அரிசி, கோதுமை, சர்க்கரை, எண்ணெய் வித்துகள், போன்ற உணவுப் பொருட்களையும் பருத்தியினையும் எவ்வித தட்டுப்பாடுமின்றி ஏற்றுமதி செய்ய அரசு அனுமதிக்க வேண்டும்'' என்கிறார்கள். இதற்காக தாங்களே நேரடியாக உணவுப் பொருட்கள் விவசாயத்திலும் ஈடுபடுவதற்கு வசதியாக ''நில உச்சவரம்பு சட்டத்தில் திருத்தங்கள் செய்ய வேண்டும்'' என இத்தொழிலதிபர்களின் ஒரு சாரார் நிர்ப்பந்திக்கத் தொடங்கியுள்ளனர்.

ஏற்றுமதி முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படும் எண்ணெய் வித்துகளைப் பயிரிடும் சிறு விவசாயிகளின் எண்ணிக்கை நாடு முழுவதும் 5 1/2 லட்சத்துக்கும் அதிகம். தமிழ்நாட்டின் மதுரை மாவட்டப் பகுதிகளில் ஏற்றுமதிக்காக மல்லிகை பயிரிடுவோரையும் உள்ளிட்டு 8384 ஹெக்டேர் பரப்பளவில் மலர்ச் செடிகள் பயிரிடப்படுகின்றன. கர்நாடகாவிலும், மே. வங்கத்திலும் இப்பரப்பு 15000 ஹெக்டேர் ஆகும். மாம்பழம் உ.பி. மாநிலத்திலும், ரோஜா மலர்ச் செடிகள் புனா - நாசிக் பகுதிகளிலும் சிறு - நடுத்தர விவசாயிகளால் பயிரிடப்படுகின்றன. இவ்வாறு பொதுவாகவே, ஏற்றுமதி செய்யப்பட்டுவரும் காய்கறி - மலர் - பழ வகைகள் பயிரிடுவதில் நாடு முழுவதும் சிறு இலட்சக்கணக்கான நடுத்தர விவசாயிகளின் பங்குதான் அதிகம். இந்நிலையில் இவைகளை நேரிடையாகப் பயிரிட்டு ஏற்றுமதி செய்யும் நிறுவனங்களின் எண்ணிக்கையும் பரப்பும் அதிகரிக்கும் பொழுது, இவர்களுள் கணக்கற்றோரின் வாழ்க்கையை அந்நிறுவனங்கள் விழுங்கிவிடும் அபாயமுள்ளது.



ஏற்றுமதிக்குத் தயாராகும் மலர் வகைகள்

''ஒப்பந்த அடிப்படையில் இந்நிறுவனங்களுடன் இணையும் சிறு - நடுத்தர விவசாயிகள் கூடுதலாகப் பலனடையும் வாய்ப்பு உள்ளது'' என அரசும் தொழிலதிபர்கள் கூறி வருவதும் எதிர்மறையாகத்தான் உள்ளது. உள்நாட்டு தரகு முதலாளித்து நிறுவனங்களுக்கு முன்பே இத்துறையில் காலடி எடுத்து வைத்த பன்னாட்டு நிறுவனமான பெப்சியின் அனுபவமே இதற்குத் தக்கதொரு சான்றாகும். ''ஒரு ஏக்கருக்கு 50,000 ரூபாய் வரை தக்காளி பயிரிட்டு இலாபம் அடையலாம்'' என்ற அந்நிறுவனத்தின் அறிவிப்பு, பூச்சி தாக்குதலின் காரணமாக இன்று வரை காகிதத்தில் மட்டும்தான் உள்ளது.

''எங்களை விட்டு ஓடி விடும் விவசாயிகளைப் பற்றி எங்களுக்கு அக்கறையில்லை'' எனக் கூறும் கல்யாணி நிறுவனத்தாரின் வாக்குமூலத்தில் இருந்து ஒன்றை புரிந்து கொள்ளலாம். இத்தொழிலதிபர்கள் கிராமப்புற சிறு - நடுத்தர விவசாயிகளுக்கு புதுவகை வட்டி - லேவாதேவிக்காரர்கள் என்பதுதான் அது. இந்நிறுவனத்தினர் தாங்கள் எதிர்பார்க்கும் தரம் சிறிதளவு குறைந்தாலும் கொள்முதல் செய்ய மறுத்து விடுவார்கள். பின் விளைச்சலை உள்ளூர் சந்தையில் குறைந்த விலைக்க விற்றும், கூடவே வீட்டுச் சாமான்களை விற்றோ அல்லது அடமானம் வைத்தோதான் நிறுவனங்கிளடம் தாங்கம் பட்ட கடனை சிறு விவசாயிகள் அடைக்க முடியும்.

அதிகமான விளைச்சல், தரம், நீண்ட நாள் அழுகாமல் இருக்கக் கூடிய தன்மை - இவை காரணமாக இந்நிறுவனங்கள் மிக நவீன விதைகளைத்தான் பயன்படுத்துகின்றன. இந்நிறுவனங்களின் விளைச்சல் திறன் உள்ளூர் சந்தைக்காகப் பயிரிடுவோரையும் அது போன்ற விதைகளைப் பயன்படுத்தக் கவர்ந்திழுக்கும். மரபியல் கூறு விஞ்ஞான வளர்ச்சியில் இன்றுள்ள நவீனரக விதைகள் பன்னாட்டு நிறுவனங்களின் கைகளில் தான் உள்ளன. இது விவசாய - தோட்ட பயிர்த்துறையில் பன்னாட்டு நிறுவனங்களின்



படிப்பகம்

www.padippakam.com



நவீன கூரைகளின் கீழ் பயிர் செய்யப்படும் ரோஜா தண்டுகள்.

பிடியை மேலும் இறுக்கும். மறுபுறம் உள்ளூர் சந்தைக்குப் பயிரிடும் விவசாயிகள் பயிர்கள் பூச்சியினால் தாக்கப்படும் பொழுது, நிறுவனங்களைப் போல உள்ளீடு பொருட்களுக்கு செலவு செய்ய வசதியற்றது. நொடித்துப் போவர் மேலும், ஏற்கனவே உணவுப் பொருள் உற்பத்தி செய்யும் விவசாயிகள் நொடித்துப் போவது அதிகமாவதால், அவர்கள் இந் நிறுவனங்களால் கவரப்பட்டு பயிரை மாற்றிக் கொள்ளவோ அல்லது நிலத்தை அவர்களிடம் விற்றுவிடவோ வாய்ப்புகள் உள்ளது. விளைச்சல் திறனைக் கூட்ட அதிகரித்த அளவில் பயன்படுத்தப்படும் உரம் - பூச்சி மருந்தினால் நிலம் உவராகி, சுற்றுப்புற சூழலும் மாசுபட்டு போகும்.

இவர்கள் கோரும் மாற்றங்களினால் விவசாயிகள் மட்டுமல்லாது சாமானிய மக்களும் எந்தளவு பாதிக்கப்படுவார்கள் என்பதற்கு சமீபத்திய காபித் தூள் விலையேற்றம் எடுப்பான உதாரணமாகும். இந்த ஆண்டின் தொடக்கத்தில் ராவ் அரசு காபிக் கொட்டையின் கட்டாய கொள்முதலை தளர்த்தி, ஏற்றுமதியை தாராள மயமாக்கியது. இதை அடுத்து வந்த சர்வதேச சந்தையில் காபி கொட்டையின் விலையேற்றம், விற்பனையாளர்களை உள்நாட்டு சந்தையைப் புறக்கணித்து, கொள்ளை இலாபமடிப்பதற்கு வசதியாக அதிகரித்த அளவில் ஏற்றுமதி செய்யத் தூண்டியது. இதனால் உள்நாட்டு சந்தையில் காபித்தூளின் விலை இரண்டே மாதங்களுக்குள் ரூபாய் 80-லிருந்து இருநூறைத் தொட்டது. காபி பயிர் செய்யும் சிறு - நடுத்தர விவசாயிகள் இதனால் பலனடைந்தார்கள் எனக் கூற முடியாது. அதன் மாறாக இவர்களோடு ஒப்பந்தம் செய்து கொண்டுள்ள ஐ.டி.சி. போன்ற நிறுவனங்கள்தான் கொழுத்துப் போயின.

அரசின் இத்தாராளமயமாக்கல் அரிசி, கோதுமை போன்ற உணவுப் பொருட்களுக்கும் விரிவாக்கப்படுமாயின் அது இந்நூற்றாண்டின் முடிவில் ஏற்பட வாய்ப்புள்ளதாகக் கருதப்படும் உணவுத் தட்டுப்பாட்டை துரிதப்படுத்தி, பெரும்பாலான உழைக்கும் மக்களை பட்டினிச் சாவிற்குள் தள்ளிவிடும். பருத்திக்கு கொடுக்கும் அனுமதி 1 கோடிக்கும்

அதிகமான கைத்தறி நெசவாளர் குடும்பங்களில் ஏற்படுத்தும் பாதிப்பை புதிய ஜவுளிக் கொள்கையை அரசு செயல்படுத்தத் தொடங்கியபின் பல நெசவாளர்கள் தற்கொலைப் பாதையைத் தேர்ந்தெடுத்ததில் இருந்து புரிந்து கொள்ளலாம்.

''அயோடின் கலந்த உப்பு'' ஆடம்பரமாக சந்தைக்கு வந்த பின்பு உப்பு காய்ச்சுவதை குடிசைத் தொழிலாக செய்து வந்த பல குடும்பங்கள் நசிந்து போயின; ''கொழுப்பற்ற எண்ணெய்'' டப்பாக்களில் விற்பனைக்கு வந்த பின் சிறிய அளவில் எண்ணெய் உற்பத்தியில் ஈடுபட்டு வந்த வணிகர்கள் மறைந்து போயினர். ''கூட்டுறவே நாட்டுயர்வு'' என வந்த அரசின் பால் விற்பனை நிலையங்கள் பெரு - சிறு நகர்ப்புறங்களில் இருந்த சிறிய பால் வியாபாரிகளை நொடித்து விழச் செய்தது. இவர்களைப் போல நாளை நமது கண் முன்பே ஆண்டாண்டு காலமாக விவசாயம் செய்து வந்தவர்கள் தமது மண்ணையும் வாழ்வையும் இப்புதிய போக்கினால் இழந்து போகமாட்டார்கள் என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை.

● ரஹீம்

## விவசாயத்தை சோதனைச் சாலைக்குள் முடக்கத் துடிக்கும் அமெரிக்கா

நவீன உழுபடைக் கருவிகள், விதை ரகங்கள், உரம் - பூச்சி மருந்துகள் என மூன்றாம் உலகத்தின் விவசாயிகளைப் போண்டியாக்கி வந்த ஏகாதிபத்திய நாடுகள், தற்பொழுது உயிரியல் தொழில் நுட்பத்தின் வளர்ச்சியில் ''டிஸ்யூ கல்ச்சர்'' (Tissue Culture) எனும் முறைப்படி விவசாய விளை பொருட்களை பரிசோதனைச் சாலைகளில் தயாரித்துவிடும் புதுவகை விஞ்ஞான ஆராய்ச்சியில் ஈடுபட்டு வருகின்றன. பருத்தி நூலிழைகளுக்குப் பதிலாக செயற்கை நூலிழை கண்டுபிடித்ததை போலத்தான் இவ்வாராய்ச்சி முறை. இவ்வாய்வு வெற்றி பெற்று படிப்படியாக நடைமுறைக்கு வரும் பொழுது வெளிப்புற விவசாயமே முடக்கப்பட்டு, 240 கோடிக்கும் அதிகமான விவசாயிகள், இப்பூமியில் எதற்கும் தேவை அற்றவர்களாகிவிடும் அபாயமுள்ளது.

உணவில் பயன்படுத்தப்படும் வெண்ணிலா என்ற வாசனைப் பொருளை தற்பொழுது அமெரிக்க ஆராய்ச்சியாளர்கள் இம்முறையில் செயற்கையாக உருவாக்கிவிட்டனர். இதனால் இப்பயிரினைப் பயிரிடும் 70,000 மடகாஸ்கர் நாட்டு விவசாயிகளையும் உள்ளிட்டு மூன்றாம் உலக நாடுகளில் வாழும் 1 லட்சம் விவசாயிகளின் வாழ்க்கை பறிபோகும் நிலையுள்ளது. மூன்றாம் உலக நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் காபி, புகையிலை, கோகோ, சர்க்கரைப் பொருட்கள், எண்ணெய் வித்துகள் போன்றவைதான் இந்த ஆராய்ச்சியின் மையமாகத் திகழுகின்றன. கோகோ பயிரிடும் மத்திய அமெரிக்கா விவசாயிகள், காபி பயிரிடும் பிரேசில் நாட்டு உழவர்கள், இந்திய நாட்டில் எண்ணெய் வித்துகள், தேங்காய் பயிரிடுவோர், கிழக்காசியாவின் ரப்பர் உற்பத்தியாளர்கள் என மூன்றாம் உலக நாடுகள் மட்டுமின்றி, மேற்கத்திய நாட்டு விவசாயிகளையும் சேர்த்து குப்பைக் கூடையினுள் கசக்கி தூக்கியெறிய தயாராகிவிட்டன, அமெரிக்கா தலைமையிலான ஏகாதிபத்திய நாடுகள்.

உலகெங்கிலுமே தொழிற்துறை நவீனமயமாகி வருவதால் விசிறி எறியப்படும் விவசாயிகளுக்கு வேறு வேலை கிடைக்கவும் வாய்ப்புகளில்லை. விவசாயத்தோடு இணைந்த தொழிற்துறை பாட்டாளிகளும் வேலை இழந்து போவர். மூன்றாம் உலக நாடுகள் வெளிநாட்டு கடனை அடைக்க இயலாது, ஏகாதிபத்தியங்களுக்கு வேண்டாத சுமையாகும். 19-ம் நூற்றாண்டில் ஏற்பட்ட தொழிற்புரட்சி காரணமாக உலகெங்கிலுமான கோடிக்கணக்கான கைத்தறி நெசவாளர்கள் வாழ்வை இழந்ததைப் போல 21-ம் நூற்றாண்டின் தொடக்கமே மிகக் கொடிய சமூக அவலத்தை கருத்தரித்திருக்கிறது.



படிப்பகம்

# கொங்கு வேளாள கவுண்டர்கள் மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களா?

**கொ**ங்கு வேளாளக் கவுண்டர் மாநாடு ஜூன் மாதம் இறுதியில் கரூரில் நடந்தது. இச்சாதி சங்கத் தலைவர் கோவை செழியன் தலைமையில் மத்திய அமைச்சர்கள் ராஜேஸ் பைலட், தங்கபாலு, காங்கிரசு எம்.பிக்கள் சி.கே. குப்புசாமி, ரங்கராஜன் குமாரமங்கலம் உட்பட முன்னாள் எம்.எல்.ஏக்கள், சாதிச் சங்கத் தலைவர்கள், உள்ளூர் பிரமுகர்கள் பலர் கலந்து கொண்டு பேசினர். தங்கள் சாதியை மிகவும் பிற்படுத்தப்பட்டியலில் சேர்க்கவும் திருச்சியை இரண்டாகப் பிரித்து கரூரை தலைமையிடமாகக் கொண்டு தீரன் சின்னமலை அல்லது பொன்னர் சங்கர் மாவட்டம் உருவாக்கவும் இம்மாநாடு வாயிலாக முக்கியமாகக் கோரியுள்ளனர். தமக்கு உரிய உரிமை கிடைக்கவில்லையெனில் கொங்கு நாடு கேட்டு ஆயுதப் போராட்டம் நடத்தப் போவதாகவும் அறிவித்துள்ளனர். காங்கிரசு தவிர பிறகட்சிகளில் உள்ள தமது சாதியினர் அழைப்பு கொடுத்தும் மாநாட்டிற்கு வராததைக் குறிப்பிட்டு, அவர்கள் ஓட்டு கேட்டு வந்தால் அடித்து விரட்டுங்கள் என்று ஆத்திரத்துடன் முழங்கினார்.

''ஆயில் பெயிண்ட்டு''களால் சுவர் விளம்பரம், பல வகையான விலை உயர்ந்த ''ஸ்டிக்கர்கள்'' - சுவரொட்டிகள் - அலங்கார வளைவுகள் - வண்ண விளக்குகள் என மாநாட்டுக்குரிய ஏற்பாடுகள் எல்லாம் ஆடம்பரமாக இச்சாதியைச் சேர்ந்த செல்வந்தர்களின் பண உதவியில் கரூர் நகரையே ஆக்கிரமித்துக் கொண்டது. 'கொங்கு மண்டலத்தில்' உள்ள தொழில் நகரங்களான கோவை, கரூர், ஈரோடு, திருப்பூர், நாமக்கல், சேலத்தில் உள்ள பெரும் தொழிலதிபர்கள் - முதலாளிகளும், கிராமங்களில் உள்ள பணக்கார விவசாயிகளும் பெரிய - சிறிய நிலப்பிரபுக்களும், அரசியல்வாதிகளுமே மாநாட்டிற்கு சாதிப்பற்றோடு லட்சங்களை வாரிக் கொடுத்துள்ளனர். கரூரிலும் அதைச் சுற்றிய கிராமங்களிலும் இச் செல்வந்தர்கள் குவிந்திருப்பதாலேயே கரூரைத் தலைமையிடமாகக் கொண்ட தனி மாவட்டம் கேட்கிறார்கள். இதுவல்லாமல் இச்சாதியைச் சேர்ந்த சாதாரண நபர்களிடம்கூட 1000 ரூபாய் என்று அடாவடி வசூல் செய்தனர்.

கொங்கு வேளாளக் கவுண்டர்கள், தம்மை ஒடுக்கப்பட்ட சாதியாக சித்தரித்து மிகவும் பிற்படுத்தப்பட்டவர்கள் பட்டியலில் தனி இட ஒதுக்கீடு கோருவது அயோக்கியத்தனமானதும் நியாயமற்றதும் ஆகும். இச்சாதியினர் சாதி -சமூக ரீதியாக மேலாதிக்கவாதிகளாக - பிற கீழ் சாதியினரையும் தாழ்த்தப்பட்ட சாதியினரையும் அடக்கி ஒடுக்குபவர்களாக வேளாளர், செட்டியார், முதலியார் போன்ற பார்ப்பனரல்லாத மேல் சாதியினருக்கு அடுத்த நிலையில் உள்ளவர்கள்.

கொங்கு வேளாளக் கவுண்டரில் உட்பிரிவு சாதிகளாக நாட்டுக் கவுண்டர், தொண்டை வேளாளர், திருமுடி வேளாளர், பால் கவுண்டர், பூசாரி கவுண்டர், குறும்ப கவுண்டர், படைத்தலை கவுண்டர், பவளங்கட்டி - காரைக்காட்டு - பால - குறும்ப - சங்கு வெள்ளாள கவுண்டர், செந்தலை கவுண்டர், முடவாண்டிக் கவுண்டர், கல்வேலி கவுண்டர், ஊராளி - மலையாளி கவுண்டர் என 21 வகையினர் உள்ளதாகக் கூறுகின்றனர். இதில் முடவாண்டி கவுண்டர் மற்றும் விதவை குழந்தைகளான இளங்கம்மக் கூட்டம் போன்ற சில சாதியினர் இவர்களுக்குள்ளேயே. இரண்டாந்தர - கீழ்க்குடிமக்களாக நடத்தப்படுகிறார்கள். இவர்களுடன் திருமண உறவு வைத்துக் கொள்வதில்லை. இழவுக்கோ, வீட்டு விசேஷங்களுக்கோ செல்வதில்லை. முடவாண்டி கவுண்டர்கள் பிற கவுண்டர் வீட்டில் - விழாவில் சாப்பிட்டால் அவர்களே இலையை எடுத்துப் போட வேண்டும். பல கிராமங்களில் கூலி கவுண்டர், பண்ணைக்கார கவுண்டர் என்ற பிரிவின் கீழ்தான் இவர்களுக்குள் உறவு முறையே உள்ளது. அண்ணன், தம்பி, பங்காளிகள் கூட நிலப்பிரபுவை ''எஜமான்'' என்றே அழைக்க வேண்டும். கொங்கு வேளாள கவுண்டர் சாதிக்குள்ளேயே இத்தகைய கொடுமைகள் என்றால் இவர்கள் பிற தாழ்த்தப்பட்ட சாதியினரை நடத்தும் விதம் பற்றி சொல்லத் தேவையில்லை.

இச்சாதி நிலப்பிரபுக்களால் தாழ்த்தப்பட்டவர்களுக்கு சவுக்கடி கொடுப்பது, சாணிப்பால் ஊற்றுவது போன்ற கொடிய தண்டனைகள் இன்றும்கூட நிறைவேற்றப்படுகின்றன. 'கொங்குநாட்டில்' உள்ள பள்ளர், பறையர், சக்கிலியர், படையாச்சி, வேட்டுவ கவுண்டர் ஆகியோரையே வேளாள கவுண்டர்கள் தங்கள் எதிரியாகக் கருதுகிறார்கள். இதில் பள்ளர், படையாச்சி, வேட்டுவ கவுண்டர்கள் போர்க்குணத்துடன் இவர்களை எதிர்த்து நிர்ப்பதால் முக்கிய எதிரிகளாகக் கருதுகின்றனர். பறையர், சக்கிலியரோ இவர்களது கொடுமைகளைக் கண்டு சகித்து வாய் மூடிய அடிமைகளாகவே உள்ளனர். ஆனாலும் வேளாளக் கவுண்டர் சாதி நிலப் பிரபுக்களும், தொழிலதிபர்களும் பள்ளர்களைத்தான் அடியாட் படையாகப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். ''தாழ்த்தப்பட்டவர்களுக்கு இடஒதுக்கீடும் அரசு உதவியும் கிடைப்பதால் தான் நமக்கு, நமது பிள்ளைகளுக்கு வேலை கிடைப்பதில்லை'' என்று பிரச்சாரம் செய்தே தமது சாதி உழைக்கும் மக்களை திரட்டுகிறார்கள். 1985-ல் நில முதலை டி.எம். நல்லுசாமி போன்றவர்கள் செய்த பிரச்சாரத்தால் சாதிப்பகை வேரூன்றி தோட்டக்குறிச்சியில் சாதிக் கலவரமும் நடந்தது.

தற்போதைய கரூர் மாநாட்டின் மூலமும் சாதியப் பகைமையுணர்வையே விதைத்திருக்கிறார்கள். கடந்த 5 வருடமாகத்தான் ''கொங்கு'' என்ற வார்த்தையை அதிகமாகப் பயன்படுத்தி பரப்பி வருகிறார்கள். தங்கள் பெயருக்கு முன்பு ''கொங்கு'' என்பதை (கொங்கு சண்முகம்) வைத்துக் கொள்கிறார்கள். திருமணப் பத்திரிகைகளில், வாழ்த்து மடல்களில், சுவரொட்டிகளில் ''கொங்கு'' எனப் போடுவதல்லாமல் உணவு விடுதிகள், வட்டிக் கடைகள், அச்சகம், பள்ளி, கல்லூரி, கல்யாண மண்டபங்களுக்கும் தெருக்களுக்கும் கூட ''கொங்கு'' என சேர்த்தே பெயர் வைக்கிறார்கள். பேனாக்கள், கடிகாரத்தின் பொருட்கள், கைப்பைகளில் கூட இவ்வார்த்தையைப் போடுகிறார்கள் என்றால் பார்த்துக் கொள்ளுங்கள். இவற்றின் எதிர் விளைவாக பள்ளர்களும், வேட்டுவ கவுண்டர்களும் சாதிச் சங்கங்களில் அணிதிரண்டு வருகிறார்கள். கிராமங்களில் கட்சிக் கொடிக் கம்பங்களை அகற்றிவிட்டு சாதி சங்கக் கொடிகளை வைத்து வருகிறார்கள்.

கரூர் மாநாட்டில் ரங்கராஜன் குமாரமங்கலம், ராஜேஸ் பைலட், கோவை செழியன், சி.கே. குப்புசாமி





படிப்பகம்

www.padippakam.com

மாநாடு நடந்து முடிந்த பின் பரமத்தி, வேலூரில் சாதிய மோதல்கள் தொடங்கியும் விட்டன. எந்தச் சூழ்நிலையிலும் சிறு காரணத்தை வைத்து சாதிக்கலவரம் சுற்று வட்டாரப் பகுதிகளில் நடப்பதற்குரிய அபாய நிலையே நிலவுகிறது. 1985 போலல்லாமல் தற்போது வேளாள கவுண்டர்கள் அமைப்பாகத் திரண்டிருப்பதால், சாதிக் கலவரம் நிகழுமாயின் தாழ்த்தப்பட்டவர்கள் பெரிதும் பாதிப்புக்குள்ளாவர். அரசு எந்திரமும் அரசியல் வாதிகளும் கூட வேளாள கவுண்டர்களுக்குச் சாதகமாகவே செயல்படும். ஏனெனில் "எங்கள் சாதியல்லாதவர் யாரும் இத்தொகுதியில் வெற்றி பெற்று விட முடியாது" என்று அவர்கள் திமிறாகப் பேசுமளவிற்கு சாதிய ஆதிக்கவாதிகளாக உள்ளனர். 1920-களில் முதல்வராக இருந்த சுப்புராயன் (ஒரு நிலப்பிரபு), இவரது மகன் ரங்கராஜன் குமாரமங்கலம், அ.தி.மு.க. அமைச்சர் துரை ராமசாமி (நிலப்பிரபு), ஏ. சேனாபதி கவுண்டர் (நிலப்பிரபு), முன்னாள் எம். பி. அரூர் முத்து, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் கு. வடிவேல், கே.வி. ராமசாமி, எஸ். சதாசிவம் முதலானோரை இச்சாதியினரின் அரசியல் செல்வாக்கிற்கு உதாரணமாகக் கூறலாம். பா.ஜ.க. போன்ற இந்துவெறி - மேல்சாதிக் கட்சிகளுக்கு அரசியல் அடித்தளத்தை ஏற்படுத்திக் கொடுப்பவர்களாகவும் இச்சாதியினர் உள்ளனர்.

பழைய கோட்டை பட்டக்காரர் (என்.எஸ்.எஸ். மன்றாடியார்), குட்டபாளையம் - புரலிபாளையம் ஜமீன்கள் போன்ற நிலப்பிரபுக்கள் மட்டுமல்ல இச்சாதியைச் சேர்ந்த பணக்கார விவசாயிகளும் பெரும்பான்மையான நடுத்தர விவசாயிகளும்கூட கிராமங்களில் சாதி ஆதிக்கவாதிகளாக உள்ளதைப் பார்க்கலாம். நகரங்களில் குடிபெயர்ந்த இச்சாதியினரில் பலர் பெரு வணிகர்களாகவும், விசைத்தறி - பணியன் கம்பனி - துணியாலை அதிபர்களாகவும் கோழிப் பண்ணை - பஸ் - லாரி உரிமையாளர்களாகவும், சிறு முதலீட்டாளர்களாகவும் உள்ளனர். காங்கயம், தாராபுரம், அரவாக் குறிச்சி, பல்லடம் முதலான பகுதிகளில் பலர் கந்து வட்டிக்காரர்களாக் உள்ளதைப் பார்க்கலாம். தமிழ்நாட்டில் மட்டுமல்லாமல் மார்வாடி, செட்டியார்களைப் போலவே பிற மாநிலங்களிலும்கூட கந்து வட்டித் தொழில் நடத்துகின்றனர்.

இவர்கள் எல்லோரும்தான் தம்மை மிகவும் பிறபட்ட சாதியாக சித்தரித்து தனி ஒதுக்கீடு கோருகிறார்கள். ஒரு வேளை வன்னியர்கள் போல் தனி ஒதுக்கீடு கிடைத்தாலும் இவர்கள் மட்டுமே பயனடைவார்களே ஒழிய இவர்கள் திரட்டுகிற "கூலி கவுண்டர்களோ, கூலி தொழிலாளர்களோ பயனடைய விடமாட்டார்கள். வன்னியர்களுக்கு 20 சதவிகிதம் கிடைத்து என்ன நடக்கிறதோ அதுதான் நிகழும். மேலும் வன்னியர்கள் போராட்டம் எழுந்தபோது அரவணைத்து வளர்த்து விட்டதைப் போலவேதான் கொங்கு வேளாள கவுண்டர்களின் சாதிக் கோரிக்கைகளையும் குறுகிய அரசியல் ஆதாயத்திற்காக அரவணைத்து கொம்பு சீவி வருகிறது, காங்கிரசு. பிற ஓட்டுக்கட்சிகளோ வாய் திறக்காமல் - பகைத்துக் கொள்ளாமல் காரியவாதமாக நடந்து கொள்கின்றன. எனவே கொங்கு வேளாள கவுண்டர்களில் உள்ள கூலி-ஏழை விவசாயிகளும், தொழிலாளர்களும், சிறுவீத உரிமையாளர்களும் சாதி வெறியர்கள் பின்னே திரளாமல் உழைக்கும் மக்கள் என்கிற ரீதியில் பிறசாதியினரோடு ஒன்று திரண்டு சமூக - சாதிய - பொருளாதார ஒடுக்குமுறைகளை எதிர்க்கும் பொழுதே விடிவு உள்ளது.

## சந்தி சிரித்தது இந்து முன்னணி

கடந்த 14.7.94 அன்று ஆர்.எஸ்.எஸ். குடும்ப அமைப்பான இந்து முன்னணியின் உத்தமபாளையம் தாலுகா மாநாடு கம்பம் அருகில் உள்ள காமய கவுண்டன் பட்டியில் நடைபெற்றது. பகுதியிலுள்ள புரட்சிகர அமைப்பு விவசாயிகள் விடுதலை முன்னணி, இந்து வெறியூட்டத் திட்டமிடு இம்மாநாட்டை தடை செய்யக் கோரியும் உழைக்கும் மக்களைப் புறக்கணிக்கக் கோரியும் சுவரெழுத்து, சுவரொட்டி வாயிலாக இயக்கம் எடுத்தது. மாநாட்டு பொதுக் கூட்டத்தின் போது இந்து வெறியர்களை அம்பலப்படுத்தியும் "ராமகோபால அய்யரே பதில் சொல்" என் சில கேள்விகளை முன்வைத்தும் பிரசுரம் விநியோகித்தனர், வி.வி.மு. வினர். மாநாட்டில் பேசிய ஸ்ரீதரன், ஜெயராஜ் போன்றவர்கள் தி.மு.க.வின் தீப்பொறி ஆறுமுகத்தைப் போல் ஆபாசமாகவே அதே சமயம் இந்து வெறியூட்டி பேசினர். ராமகோபாலன் பேசும் போது வி.வி.மு துண்டு பிரசுரத்தை கையில் வைத்துக் கொண்டு பதிலளித்தார்.

"உழைக்கக் கூடிய தாழ்த்தப்பட்ட சகோதரன் வீட்டில் நீ சாப்பிடத் தயாரா? பெண் கொடுத்து பெண் எடுக்கத் தயாரா?" என்று பிரசுரத்தில் இருந்த கேள்விக்கு மட்டும் மழுப்பலாக பதில் கூறினார். "பெண் என்ன கொடுக்கவும் எடுக்கவும் பொருளா? பெண்களை இழிவுபடுத்துகிறார்கள் பாருங்கள்" என்று திசை திருப்பி "நான் யார் வீடானாலும் சாப்பிட்டுக் கொண்டுதான் இருக்கிறேன்" என்று பொதுவாக மழுப்பி விட்டதோடு தொடர்ந்து தாழ்த்தப்பட்டவர்களை மையமாக வைத்தே பேசினார். "இந்துமதத்தில் ஒரு சிலர் (இவர்கள் இல்லையாம்), தாழ்த்தப்பட்டவர்கள் மனம் புண்படும்படி இழிவுபடுத்தினாலும் இன்னும் இந்துமதத்திலேயே இருக்கிறார்களே அதற்காக நாம் தாழ்த்தப்பட்ட மக்களை வணங்க வேண்டும்" என்றார். ம.க.இ.க., வி.வி.மு., பு.மா.இ.மு. மீதும் தி.க., வீரமணி மீதும் வசைமாரி பொழிந்தார். ஏனெனில் தி.க.வும் எதிர்ப்பு தெரிவித்து பகுதியில் பழைய வாசகங்களை சுவரில் எழுதியிருந்தது. மொத்தத்தில் பெரிய அளவிற்கு இந்து முன்னணி குரங்குகள் வாலாட்டாமல் தடுக்கப்பட்டதோடு அவர்களது உண்மை முகமும் அடையாளங்காட்டப்பட்டது. தாம் திட்டமிட்டபடி பிரச்சாரம் செய்ய முடியாமல் போகவே ஆத்திரமாகிப் போனது, இந்து முன்னணி.


புதிய பொருளாதாரக் கொள்கை மற்றும் இந்தியாவை மறுகாலனியாக்கி வரும் "காட்" - டங்கல் திட்டத்தை அம்பலப்படுத்தும்

**மக்கள் கலை இலக்கியக் கழகத்தின்**

**புதிய பாடல் ஒலிப்பேழை**

**அடிமைச் சாசனம்**

**(9 பாடல்கள்)** **விலை ரூ. 30 (அஞ்சல் செலவு தனி)**

ஒலிப்பேழை பெற தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

தமிழ்மணி, உதயசூரியன் தேனீர் விடுதி, காந்திபுரம், தில்லைநகர், திருச்சி - 18



**அறிமுகக் கூட்டம்**

ஆகஸ்ட் 13, '94, மாலை 6 மணி — திலீபன் திடல், தஞ்சை.

உரையாற்றுவோர்:

கவிஞர் இன்குலாப், முனைவர் கே.ஏ.குணசேகரன்

ஞானி ஆசிரியர், டி.வி. உலகம் திரைப்படத் தொகுப்பாளர் லெனின்

முனைவர் முருகேசன், தலைவர், தமிழ் பல்கலைக்கழக ஆசிரியர் பேரவை

மருதையன், ம.க.இ.கவின் மாநிலச் செயலாளர்

**கலைக்குழுவினரின் புரட்சிகர கலைநிகழ்ச்சி**




படிப்பகம்

www.padippakam.com

# பெரியாரை வீரமணியிடமிருந்து விடுதலை செய்வோம் வாரீர்!

இன துரோகத்தின் மொத்த உருவமான, மானங்கெட்ட வீரமணி கும்பலைப் பார்த்து, ''அரசியல், சித்தாந்தம், கொள்கை நடைமுறை ஆகியவற்றில் பார்ப்பனியத்துடன் எந்த வகையிலும் சமரசம் செய்து கொள்ளாததுடன் அரசின் ஒடுக்குமுறைக்கு ஆளாக்கப்படும் எங்கள் அமைப்பின் தலைமையையும், தமிழின உணர்வையும் சந்தேகிப்பதற்கு இப்படிப்பட்டவர்களுக்கு என்ன அருகதை இருக்கிறது'' என்று புதிய ஜனநாயகம் கேட்டிருந்தது.

அதற்கு, ''அரசின் அடக்குமுறைக்கு (தடா, என்.எஸ்.ஏ போன்ற தேசதுரோக வழக்கு மூலம் சிறையடைப்பு) ஆளாவதால் மட்டுமே ஒருவர் பார்ப்பனீயத்தின் 'எதிரி' என்றாகமாட்டார். அதனாலேயே அவர்கள் பார்ப்பனீயத்துடன் சமரசம் செய்து கொள்ளாதவர்கள் என்று பொருளாகிவிடாது'' (விடுதலை 10/1/94) என்கிறது வீரமணி கும்பல்.

ஏதோ ஒரு குற்றச்சாட்டுக்காக நமது தோழர்கள் மீது ''என்.எஸ்.ஏ'', ''தடா'', 124-ஏ போன்ற தேசதுரோக வழக்குப் போட்டு சிறையில் தள்ளப்படவில்லை. பார்ப்பன - பாசிச கும்பலின் காலை நக்கிப் பிழைக்கும் இந்த ''ஜென்மங்களுக்குப்'' புரிய வேண்டும் என்பதற்காக மீண்டும் ஒருமுறை அதன் விவரத்தைக் கூறுகிறோம்.

சட்டம் படித்த வீரமணிக்குத் தெரியுமா? 153-அ(ஆ) என்கிற குற்றப்பிரிவு பல்வேறு சாதி, வகுப்பு, மத, இனப் பிரிவுகளிடையே வெறுப்பையும் கலவரத்தையும் தூண்டும் குற்றத்திற்காகத் தண்டிப்பது. பார்ப்பன - பாசி ஜெயா ஆட்சிக்கு வந்த பிறகு நமது அமைப்புக்கெதிராக தமிழ்நாட்டின் பல்வேறு இடங்களிலும் போடப்பட்ட பல வழக்குகளும் இந்தக் குற்றப்பிரிவின் கீழ் இருந்தன. குறிப்பாக ''தடா'' 124-ஏ, ''என்.எஸ்.ஏ.'' வழக்குகளில் எல்லாம், ''ஈழ விடுதலையையும் ஈழப்போராளி அமைப்புகளின் நடவடிக்கைகளை ஆதரித்தும் இந்தியாவில் உள்ள சட்டபடியான அரசு மீது பற்றின்மையை உண்டாக்கும் வண்ணம் வெறுப்பை ஏற்படுத்திட பொது மக்கள் மத்தியில் பொய்யான கருத்துக்களைப் பிரச்சாரம் செய்தும் ஆட்சேபகரமான முழக்கங்களை ஆவேசமாக முழக்கியும் வேண்டுமென்றே செயல்பட்டு வருகின்றனர். ஈழப்போராளிகளுக்கு ஆதரவாக தமிழக மக்களின் உள்ளங்களை மாற்றி அமைக்கவும், தமிழ்நாட்டு மக்களைத் தூண்டி விடவும் முக்கிய நகரங்களில் எல்லாம் கூட்டங்கள் நடத்தி வருகின்றனர். தவிரவும் சமீப காலங்களில் பொது அமைதியைக் குலைக்கும் வகையில் பிராமண ஆதிக்கம் அதிகரித்து வருவதாகக் கூறி பல்வேறு மதத்தினர், மற்றும் இனத்தவர் இடையே உள்ள ஒற்றுமையைக் குலைக்கும் விதத்தில் இந்த ம.க.இ.க.வினர் வகுப்புகளுக்கிடையே வெறுப்பை வளர்க்க முயற்சித்து வருகின்றனர். இச்செயல்கள் பொது அமைதிக்கு பங்கம் விளைவிக்கக் கூடியவையாகும்''. (போலீசு அறிக்கைகளின் தொகுப்பு).

இந்தக் குற்றச்சாட்டுகளின் கீழ் கைது செய்யப்பட்ட நமது தோழர்கள், வீரமணிகளைப் போல் காலையில் கைது செய்யப்பட்டு மாலையில் ''மாலையும் கழுத்து''மாய் வெளிவருவதைப் போலவோ, சில நாட்களானாலும் ''ராஜ மரியாதை''யுடன் நடத்தப்படுவார்களே அதுபோலவோ அல்ல; கை, கால்கள் முறிக்கப்பட்டு பல நாட்கள் சித்திரவதைக்குள்ளானார்கள். அதே நாட்களில்தான் பார்ப்பன - பாசிச ஜெயா விட்டெறிந்த 5 லட்சம் ரூபாய் என்கிற எலும்புத் துண்டைக் கவ்விக் கொண்டு விசுவாசமாக வாலாட்டினார் வீரமணி. தன் தோலைக் காப்பாற்றிக் கொள்வதற்காக, ராஜீவ் காந்தியைக் கொன்றவர்கள் சி.ஐ.ஏ. அல்லது காங்கிரசு அல்லது இலங்கை உளவாளிகளாக இருப்பார்கள் என்று அவதூறு பரப்பினார்; புதிய ஜனநாயகம் - புதிய கலாச்சாரம் நிருபர்களாக இருப்பார்கள் என்று விடுதலைப் புலித் தலைவர் கிட்டு, தினமணிக்கு அளித்த பேட்டியை விடுதலையில் போட்டு ஆள்காட்டி வேலை செய்தார்.

இப்படி சிறை, சித்திரவதைக்கும் அஞ்சாது போராடுவது பார்ப்பனீயத்துடன் சமரசம் செய்து கொள்ளாதது ஆகாதாம்! அறக்கட்டளைகளின் பெயரால் அனுபவித்து வரும் சொத்து சுகங்களை இழந்துவிடக் கூடாது, மேலும் பெருக்கிக் கொள்ள வேண்டும் என்பதற்காக, பார்ப்பன - பாசிச ஜெயா ஆட்சியின் பாதந்தாங்கிகள் அப்படி கூறுகிறார்கள்!

''பார்ப்பனீயத்துடன் சமரசமற்ற போக்கு'' என்பதற்கு ஒரு பகுத்தறிவில்லாத, குருட்டுத்தனமான விளக்கமும் அளித்துள்ளார்கள். ''பார்ப்பனர்களும் - பார்ப்பனர்களின் பாதுகாப்பு நிறுவனமான சங்கர மடமும் 'எதை' ஆதரிக்கிறார்களோ 'அதை' எதிர்ப்பது, அவர்கள் 'எதை' எதிர்க்கிறார்களோ 'அதை' ஆதரிப்பது இதுவே பார்ப்பனீயத்துடன் சமசரமற்ற போக்கு ஆகும்''. (விடுதலை 10/1/94)

இந்த விளக்கத்துக்கு நேர்மாறாக இனத்துரோகி வீரமணி கும்பல் பார்ப்பனர்களுடனும், பார்ப்பனீயத்துடனும் சமரசம் செய்து கொண்டு வருவதற்கு ஏராளமான சான்றுகள் காட்ட முடியும். கருஞ்சட்டைப் படை தற்கொலைப்படையாக மாறி காவல் காக்கும் ஜெயலலிதா ஆட்சியை பார்ப்பனர்களும் சங்கரமடமும் ஆதரிக்கிறதா, எதிர்க்கிறதா? ''இது நம்மவா ஆட்சி'' என்று அவர்கள் ஆதரிப்பதை வீரமணி ஆதரிக்கிறாரே ஏன்?'' ''பாராட்ட வேண்டியதைப் பாராட்டுவதும், கண்டிக்க வேண்டியதை கண்டிப்பதும்தான் பெரியாரின் அணுகுமுறை'' என்று புது விளக்கம் தருகிறது. இப்படி இரண்டு விளக்கங்கள் வைத்துக் கொண்டு தனது பிழைப்புவாத, துரோகத்துக்கேற்ப பயன்படுத்துகிறது.

எம்.ஜி.ஆர். ஆட்சியைப் பார்ப்பனர்களின் பொற்காலம் என்று எழுதி வந்த வீரமணி கும்பல், திடீரென்று ஆதரித்ததே, பார்ப்பனர்களும் சங்கர மடமும் அதை எதிர்த்ததனாலா? இல்லை தனது அறக்கட்டளைகளுக்கான பதவி பறிக்கும் வழக்கை முடக்குவதற்காகவா? இப்படி அறக்கட்டளைகளையும் அவற்றின் மூலம் கல்வி நிலையங்களையும் வைத்து பகற் கொள்ளை அடிப்பதையே மிகப்பெரிய 'சமூகப் பணி'யாக வீரமணி கும்பல் கொண்டிருக்கிறதே அதைப் பார்ப்பனர்களும் பார்ப்பனீயமும் எதிர்ப்பதாலா? சமீபத்திய மயிலாப்பூர் இடைத்தேர்தலில் ஆளும் கட்சி பார்ப்பன வேட்பாளரை பார்ப்பனர்கள் முழுமூச்சாய் ஆதரித்தும் அவரை எதிர்க்காது, நடுநிலை வகிக்கிறோம் என்று கூறி மறைமுகமாக ஆதரித்தாரே வீரமணி, அது ஏன்? முன்னாள் உச்சநீதிமன்ற நீதிபதி ராமசாமியின் ஊழல் விவகாரத்தில் சுப்பிரமணிய சுவாமி, முன்னாள் உச்சநீதிமன்ற அரசு தலைமை வக்கீல் ஜி. ராமசாமி முதல் நரசிம்மராவ் வரை ஒரு பெரும் ஆளும் பார்ப்பன கும்பல் அவரை ஆதரித்தபோது, வீரமணி எதிர்த்தாரா? கருவறை நுழைவுப் போராட்டத்தை பார்ப்பனர்களும், அவர்களது நிறுவனங்களும் கடுமையாக எதிர்த்தபோது, அப்போராட்டத்தை ஆதரிக்காது, ''கண்டித்து'' அறிக்கை விட்டாரே வீரமணி, அது ஏன்?

இப்படி பார்ப்பனர்களுடனும், பார்ப்பனீயத்துடனும் தானே பலவாறு சமரசம் செய்து கொண்டு ''புதிய ஜனநாயகம்'' அவ்வாறு செய்வதாகப் பழி தூற்றுகிறது

> கன்சிராம், மண்டல் கமிசன் அறிக்கையை ஆதரிக்கவில்லை; இட ஒதுக்கீடு என்பதே ஒடுக்கப்படும் வெகுஜன சமூகத்தின் விடுதலைப் போராட்டத்தைத் திசைதிருப்பி மழுங்கடிப்பதற்கான ஏற்பாடு என்று கூறிவருகிறார். இதை எல்லாம் எதிர்க்கத் துணியாத வீரமணி கும்பல் ''புதிய ஜனநாயக''த்தின் மீது பாய்வதன் உள்நோக்கம் புரிந்து கொள்ளக் கூடியதே.



படிப்பகம்

வீரமணி கும்பல். இதற்கு ஏதோ பல சான்றுகள் இருப்பதைப் போல ''கடந்த கால வரலாற்றை முன்வைத்து ஆராய்வோம்'' என்று சொல்லி மண்டல் கமிசன் பற்றி நமது நிலைப்பாடு என்கிற ஒரே ஒரு உதாரணம் கொடுத்துள்ளது. அதிலும் நமது நிலைப்பாட்டைத் திரித்துச் சொல்லி, பார்ப்பனீயத்துடன் நாம் சமரசம் செய்து கொண்டதாகப் புளுகி இருக்கிறது. ''மண்டல் கமிசன் அறிக்கையைக் குறை கூறி எழுதி பார்ப்பன சார்பு போக்கை'' எடுத்தோம், சங்கராச்சாரி நிலைப்பாட்டிற்கும், புதிய ஜனநாயகத்தின் நிலைப்பாட்டிற்கும் இடையே வேற்றுமையே கிடையாது. அடிப்படையில் ஒற்றுமைதான் இருக்கிறது என்று முதலில் திரித்துச் சொல்லுகிறது, வீரமணி கும்பல். ஆனால் அடுத்த சில வரிகளிலேயே மண்டல் கமிசன் குறித்த தெளிவான நிலைப்பாடு எடுத்து ''அறிவு பூர்வமாக'' செயல்படாது நடுநிலைமை வகித்தோம், இதனால் பார்ப்பனர்களிடம் சமரசமாக நடந்து கொண்டோம் என்று முன்னுக்குப் பின் முரணாகவும் மேலும் திரித்தும் எழுதுகிறது.

ஆனால் மண்டல் கமிசன் விவகாரத்தில் நமது நிலைப்பாடு நடுநிலையானது அல்ல, அடிப்படையில் சங்கராச்சாரிகளின் நிலைப்பாட்டில் இருந்து மாறுபட்டது என்று மீண்டும் மீண்டும் நாம் தெளிவுபடுத்தியிருக்கிறோம். அதற்கு, பெரியாரின் பரம்பரை உரிமை கொண்டாடும் வீரமணிகளோ, பஞ்சத்துக்கு உரிமை கொண்டாடும் நெடுமாறன், மணியரசன் போன்ற திடீர் தமிழினவாதிகளோ எவருமே இதுவரை பதில் கூறவே கிடையாது. மீண்டும் நமது நிலைபாட்டை இங்கே வெளியிடுகிறோம் (பார்க்க பெட்டிச் செய்தி). அவர்கள் யாருக்காவது அரசியல் நேர்மை இருந்தால் பதில் கூறட்டும்.

''மண்டல் அறிக்கையைக் குறைகூறி எழுதி பார்ப்பனர் சார்பு போக்கை எடுத்தது'' என்பது பு.ஜ. மீது வீரமணி கும்பல் எழுதும் இன்னொரு குற்றச்சாட்டு. பார்ப்பன எதிர்ப்பைத் தூக்கிப் பிடித்து ஒடுக்கப்பட்ட மக்களின் ஆதரவைப் பெற வேண்டிய புரட்சிகர இயக்கமாக நாம் நடக்கவில்லை என்கிறது, அக்கும்பல். நமது அமைப்புக்கு எதிராக இப்படிப்பட்ட பலராலும் அவதூறும் ஆத்திரமும் தூண்டிவிடப்பட்ட போதும் நாம் நமது நிலைப்பாட்டை பகிரங்கமாகவும், துணிவோடும் முன்வைத்தோம். ஏனென்றால் சந்தர்ப்பவாதமாகப் பேசி ஆதாயம் அடையும் நோக்கம் ஒருபோதும் நம்மிடம் கிடையாது. ஆனால் மண்டலை ஆதரித்து வீராவேசம் காட்டிய அத்தனை ''புரட்சிகளும் முற்போக்குகளும்'' உண்மையில் அடிப்படையிலேயே அதன் பரிந்துரைக்கு எதிரான நிலைப்பாட்டையே வலியுறுத்தினார்கள். அதாவது சாதியை அடிப்படையாக வைத்து கல்வி ரீதியிலும் சமூக ரீதியிலும் பின்தங்கியவர்களே, . ஒடுக்கப்பட்டவர்களே பிற்படுத்தப்பட்டவர்கள் என்பதுதான் மண்டல் கமிசன் நிலைப்பாடு. ஆனால் மேற்படி புரட்சிகளும், முற்போக்குகளும் ஒருபுறம் மண்டலை வீராவேசமாக ஆதரித்துக் கொண்டே, மறுபுறம்,

## இடஒதுக்கீட்டில் பு.ஜ.-வின் நிலைப்பாடு குழப்பமுமில்லை; நடுநிலைமையுமில்லை

இடஒதுக்கீடு குறித்துப் பார்ப்பன மற்றும் பிற உயர்சாதி இந்துக்கள் மூன்று விதமான நிலைப்பாடு எடுக்கின்றனர். ஒன்று: இடஒதுக்கீடு என்பதே கூடாது. தகுதி, திறமை அடிப்படையிலேயே கல்வி, வேலை வாய்ப்புகள் தரவேண்டும் என்பது. இரண்டு: பொருளாதார ரீதியில் பின்தங்கியவர்களுக்கு மட்டுமே இடஒதுக்கீடு செய்து தரவேண்டும்; ஏனெனில், கல்வி மற்றும் சமூக உரிமை இப்போது கிடையாது என்பது. மூன்று: கல்வி மற்றும் சமூக ரீதியிலானவற்றோடு பொருளாதார ரீதியில் பின்தங்கியுள்ளதையும் அடிப்படையாக வைத்து இடஒதுக்கீடு செய்யவேண்டும் என்பது. இடஒதுக்கீடு - மண்டல் அறிக்கையின் தீவிர ஆதரவாளர்களாகக் காட்டிக் கொள்ளும் சில ''மார்க்சிய - லெனினியக் குழுக்கள்'' கூட இந்த மூன்றாவது நிலைப்பாட்டைத்தான் எடுத்துள்ளன. ஆனால் ''புதிய ஜனநாயகம்'' மேற்படி மூன்று நிலைப்பாடுகளை ஏற்கவில்லை; எதிர்த்து அம்பலப்படுத்தி வருகிறது.

சமூக ரீதியிலும், கல்வி ரீதியிலும் பின்தங்கியவர்களுக்கு இடஒதுக்கீடு என்பதுதான் அரசியல் சட்டத்தில் உள்ளது; இதுதான் சரியானது; இவ்விரு அடிப்படைகளில் எது ஒன்றையும் புறக்கணிக்கக் கூடாது என்பதுதான் திராவிடக் கட்சிகள், அவற்றின் சார்புடையவர்களது நிலைப்பாடு. இதைப் ''புதிய ஜனநாயகம்'' எதிர்க்கவில்லை. கல்வி மற்றும் சமூக ரீதியில் ஒடுக்கப்பட்டவர்கள் - உரிமை மறுக்கப்பட்டவர்கள்தான் இடஒதுக்கீடு கோரும் உரிமை உடையவர்கள் என்றே கூறிவந்திருக்கிறோம். இந்த விவகாரத்தில் திராவிடக் கட்சிகள் அவற்றின் சார்புடையவர்களுக்கும் ''புதிய ஜனநாயக''த்திற்கும் இடையிலான வேறுபாடு எந்தெந்த சாதிகள் சமூக ரீதியிலும் கல்வி ரீதியிலும் ஒடுக்கப்பட்டவைகள் - உரிமை மறுக்கப்பட்டவைகள், இதை எப்படித் தீர்மானிப்பது என்பதுதான்! அப்படி இருக்கும்போது பார்ப்பனர்களைப் போலவே குழப்புவதாகவும், 'புதிய ஜனநாயகம் என்பது புதிய பார்ப்பனியமே' என்று எழுதுவதும் வெறும் அவதூறும் பொய்யும் தான்!

எந்தெந்த சாதிகள் உண்மையில் சமூக ரீதியிலும் கல்வி ரீதியிலும் ஒடுக்கப்பட்டவை - உரிமை மறுக்கப்பட்டவை என்கிற நமது கேள்விக்குப் பதிலளிக்கவில்லை; பார்ப்பனரல்லாத உயர்சாதிகளை அப்படிக் கருத முடியாது என்கிற நமது நிலைப்பாட்டுக்குத் தகுந்த பதிலும் அளிக்கவில்லை. அதற்கு மாறாக அக்கேள்வி எழுப்புவதற்காகவே, பார்ப்பனரல்லாத உயர்சாதிகள் கூட இடஒதுக்கீட்டிற்குத் தகுதியற்றவை எனச் சொல்வதாலேயே பார்ப்பன முத்திரை குத்துவது ஏன்? இந்த நாட்டின் உண்மையான பிற்படுத்தப்பட்டவர்களான சூத்திர சாதிகளையும், தாழ்த்தப்பட்ட பழங்குடி மக்களையும் அடக்கி ஒடுக்கிச் சுரண்டுவதற்காக அவர்களின் கல்வி மற்றும் சமூக உரிமைகளை மறுப்பதில் பார்ப்பன சாதியோடு மற்றபிற பார்ப்பனரல்லாத உயர்சாதிகளும் கூட்டுசேர்ந்து இவ்வளவு காலமும் ஆதாயம் அடைந்து வந்தன. இப்போது இச்சாதிகள் பார்ப்பனரல்லாதோர் என்கிற முகாமுக்குள் புகுந்துகொண்டு ஆதாயம் அடையவதோடு, பார்ப்பனரோடு அதிகாரப் பதவிப் போட்டியில் இறங்கியுள்ளன. ஏதோ பார்ப்பனரல்லாதோர் அனைவருக்குமான வகுப்புரிமைப் போர் நடத்துவதாக ஏய்க்கின்றனர். இந்த உண்மையை மண்டல் மற்றும் சட்டநாதன் கமிசன்களின் ஆய்வறிக்கைகளது முடிவுகளே நிரூபிக்கின்றன....

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாகக் கல்வி மற்றும் சமூக உரிமை மறுக்கப்பட்டவர்கள் என்கிற முறையில் தாழ்த்தப்பட்ட பழங்குடி சாதிகளோடு சூத்திர சாதிகள்தாம் இடஒதுக்கீடு கோருவதற்காக உரிமை உடையவர்கள் என்பதே சரி. ஆனால் பார்ப்பனரல்லாத அனைத்து சாதிகளும் சூத்திர சாதிகள்தாம்; கல்வி மற்றும் சமூக உரிமை மறுக்கப்பட்டவைதாம்; தமிழ்நாட்டைப் பொறுத்தவரை பார்ப்பனர், சூத்திரர் ஆகிய இரண்டு வருணங்கள்தாம் இருந்தன என்று திராவிடக் கட்சிகளும் அதன் சார்புடையவர்களும் வாதிடுவது சரியா? உண்மையா? பார்ப்பனரல்லாத அனைத்துச் சாதிகளும் சூத்திர சாதிகள்தாம் என்றால் சத்திரிய மற்றும் வைசிய வருணங்களுக்கு ஒதுக்கப்பட்ட தொழில்களை இங்கே செய்து வந்தவர்கள் யார், யார்? இந்தத் தொழில்களைச் செய்து வந்தவர்களுக்கும் கல்வி மற்றும் சமூக உரிமைகள் மறுக்கப்பட்டனவா? இல்லை....

இடஒதுக்கீடு மூலம் கல்வி, அதிகார - பதவி வாய்ப்புகள் என்று வரும்போது மட்டும் இந்தப் பார்ப்பனரல்லாத உயர்சாதிகள் தாமும் கல்வி மற்றும் சமூக உரிமை மறுக்கப்பட்டவர்கள் என்று கூறிக் கொள்கின்றன. ஆனால் வெளியே சமுதாய அரசியல் வாழ்க்கையில் மற்றபிற சாதிகளை அடக்கி ஒடுக்கும் ஆண்டைகளுக்குரிய அதிகார உரிமை பெற்றவர்கள் என்கிற சமூகத் தகுதி பாராட்டுகின்றன. இதற்காகத் தாம் சத்திரிய, வைசிய குலங்களைச் சேர்ந்தவர்கள்; மிட்டாமிராசு, ஜமீன், குறுநில, அரச, பேரரச பாரம்பரியம் மிக்கவர்கள், பெரும் வணிகர் குல செல்வந்தர்கள் எனப் பார்ப்பனரல்லாத உயர்சாதிகள் கூறிக் கொள்வது வெற்றுப் பெருமை பீற்றல்களுக்கானதல்ல; தொடர்ந்து தமது சமூக ஒடுக்குமுறை ஆதிக்கத்தை நீட்டிப்பதற்காகத்தான்.

(1 - 15 மார்ச் '92, புதிய ஜனநாயகம், கேள்வி-பதில்)



படிப்பகம்

www.padippakam.com

''இடஒதுக்கீடு ஏற்பாட்டினால் உண்மையில் பிற்படுத்தப்பட்ட மக்கள் இதுவரை பலன் பெறவில்லை. பொருளாதார ரீதியில் முன்னேறிய வர்க்கங்களுக்கே பலன்கள் போய்ச் சேர்ந்தன. ஆகவே, பொருளாதார ரீதியில் - வர்க்க ரீதியில் பார்த்து, உண்மையில் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு இட ஒதுக்கீட்டின் பலன்கள் கிடைக்குமாறு செய்ய வேண்டும்'' என்று வாதாடினார்கள். இதன்மூலம் அடிப்படையில் மண்டல் கமிசன் பரிந்துரைகளை அவர்கள் நிராகரித்ததை வீரமணி போன்றவர்கள் கண்டு கொள்ளவில்லை. எப்படியோ அவர்கள் ஆதரவு கிட்டினால் போதும் என்று சந்தர்ப்பவாதமாக நடந்து கொண்டார்கள். அதே போல மண்டலை அமுலாக்கிய ''சமூக நீதிக் காவலன்'' என்று வீரமணி கும்பலால் போற்றப்படும் வி.பி. சிங்கை ''புல்தரையில் ஒளிந்து கொண்டிருக்கும் பாம்பு'' எனச் சொன்ன பகுஜன் சமாஜ் கட்சித் தலைவர் கன்ஷிராமின் நிலைப்பாடு என்ன? அவர் மண்டல் கமிசன் அறிக்கை யை ஆதரிக்க வில்லை; இட ஒதுக்கீடு என்பதே பட்டமான புளுகுதான். வீரமணியைத் தன் பக்கம் சேர்த்துக் கொண்டு ஜெயலலிதா அரசியல் விவேகத்துடன் நடந்து கொள்வதாகத்தான் அவர்கள் பாராட்டுகிறார்கள். அதேசமயம், வீரமணி கும்பல் நடத்துவது பெரியார் இயக்கமல்ல என்றும் அதன் துரோகத்தைத்தையும் ஜெயா - வீரமணி துதிபாடிகள் - எடுபிடிகள் தவிர பெரியாரியக் கொள்கையாளர்கள் அனைவரும் புதிய ஜனநாயகத்தோடு சேர்ந்து கொண்டு எதிர்த்து அம்பலப்படுத்தி வருகின்றனர். ஆத்திரத்தில் அவர்கள் அனைவர் மீதும் வீரமணி கும்பல் வசைமாறி பொழிகிறது. கருணாநிதி ''தாசி குலம் - தேவடியாள் பரம்பரை'', ''பொம்பளை பொறுக்கி'', ''ஊழல் பெருச்சாளி'' என்றும் இன்னும் கேவலமாகவும் வீரமணி கும்பல் பொதுக் கூட்டங்களில் பேசி வருகிறது; வீரமணியே இதை ஊக்குவிக்கிறார்.

''பார்ப்பனர்கள் ஊடுருவி அழித்த புத்த மதத்திலிருந்து - புதிய ஜனநாயகம் வரை'' என்று வீரமணி கும்பல் விரைவில் ஒரு வரலாற்றை எழுதாமல் இருக்க நம்மி பிரச்சினையில் பார்ப்பன சார்பு நிலை எடுத்தாலும் மற்ற விஷயங்களில் பார்ப்பன எதிர்ப்பாளர்களாக நடந்து கொள்ளும் பார்ப்பனர்கள் அதிகரித்து வருகிறார்கள்; அவர்களைச் சந்தேகத்துடன் பார்த்தாலும் பார்ப்பனிய எதிர்ப்பில் அவர்கள் ஆதரவை வேண்டாம் என்று ஒதுக்கியதில்லை; அதேபோலத்தான் ''மண்டல் பரிந்துரை பிரச்சினையில் புதிய ஜனநாயகம் பார்ப்பன சார்பு நிலை எடுத்திருந்தாலும். அவர்கள் நடத்திய 'கருவறை நுழைவுப்'ப் போராட்ட வடிவத்தோடு நமக்கு கருத்து வேறுபாடு இருந்தாலும் அப்போராட்ட முயற்சியை நாம் பாராட்டி இருக்கிறோம்'' என்கிறது வீரமணி கும்பல்.

முதலாவதாக, பார்ப்பன எதிர்ப்பு என்பது ஏதோ வீரமணி கும்பல் மொத்த குத்தகை எடுத்துக் கொண்டதுபோல அதில் மற்றவர்கள் ஆதரவை ஏற்பதும், ஒதுக்குவதும் இவர்கள் முடிவு செய்வதைப் போலவும் பேசும் வெட்கக் கேட்டைப் பாருங்கள்! மற்றவர்கள் யாரும் தமது பார்ப்பன எதிர்ப்பை ஒதுக்க வேண்டாம். ஏற்றுக்




**தி.க.வின் சுவரெழுத்து விளம்பரம்; கருவறை நுழைவுப் போராட்டம் வன்முறை என்றால் இது என்ன அஹிம்சையா?**

ஒடுக்கப்படும் வெகுஜன சமூகத்தின் விடுதலைப் போராட்டத் தைத் திசை திருப்பி மழுங்கடிப் பதற்கான ஏற்பாடு என்று கூறி வருகிறார். இதை எல்லாம் எதிர்க்கத் துணியாத வீரமணி கும்பல் ''புதிய ஜனநாயக''த்தின் மீது பாய்வதன் உள்நோக்கம் புரிந்து கொள்ளக் கூடியதே. அதன் துரோகத்தை நாம் தொடர்ந்து அம்பலப்படுத்தி வருவது தான்!

இதைப் பின்வருமாறு வீரமணி கும்பல் தனக்கே உரிய பாணியில் ஒப்புக் கொள்கிறது. ''இன்று பார்ப்பனர்களாலும், பார்ப்பன நிறுவனங்களாலும் கடுமையாக விமர்சிக்கப்படும் பெரியார் இயக்கத்தைப் பார்ப்பனர்களோடு சேர்ந்து கொண்டு புதிய ஜனநாயகம் கொச்சைப்படுத்தி வருகிறது'' எனப் புலம்புகிறது வீரமணி கும்பல்.

இந்து முன்னணி ராமகோபாலனுடன் சில சமயம் வீரமணி நாய்ச்சண்டையில் ஈடுபடுவது தவிர பார்ப்பனர்களும் பார்ப்பன நிறுவனங்களும் இவரது இயக்கத்தைக் கடுமையாக விமர்சிப்பதாக கூறுவது ஒரு அப்டம் எச்சரிக்கையாக இருக்க கடமைப்பட்டிருப்பதாக கூறிக் கொள்கிறது. இப்போது அப்படி அவதூறாக ஏதும் எழுதாதது போலவும், இனிமேல்தான் எழுதப் போவதாகவும் பசப்புகிறது, வீரமணி கும்பல். ஆனால் வீரமணி பெரியார் இயக்கத்துக்குள் புகுந்து, அதன் சொத்துக்களை அபகரித்துக் கொண்டு, அறக்கட்டளைகள் என்கிற பெயரில் ஒரு சுயநலக் கும்பல், மோசடிகள் நடத்தும் ''போகாச்சாரி மடமாக'' மாற்றிய வரலாறை நாகரசம்பட்டி சம்பந்தம் ஏற்கனவே எழுதிவிட்டார்; திருச்சி வெ. ஆனைமுத்து தொடர்ந்து எழுதி வருகிறார். திருவாரூர் தங்கராசு, திருச்சி செல்வேந்திரன், கோவை இராமகிருஷ்ணன் போன்றவர்கள் அதை அம்பலப்படுத்தி வருகின்றனர். பெரியார் இயக்க வரலாறு வீரமணி அதற்குள் ஊடுருவி அழித்ததை இறுதி அத்தியாயமாகக் கொண்டிருக்கும் என்பது உறுதியாகிவிட்டது.

இந்த இலட்சணத்தில் பின்வருமாறு வீரமணி கும்பல் எழுதுகிறது: இட ஒதுக்கீடு கொண்டு ஆசீர்வதியுங்கள் - அங்கீகாரச் சான்றிதழ்கள் கொடுங்கள் என்று இந்த 'போகாச்சாரி மடத்தின்' அதிபதியின் காலில் விழவில்லை.

இரண்டாவதாக, நமது கருவறை நுழைவுப் போராட்டத்தின் போராட்ட வடிவத்தோடு கருத்து வேறுபாடு இருந்தாலும், அம்முயற்சி யைப் பாராட்டி யிருப்பதாக புளுகுகிறது, வீரமணி கும்பல். உண்மையில் நடந்தோ வேறுதான்! நாம் கருவறை நுழைவுப் போராட் டத்தை அறி வித்து, பிரச்சாரம் சூடுபிடிக்கத் தொடங்கி யதும், பார்ப்பனீய ஆதார வாளர்கள் தவிர, பல்வேறு பிரிவினரிடம் இருந்தும், குறிப்பாக பகுத்தறிவு இளைஞர்களிடம் இருந்து ஆதரவு பெருகியது. இதனால் பீதியுற்ற வீரமணி திடீரென்று குலதர்ம ஒழிப்பு - காவிக் கொடி எரிப்புப் போராட்டத்தை அறிவித்து, தனது கட்சிப் பிரமுகர்களுக்கே கூடத் தகவல் தராது. பெயருக்கு ஒரு போராட்டம் என்று பெரியார் திடலுக்குள் நடத்தி முடித்தார். கருவறை நுழைவுப்



படிப்பகம்

www.padippakam.com

போராட்டத்தின் முதற்கட்டமாகத் தடையைமீறி ஆயிரக்கணக்கானோர் கைதாகிய பொதும், இரண்டாவதாக நமது அமைப்பினர் கருவறைக்குள் நுழைந்து, தாக்கப்பட்டு, கைதாகியபோதும் போராட்டத்தை ஆதரித்து விடுதலை எழுதியது உண்மைதான்.

ஆனால் இப்போராட்டத்திற்கு தமது அணிகளிடம் கண்ட தீவிர ஆதரவும், நெருக்கடி காரணமாகவும், தனது 'இனமானக் காவலன்' 'பகுத்தறிவு' ஆகிய தோற்றத்தைக் காட்டவும்தான் அப்படிச் செய்தது; அதுவும் வீரமணியின் ஒப்புதல் - உடன்பாடின்றி பத்திரிக்கையாளர்களே செய்தது தான் என்பது கருவறை நுழைவுப் போராட்டத்தைக் கண்டித்து வீரமணி அளித்த பேட்டியே இதை நிரூபித்துவிட்டது. இன உணர்விலும், பகுத்தறிவிலும் விலகி, பார்ப்பனீயத்துடன் சமரசம் செய்து கொண்டவர்கள் என்று வீரமணி கூறும் ''முரசொலி'' கொடுத்த அளவுகூட உறுதியான ஆதரவு ''விடுதலை'' தரவில்லை. பிறகு ராணி, தேவி, தந்தி, முரசு, தினகரன் போன்ற பார்ப்பனரல்லாத சந்தைப் பத்திரிக்கைகள் ஆதரவளித்த போதும் ''விடுதலை'' வாயை மூடிக் கொண்டது.

கருவறை நுழைவுப் போராட்டம் குறித்து அப்போது வீரமணி அளித்த நேர்காணல் பின்வருமாறு:

**''ஸ்ரீரங்கம் ரங்கநாதர் கோவிலில் ம.க.இ.க. இயக்கத்தை சேர்ந்தவர்கள் நடந்து கொண்ட சம்பவத்திற்கும் தி.க.விற்கும் எந்த சம்பந்தமும் இல்லை. அங்கு நடந்த வன்முறை சம்பவம் குறித்து தி.க. கண்டனம் தெரிவிக்கிறது.**

**வன்முறையில் ஈடுபடும் யாராக இருந்தாலும் அவர்களை திராவிடக் கழகம் கடுமையாக கண்டிக்கிறது. இது போன்று வன்முறை சம்பவங்களில் திராவிடக் கழகத்திற்கு உடன்பாடு இல்லை. இதைத்தான் தந்தை பெரியார் வலியுறுத்தி வந்தார்.'' (8-6-93, மாலை முரசு, திருச்சி பதிப்பு)**

மேலும் விடுதலை ஞாயிறு மலர் 11.7.93-ல் பின்வருமாறு எழுதுகிறார் வீரமணி:

**கேள்வி : கருவறை நுழைவுக் கிளர்ச்சிக்கும், அனைத்துச் சாதியினர் அர்ச்சகர் என்பதற்கும் உள்ள வேறுபாடு என்ன?**

— எம். சுருளிராஜ், போடி நாயக்கனூர்.

**பதில் : பார்ப்பன உயர்வு, மற்றவர் சூத்திரர், பஞ்சமர் தாழ்வு என்ற தத்துவத்தைப் போக்கவே அனைத்துச் சாதியினருக்கு அர்ச்சகர் உரிமை கேட்டார் அய்யா.**

**கருவறை நுழைவு வன்முறை திருட்டுக் குற்றம் இவைகளுக்கு வழிவகுக்கும் பக்தர்களை ஆத்திரமூட்டும்.**

**அனைத்து சாதியினர் அர்ச்சகர் என்பது வன்முறையின்றி, தத்துவ ரீதியாக பேதத்தைக் களையும். வெறுப்பை ஏற்படுத்தாது. கருவறை நுழைவு வீண் கலவரம், இன எதிரிகளைப் பலப்படுத்த உதவும். பக்தி வெறிபிடித்த பாமர மக்களை எதிரிகள் சுலபமாகத் தூண்டிவிட இடம் அளித்துவிடும். திட்டமிட்ட அறிவுப் புரட்சி ஏற்படுவதே நிலையானது. நீண்ட கால பயனுள்ளது! நிலப்பறி நடவடிக்கைக்கும் நிலச்சீர்திருத்த சட்டப் புரட்சிக்கும் உள்ள வேறுபாடு.''**

வீரமணியின் இந்த நேர்காணல் கருவறை நுழைவுப் போராட்டத்துக்கு எதிராக பார்ப்பனர்கள் என்ன அவதூறு பேசினார்களோ அதன் மறு பதிப்புத்தான் என்பதை மறுக்க முடியாது. இது நமது போராட்ட வடிவத்துக்கு எதிரானது மட்டுமல்ல பச்சையான துரோகமாகும். நமது தோழர்கள் கருவறையில் நுழைந்தபோது, அங்கு கோவில் ஊழியர்கள் என்ற பெயரில் இருந்த, பிறகு ''பக்தர்கள்'' என்ற பெயரில் வெளியில் இருந்து கொண்டு வந்த ஆர்.எஸ்.எஸ். பார்ப்பன குண்டர்களால் தாக்கப்பட்டு படுகாய முற்றனர். வன்முறை வழிக்கு நாம் போகவில்லை. அப்படி போவது என்று நமது இயக்கம் தீர்மானித்தால் எதற்கும் துணிந்து எப்படிச் செய்வோம் என்பது வீரமணி கும்பலுக்குத் தெரியும். வன்முறையில் ஈடுபடுவது என்றால் நிராயுதபாணிகளாக பெண்கள் - சிறுவர்களுடன் போவோமா என்பது அதன் பகுத்தறிவுக்கு எட்டவில்லை.

வீரமணியைத் தன் பக்கம் சேர்த்துக் கொண்டு ஜெயலலிதா அரசியல் விவேகத்துடன் நடந்து கொள்வதாகத்தான் பார்ப்பன அமைபபுகள் பாராட்டுகின்றன. அதேசமயம், வீரமணி கும்பல் நடத்துவது பெரியார் இயக்கமல்ல என்றும் அதன் துரோகத்தனத்தையும் பெரியாரியக் கொள்கையாளர்கள் அனைவரும்தான் புதிய ஜனநாயத்தோடு சேர்ந்து கொண்டு எதிர்த்து அம்பலப்படுத்தி வருகின்றனர்.

நமது தோழர்கள் மீது கொலை முயற்சி, அத்துமீறி நுழைதல், சட்ட விரோதமாகக் கூடுதல் ஆகிய வழக்குகள் தொகுக்கப்பட்டதைக் குறிப்பிட்டு விட்டு, ''சாஸ்திரத்துக்கு எதிராக - அத்துமீறி செயல்பட்டார்கள் என்று வேண்டுமானால், வழக்கு பதிவு செய்யட்டும்! அதற்காக கொலை முயற்சி வழக்குப் போடுவது என்ன நியாயம்? கோவிலுக்குள் கூடுவதே சட்டவிரோதம் என்கிறார்களா? பார்ப்பன ஏடுகளே - கோயில் கர்ப்பகிரகத்துக்குள் வந்தவர்களே, அர்ச்சகப் பார்ப்பனர்கள் தடுத்துத் தாக்கியதாக, செய்திகள் வெளியிட்டிருக்கின்றன! கர்ப்பகிரகத்துக்குள் வருகிறவர்களைத் தாக்கக் கூடிய உரிமையைப் பார்ப்பன அர்ச்சகர்களுக்கு யார் கொடுத்தது? இந்தக் காலித்தனத்தைச் செய்த அந்த பார்ப்பனர்கள் மீது ஏன் வழக்கு வரவில்லை?'' (26/5/93). விடுதலை அப்போது தலையங்கம் எழுதியது. வன்முறையில் ஈடுபட்ட பார்ப்பனர்களுக்கு நிவாரண நிதியும் அளிக்கப்பட்டது. இதெல்லாம் வீரமணி கும்பலுக்குத் தெரியும். இருந்தும் பார்ப்பனத் தரப்புக்குக் காட்டிக் கொடுக்கும் துரோகத்தனமான முறையில் நாம் வன்முறை வழியை மேற்கொண்டதாக வீரமணி புளுகினார். இப்போது விடுதலை ''அசுரனும்'' அதே வழியில் ''கருவறை நுழைவுப் போராட்ட வடிவத்தோடு கருத்துமாறுபாடு இருந்தாலும்'' என்று எழுதுகிறார். நாம் வன்முறையில் ஈடுபடவில்லை என்பதோடு, இப்போது காந்தியவாதிகளாக மாறிவிட்ட வீரமணி கும்பலிடம் கேட்கிறோம், அவர்கள் பூணூலை அறுப்பதும், இட ஒதுக்கீட்டில் கைவைத்தால் ரத்த ஆறு ஓடும் என்பதும் வன்முறை இல்லையா?

போராட்ட வடிவத்தில் மட்டுமில்லை, கருவறை நுழைவுப் போர்ராட்டமே தேவையில்லை, தவறானது என்பதுதான் உண்மையில் வீரமணியின் வாதம். இதை அவரது நேர்காணலிலேயே குறிப்பிடுகிறார், ''வேதாகமக் கல்லூரி திறந்து, பார்ப்பனர் அல்லாதோருக்கு இட ஒதுக்கீடு செய்து, அர்ச்சகர்களாக்கும் ஜெயலலிதா திட்டத்தின் மூலமாகவே அந்த உரிமை பெற்றுவிடலாம்'' என்று வீரமணி கூறுகிறார். (அதற்கான உத்திரவு போட்டு செயல்பட்டுக் கொண்டிருக்கிறார் என்பதாகவேறு சமீபத்திய குமுதம், துக்ளக் நேர்காணலில் வீரமணி புளுகியுள்ளார். வாக்களித்தபடி அப்படி செய்ய வேண்டிவரும் என்பதால் அத்திட்டத்தையே ஜெயா கிடப்பில் போட்டுவிட்டார், தனியார் மடப் பள்ளிகளையே அதற்குப் பயன்படுத்துகிறார் என்பதுதான் உண்மை) கருணாநிதி ஏற்கனவே கொண்டு வந்த அனைத்து சாதியினரையும் அர்ச்சகராக்கும் சட்டம் உச்சநீதி மன்றம் வரைபோய் தடுக்கப்பட்டுள்ளதை அறிந்தும் ஜெயலலிதா வாக்களித்துள்ள திட்டப்படி கருவறை நுழைவு உரிமை கிடைக்கும் என்று வீரமணி பேசிவருவது மனமறிந்து செய்யும் பித்தலாட்டமல்லவா? அதே விடுதலை தலையங்கம் எழுதியது; ''நான் 'சூத்திரனாக' இருக்கமாட்டேன் என்றால் - அப்படியானால், 'நீ கொலைகாரன்' என்று ஒரு நாட்டின் சட்டம் கூறும் என்றால், இந்த சட்டங்களைக் கழிவறைக் காகிதங்களாகத் தானே மானமுள்ள எவனும் கருதுவான்?'' (விடுதலை 29.5.93). சரிதான்! இதையே வீரமணிக்குப் பொருத்திப் பாருங்கள். நம்மை வன்முறையாளன் - கொலைகாரன் என்று பார்ப்பனர்களோடு சேர்ந்து அவதூறு செய்ததோடு கழிவறைக் காகிதங்களாகக் கருத வேண்டிய சட்டங்கள் ஜெயலலிதா திட்டத்தால் புனிதமாகி விடும் என்று கூறிவரும் வீரமணியை இனிமேலும் மானமுள்ளவராகக் கருத முடியுமா?

**(தொடரும்)**



படிப்பகம்

www.padippakam.com

# ஆபாசத்தை எதிர்த்து ஆர்ப்பாட்டம்

இதிகாச காலத்திலிருந்து இன்றைய நவ நாகரீக காலம் வரை பெண்கள் ஒரு போகப் பொருளாகவே பாவிக்கப்பட்டும் சித்தரிக்கப்பட்டும் வருகிறார்கள். அன்றைக்கு சிற்பங்களும் இலக்கியங்களும் இச்சித்தரிப்பை செய்தன என்றால் இன்று பிரதானமாக பத்திரிகைகளும் திரைப்படங்களும் விளம்பரங்களும் செய்கின்றன. அதுவும் வலிமை மிகுந்த சாதனமான திரைப்படத்தால் திணிக்கப்படும் ஆபாசம் இளைய தலைமுறையை எளிதாக சீரழித்து வருகிறது. திருச்சி, தில்லை நகர் முல்லை திரையரங்கு (இங்கு மலையாள, ஆங்கில ஆபாசப்படங்களே போடப்படுகின்றன)

முன்பு ஆபாசத்திற்கு எதிராக 30.6.94 அன்று பெண்கள் விடுதலை முன்னணியினர் ஊர்வலமாக திரண்டு வந்து ஆர்ப்பாட்டம் நடத்தினர். மாலா தலைமை தாங்க வாணி உரை நிகழ்த்தினார். முல்லை திரையரங்கில் ஆபாச படங்கள் மீண்டும் திரையிடப்படுமானால் தொடர்ந்து போராடுவோம் என்றும் இம்முன்னணியினர் அறிவித்துள்ளனர். வணிக நிறுவனங்களில் உள்ள ஆபாச படங்களையும் தார்பூசி அழிக்க முன்வருமாறு பெண்களுக்கு அறைகூவல் விடுத்துள்ளனர். ஊர்வல முழக்கத்தை - பிரச்சாரத்தைக் கேட்ட பெண்கள் பலர் முன் வந்து பாராட்டி ஆதரவு தெரிவித்தனர்.




— பெ.வி.மு., திருச்சி.

# என். எல். சி. தொழிலாளர்கள் மீது கொலை வெறித் தாக்குதல்

ஆசியாவிலேயே மிகப் பெரிய அனல்மின் நிலையம் என்று பீற்றிக் கொள்ளப்படும் நெய்வேலி நிலக்கரி நிறுவனத்தில் (NLC) 21.7.94 அன்று பணி நீக்கத்திற்கு எதிராகப் போராடிய தொழிலாளர்கள் மீது காட்டு மிராண்டித்தனமாக தாக்குதல் நடத்தப்பட்டது. ஒரு மாதத்திற்கு முன்பாக இரண்டாம் அனல் மின் நிலையத் தொழிலாளர்கள் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி ரிச்சர்டு பால் (DCPM) என்ற அதிகாரியை "கெரோ" செய்து போராடினார். இதில் முன்னணியாக இருந்த உணவக இயக்குனர் சந்திரசேகர், சுதாகன், ராசேந்திரன் உள்ளிட்ட நால்வரை நிர்வாகம் தற்காலிக வேலை நீக்கம் செய்தது. இதற்கெதிராக தொழிலாளர்கள் தன்னெழுச்சியாக நிர்வாக அலுவலகம் முன் திரண்டு விட்டபின் தொழிற்சங்கங்கள் ஓடிவந்து தலைமை கொடுத்தன. பார்ப்பன அதிகாரி தேசிகன் (CGM) போராடியவர்கள் மீது மத்திய தொழிலகப் பாதுகாப்பு படை (CISF) யை ஏவி விட்டான். பணியில் இல்லாத 150 CISF படையினரை வைத்து தொடுக்கப் பட்ட வெறித் தாக்குதலில் 200 தொழிலாளர்கள் காயமடைந்தனர். படையினர் குடித்து விட்டு வந்து கண் மண் தெரியாமல் அடித்ததில் பரமசிவம், சௌந்திரராஜன் ஆகிய ஒப்பந்த தொழிலாளர்களுக்கு கண்கள் பிதுங்கி வெளியே விழுந்தன. ராஜா என்பவருக்கு கோரமாக மண்டை உடைந்து 12 தையல்கள் போடப்பட்டன. காயம்பட்டவர்களில் 80 பேர் மட்டுமே மருத்துவமனையில் சேர்ந்தனர். பலர் 'மருத்துவமனையில் சேர்ந்து' பெயர் பதிவானால் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்படுவோம் என பயந்து தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றும் வெளியே சொல்லாமலும் உள்ளனர். இதுவல்லாமல் மாலை வெளியே வந்த தொழிலாளர்களை கிரிமினல் குற்றவாளிகளைப் போல் கைகளை மேலே தூக்கச் சொல்லி அவமானப்படுத்தியது பாதுகாப்பு படை. இச்செய்தி பரவியதும் நெய்வேலி முழுக்க தொழிலாளர்கள் தன்னெழுச்சியாகப் போராடவே உற்பத்தி அனைத்தும் நின்று போனது.

இப்போராட்டத்தில் அ.தொ.ஊ.ச., ஹெச்.எம்.எஸ்., தொ.மு.ச., ஐ.என்.டி.யு.சி., டி.என்.டி.யு.சி போன்ற அங்கீகரிக்கப்பட்ட தொழிற் சங்கங்கள் சமரசம் காணவே முயலுகின்றன. சி.ஐ.டி.யு., பி.எம்.எஸ்., ஹெச்.எம்.எஸ்ஸில் ஒரு பிரிவு, 'சுசி' அமைப்பின் தொழிற்சங்கம், பாட்டாளி தொழிற்சங்கம் போன்றவை நிர்வாகத்திற்கு எதிராகப் போராடுவதாக நடாகமாடுகின்றன. வேலை நிறுத்தம் போன்ற வீச்சான போரட்டத்தை முன்னெடுக்கத் தயங்குகின்றன. அதுவும் நிர்வாகத்தின் அங்கீகாரம் ரத்தாகி விடுமோ என்ற அச்சத்தில் சி.ஐ.டி.யு., பிற சங்கங்களையும் கூட்டு கவுன்சிலையும் போராடக் கோரி தப்பித்துக் கொள்கிறது.


மின் உற்பத்தி நிலையங்களை வாங்க 12 அமெரிக்க பகாசுர கம்பெனிகள் தயாராக காத்திருக்கும் நிலையில், அரசின் தனியார் மயமாக்கல் கொள்கைக்கு பாதுகாப்பாக தொழிலாளர்களின் போராட்டங்களையும் வர்க்க உணர்வுகளையும் நசுக்குவதற்காக கொடிய சட்டங்களும் (TADA, NSA, ESMA) ஆயுதப் படைகளும் நிர்வாகத்தால் ஏவிவிடப்படுகின்றன. CISF படை, நெய்வேலியில் அறிமுகப்படுத்தப்பட்டு இருமாதமே ஆகிறது. அதற்குள் பொதுமக்கள் மீது தாக்குதல், மிரட்டல், கற்பழிப்பு என ஆட்டம் போடும் இப்படையை நெய்வேலி முழுக்க விரிவுபடுத்தப் போவதாக கூறுகிறார்கள். தொழிலாளர்களுக்காக நெய்வேலியில் துரோக மற்றும் சமரசவாத தொழிற்சங்கங்களே உள்ளன. தொழிலாளர்கள் கையாலாகாத இத்தொழிற் சங்கங்களைப் புறக்கணித்து விட்டு புரட்சிகர சங்கத்தை உருவாக்கி இத்தகைய அடக்குமுறைகளுக்கு எதிராகப் போராட வேண்டும். புரட்சிகர அரசியல், அமைப்பு, இயக்க வழி முறைகளில்தான் தொழிலாளர்களின் நிரந்தர பாதுகாப்பு - விடுதலை உள்ளது.

..... தகவல்: தொழிலாளர் பிரச்சாரக் குழு, நெய்வேலி

*Published and owned by A.SHANMUGARAJ, 4, Samiyar Thottam, Alandur Road, Saidapet, Madras - 600 015*
*Printed by him at EZHIL PAINTS, 321, Arcot Road, Madras - 600 024, Editor: A.SHANMUGARAAJ*

படிப்பகம்

www.padippakam.com



அடிமட்ட தொழிலாளர்களின் குடியிருப்புகளுக்கு வெள்ளமும் நெருப்பும் மட்டுமல்ல; அதிகார வர்க்கத்தினரும் எதிரிகள்தான். இதோ பத்து வருடங்களாக அடையாறு ஆறு ஓரம் குடியிருந்த சைதாப்பேட்டை சலவைத் தொழிலாளர்கள் குடும்பங்களை ஒரே நொடியில் போலீசின் துணையோடு வீதிக்கு விரட்டியடித்து விட்டது சென்னை மாநகராட்சி. முன்னறிவிப்பு ஏதுமில்லை; வாடகை தருகிறோம் எனக் காலில் விழாத குறையாகக் கெஞ்சியும் அதிகாரிகளின் காதுகளில் ஏறவில்லை; பெண்டு பிள்ளைகளோடு எங்கே போவார்கள் என்ற இரக்கமும் அவர்களுக்கில்லை. வீட்டை விட்டு துரத்தியடித்தது. அத்தொழிலாளர்கள் பார்த்து வந்த வேலையைப் பறித்து வயிற்றிலடித்ததற்குச் சமம். சட்டத்திற்கு புறம்பாக் குடியிருந்தார்கள் என அவமானப்படுத்தி, தங்கள் 'கடமை' தவறாமையை நியாயப்படுத்தினார்கள் அதிகாரிகள்.

# இதுதான் இன்றைய இந்தியா



இதோ நடைபாதையில் தெரியும் கொடிக்கம்பத்தையும் அதை ஒட்டிய சிறிய கட்டிடத்தையும் பார்த்தவுடனேயே புரிந்து கொள்ளலாம், அப்பட்டமான ஆக்கிரமிப்பு இதுவென்று. சென்னை - அயனாவரம் தொகுதி காங். எம்.எல்.ஏ. ரெங்கநாதனின் திருவிளையாடல் இது. "ஆஸ்பெஸ்டாஸ்" கூரை மின்சார இணைப்பு என்ற வசதிகளோடு இருக்கும் இக்கட்டிடம் தான் மூன்றாண்டுகளாக அவரது சொந்த அலுவலகம். எதிரிலேயே மாநகராட்சி அலுவலகம் இருந்தும், சட்டம் ஆமை வேகத்தில்கூட நகரவில்லை. அதிகாரிகளிடம் கேட்டால் மழுப்பல் தான் பதில்.

பிழைப்புத் தேடி பட்டணம் வந்து வெட்ட வெளியிலும் எலி வலை போன்ற குடிசையினுள்ளும் காலந் தள்ளுகிறார்கள் உழைக்கும் மக்கள். அதனை 'ஆக்கரமிப்பு' என சட்டம் பேசும் அதிகார வர்க்கம், மறுபுறம் பசையுள்ள பணக்கார கும்பலும் அதிகாரத்தில் உள்ளோரும் பொது இடங்களை வளைத்துப் போடுவதற்கு பல்லிளித்து சலாம் போடுகிறது. உழைப்புக்கான இடத்தில் குடியிருக்கும் உரிமையைக் காலில் போட்டு மிதிப்பதோடு, மாற்று ஏற்பாடு செய்து தராத அரசின் இந்த அநீதிக்கு நாம் தக்க பதிலுரைப்பது எப்போது?

படிப்பகம்

www.padippakam.com

# ஆபாசத்தை எதிர்த்து ஆர்ப்பாட்டம்

இதிகாச காலத்திலிருந்து இன்றைய நவ நாகரீக காலம் வரை பெண்கள் ஒரு போகப் பொருளாகவே பாவிக்கப்பட்டும் சித்தரிக்கப்பட்டும் வருகிறார்கள். அன்றைக்கு சிற்பங்களும் இலக்கியங்களும் இச்சித்தரிப்பை செய்தன என்றால் இன்று பிரதானமாக பத்திரிகைகளும் திரைப்படங்களும் விளம்பரங்களும் செய்கின்றன. அதுவும் வலிமை மிகுந்த சாதனமான திரைப்படத்தால் திணிக்கப்படும் ஆபாசம் இளைய தலைமுறையை எளிதாக சீரழித்து வருகிறது. திருச்சி, தில்லை நகர் முல்லை திரையரங்கு (இங்கு மலையாள, ஆங்கில ஆபாசப்படங்களே போடப்படுகின்றன) முன்பு ஆபாசத்திற்கு எதிராக 30.6.94 அன்று பெண்கள் விடுதலை முன்னணியினர் ஊர்வலமாக திரண்டு வந்து ஆர்ப்பாட்டம் நடத்தினர். மாலா தலைமை தாங்க வாணி உரை நிகழ்த்தினார். முல்லை திரையரங்கில் ஆபாச படங்கள் மீண்டும் திரையிடப்படுமானால் தொடர்ந்து போராடுவோம் என்றும் இம்முன்னணியினர் அறிவித்துள்ளனர். வணிக நிறுவனங்களில் உள்ள ஆபாச படங்களையும் தார்பூசி அழிக்க முன்வருமாறு பெண்களுக்கு அறைகூவல் விடுத்துள்ளனர். ஊர்வல முழக்கத்தை - பிரச்சாரத்தைக் கேட்ட பெண்கள் பலர் முன் வந்து பாராட்டி ஆதரவு தெரிவித்தனர்.




— பெ.வி.மு., திருச்சி.

# என். எல். சி. தொழிலாளர்கள் மீது கொலை வெறித் தாக்குதல்

ஆசியாவிலேயே மிகப் பெரிய அனல்மின் நிலையம் என்று பீற்றிக் கொள்ளப்படும் நெய்வேலி நிலக்கரி நிறுவனத்தில் (NLC) 21.7.94 அன்று பணி நீக்கத்திற்கு எதிராகப் போராடிய தொழிலாளர்கள் மீது காட்டு மிராண்டித்தனமாக தாக்குதல் நடத்தப்பட்டது. ஒரு மாதத்திற்கு முன்பாக இரண்டாம் அனல் மின் நிலையத் தொழிலாளர்கள் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி ரிச்சர்டு பால் (DCPM) என்ற அதிகாரியை "கெரோ" செய்து போராடினார். இதில் முன்னணியாக இருந்த உணவக இயக்குனர் சந்திரசேகர், சுதாகன், ராசேந்திரன் உள்ளிட்ட நால்வரை நிர்வாகம் தற்காலிக வேலை நீக்கம் செய்தது. இதற்கெதிராக தொழிலாளர்கள் தன்னெழுச்சியாக நிர்வாக அலுவலகம் முன் திரண்டு விட்டபின் தொழிற்சங்கங்கள் ஓடிவந்து தலைமை கொடுத்தன. பார்ப்பன அதிகாரி தேசிகன் (CGM) போராடியவர்கள் மீது மத்திய தொழிலகப் பாதுகாப்பு படை (CISF) யை ஏவி விட்டான். பணியில் இல்லாத 150 CISF படையினரை வைத்து தொடுக்கப்பட்ட வெறித் தாக்குதலில் 200 தொழிலாளர்கள் காயமடைந்தனர். படையினர் குடித்து விட்டு வந்து கண் மண் தெரியாமல் அடித்ததில் பரமசிவம், சௌந்திரராஜன் ஆகிய ஒப்பந்த தொழிலாளர்களுக்கு கண்கள் பிதுங்கி வெளியே விழுந்தன. ராஜா என்பவருக்கு கோரமாக மண்டை உடைந்து 12 தையல்கள் போடப்பட்டன. காயம்பட்டவர்களில் 60 பேர் மட்டுமே மருத்துவமனையில் சேர்ந்தனர். பலர் 'மருத்துவமனையில் சேர்ந்து' பெயர் பதிவானால் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்படுவோம் என பயந்து தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றும் வெளியே சொல்லாமலும் உள்ளனர். இதுவல்லாமல் மாலை வெளியே வந்த தொழிலாளர்களை கிரிமினல் குற்றவாளிகளைப் போல் கையை மேலே தூக்கச் சொல்லி அவமானப்படுத்தியது பாதுகாப்பு படை. இச்செய்தி பரவியதும் நெய்வேலி முழுக்க தொழிலாளர்கள் தன்னெழுச்சியாகப் போராடவே உற்பத்தி அனைத்தும் நின்று போனது.

இப்போராட்டத்தில் அ.தொ.ஊ.ச., ஹெச்.எம்.எஸ்., தொ.மு.ச., ஐ.என்.டி.யு.சி., டி.என்.டி.யு.சி போன்ற அங்கீகரிக்கப்பட்ட தொழிற்சங்கங்கள் சமரசம் காணவே முயலுகின்றன. சி.ஐ.டி.யு., பி.எம்.எஸ்., ஹெச்.எம்.எஸ்ஸில் ஒரு பிரிவு, 'சுசி' அமைப்பின் தொழிற்சங்கம், பாட்டாளி தொழிற்சங்கம் போன்றவை நிர்வாகத்திற்கு எதிராகப் போராடுவதாக நடாகமாடுகின்றன. வேலை நிறுத்தம் போன்ற வீச்சான போராட்டத்தை முன்னெடுக்கத் தயங்குகின்றன. அதுவும் நிர்வாகத்தின் அங்கீகாரம் ரத்தாகி விடுமோ என்ற அச்சத்தில் சி.ஐ.டி.யு., பிற சங்கங்களையும் கூட்டு கவுன்சிலையும் போராடக் கோரி தப்பித்துக் கொள்கிறது.

மின் உற்பத்தி நிலையங்களை வாங்க 12 அமெரிக்க பகாசுர கம்பெனிகள் தயாராக காத்திருக்கும் நிலையில், அரசின் தனியார் மயமாக்கல் கொள்கைக்கு பாதுகாப்பாக தொழிலாளர்களின் போராட்டங்களையும் வர்க்க உணர்வுகளையும் நசுக்குவதற்காக கொடிய சட்டங்களும் (TADA, NSA, ESMA) ஆயுதப் படைகளும் நிர்வாகத்தால் ஏவிவிடப்படுகின்றன. CISF படை நெய்வேலியில் அறிமுகப்படுத்தப்பட்டு இருமாதமே ஆகிறது. அதற்குள் பொதுமக்கள் மீது தாக்குதல், மிரட்டல், கற்பழிப்பு என ஆட்டம் போடும் இப்படையை நெய்வேலி முழுக்க விரிவுபடுத்தப் போவதாக கூறுகிறார்கள். தொழிலாளர்களுக்காக நெய்வேலியில் துரோக மற்றும் சமரசவாத தொழிற்சங்கங்களே உள்ளன. தொழிலாளர்கள் கையாலாகாத இத்தொழிற்சங்கங்களைப் புறக்கணித்து விட்டு புரட்சிகர சங்கத்தை உருவாக்கி இத்தகைய அடக்குமுறைகளுக்கு எதிராகப் போராட வேண்டும். புரட்சிகர அரசியல், அமைப்பு, இயக்க வழி முறைகளில்தான் தொழிலாளர்களின் நிரந்தர பாதுகாப்பு - விடுதலை உள்ளது.


— தகவல்: தொழிலாளர் பிரச்சாரக் குழு, நெய்வேலி

*Published and owned by R.SHANMUGARAJ, 4, Samiyar Thottam, Alandur Road, Saidapet, Madras - 600 015*
*Printed by him at EZHIL PRINTS, 321, Arcot Road, Madras - 600 024, Editor: R.SHANMUGARAJ*

படிப்பகம்

www.padippakam.com

PUTHIYA JANANAYAGAM R.N. 42648/85 Regd.No. TN/MS(S) 622



அடிமட்ட தொழிலாளர்களின் குடியிருப்புகளுக்கு வெள்ளமும் நெருப்பும் மட்டுமல்ல; அதிகார வர்க்கத்தினரும் எதிரிகள்தான். இதோ பத்து வருடங்களாக அடையாறு ஆறு ஓரம் குடியிருந்த சைதாப்பேட்டை சலவைத் தொழிலாளர்கள் குடும்பங்களை ஒரே நொடியில் போலீசின் துணையோடு வீதிக்கு விரட்டியடித்து விட்டது சென்னை மாநகராட்சி. முன்னறிவிப்பு ஏதுமில்லை; வாடகை தருகிறோம் எனக் காலில் விழாத குறையாகக் கெஞ்சியும் அதிகாரிகளின் காதுகளில் ஏறவில்லை; பெண்டு பிள்ளைகளோடு எங்கே போவார்கள் என்ற இரக்கமும் அவர்களுக்கில்லை. வீட்டை விட்டு துரத்தியடித்தது, அத்தொழிலாளர்கள் பார்த்து வந்த வேலையைப் பறித்து வயிற்றிலடித்ததற்குச் சமம். சட்டத்திற்கு புறம்பாகக் குடியிருந்தார்கள் என அவமானப்படுத்தி, தங்கள் 'கடமை' தவறாமையை நியாயப்படுத்தினார்கள் அதிகாரிகள்.

# இதுதான் இன்றைய இந்தியா



இதோ நடைபாதையில் தெரியும் கொடிக்கம்பத்தையும் அதை ஒட்டிய சிறிய கட்டிடத்தையும் பார்த்தவுடனேயே புரிந்து கொள்ளலாம், அப்பட்டமான ஆக்கிரமிப்பு இதுவென்று. சென்னை - அயனாவரம் தொகுதி காங். எம்.எல்.ஏ. ரெங்கநாதனின் திருவிளையாடல் இது. "ஆஸ்பெஸ்டாஸ்" கூரை மின்சார இணைப்பு என்ற வசதிகளோடு இருக்கும் இக்கட்டிடம் தான் மூன்றாண்டுகளாக அவரது சொந்த அலுவலகம். எதிரிலேயே மாநகராட்சி அலுவலகம் இருந்தும், சட்டம் ஆமை வேகத்தில்கூட நகரவில்லை. அதிகாரிகளிடம் கேட்டால் மழுப்பல் தான் பதில்.

பிழைப்புத் தேடி பட்டணம் வந்து வெட்ட வெளியிலும் எலி வலை போன்ற குடிசையினுள்ளும் காலந் தள்ளுகிறார்கள் உழைக்கும் மக்கள். அதனை 'ஆக்கரமிப்பு' என சட்டம் பேசும் அதிகார வர்க்கம், மறுபுறம் பசையுள்ள பணக்கார கும்பலும் அதிகாரத்தில் உள்ளோரும் பொது இடங்களை வளைத்துப் போடுவதற்கு பல்லிளித்து சலாம் போடுகிறது. உழைப்புக்கான இடத்தில் குடியிருக்கும் உரிமையைக் காலில் போட்டு மிதிப்பதோடு, மாற்று ஏற்பாடு செய்து தராத அரசின் இந்த அநீதிக்கு நாம் தக்க பதிலுரைப்பது எப்போது?

படிப்பகம்